
ஏ.வி.சி.கல்லூரி மாணவர் இதழ்



மார்ச் 2003

நன்கொடை ரூ. 5

ஸ்தாபகம் : 1973

✆ : 04364-226065

# ஞானம் ஆனந்த்

## லைட் & ஹெவி டிரைவிங் ஸ்கூல்

(அரசு அங்கீகாரம் பெற்றது)

No. 2 ரோடு கல்லறைதோப்பு தெரு,
மயிலாடுதுறை - 609 001.





கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக கார், மாருதிகார், லாரி, மோட்டார் சைச்கிள் போன்ற வாகனங்களில் "சிறந்த முறையில்" ஓட்டுனர் பயிற்சி அளித்து ஓட்டுனர் உரிமம் பெற்று தரும் கைராசி ஸ்தாபனம்

Prop : G.ரவிசங்கர், G.ரகுராமன் D.A.E

குறிப்பு : **பெண்களுக்கு மாருதிக்காரில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்**



# கலைந்த கனவுகள். . .

ஹரியானாவின் கர்னால் மாவட்டத்தில் உதித்து
வல்லரசான அமெரிக்காவில் மலர்ந்து - இந்தியாவின்
புகழை உலகறியச்செய்து - என்றும்
எல்லாவற்றிலும் முதலாவதாக வந்து
நம் நாட்டிற்குப் புகழ் சேர்த்து - விண்வெளியில்
மறைந்த பால்வீதி மங்கையே! - ராகேஷ் சர்மாவுக்கு அடுத்தபடியாக
விண்வெளியை முத்தமிட்ட ஒரே இந்தியர் நீ தானே! - முதல்
வாய்ப்பிலேயே சிறந்த விண்வெளி வீரர்
என்று பாராட்டப்பட்ட புதுமைப் பெண்ணே! - நீ
கூச்சமுள்ள அமைதிப் பெண்ணாக இருந்து - உன்
கனவுகளுக்காகவே வாழ்ந்து இறந்த
சாகச இதயம் படைத்தவராக மாறியது எப்போது? - ஆனாலும்
செவ்வாய்க்குப் போகனும் என்ற உன் கடைசி ஆசையை
விண்வெளியிலேயே நிறைவேற்றிக் கொண்டாயோ - நீ உயிருடன்
இருக்கும்போது கண்டுகொள்ளாத நம்
அரசாங்கங்கள் இறந்த பின் உன் புகழைப் பரப்புகின்றன
என்றும் விண்வெளி வரலாற்றிலிருந்தும் - உலக
இந்தியர்கள் மனத்திலிருந்தும் மறையாத நட்சத்திரமே!
உனது கனவுகளை நனவாக்க - உன்
அடியையொட்டி வளர்ந்த புதியவர்கள் இங்குண்டு
அதனால் நீ விண்வெளியிலேயே சற்று ஓய்வெடு! - உனக்கு
எங்களைப் போன்ற கோடானுகோடி
இதயங்களின் இதய அஞ்சலி!

ஆசிரியர் குழு

# இளந்தூது

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்

ஒருங்கிணைப்பாளர் :
முனைவர் துரை.குணசேகரன்
(தமிழ்ப்பேராசிரியர்)

ஏ.வி.சி.


## ஆசிரியர் குழு

ஆசிரியர் : ஜெ.ரகுநாத்,
இளம் வணிகம் (நிறை)

இணையாசிரியர் & வரைகலைஞர்:
ச.பி.செந்தில்நாதன்,
இளம் வணிகம் (நிறை)

துணை ஆசிரியர்கள்:
ச.செந்தில்,
இளம் தாவரம் (நிறை)
தே.சியாமளா,
இளம் மின்னணுவியல் (நிறை)

சிறப்பு ஆலோசகர்கள்:
மு.செந்தில்குமார்,
முதுநிலை கணினிப் பயன்பாட்டியல் (நிறை)
கி.கீதா,
முதுநிலை கணினிப் பயன்பாட்டியல் (நிறை)
பா.இன்பநிலா,
முதுநிலை வேதியல் (முதல்)

உறுப்பினர்கள் :
தே.கணேஷ்பிரபு,
இளம் வணிகம் (இடை)
சௌ.சிவச்சந்திரன்
இளம் பொருளாதாரம் (இடை)
இரா.பிரியதர்ஷினி,
இளம் மின்னணுவியல் (இடை)
க.இராஜலெட்சுமி,
இளம் மின்னணுவியல் (இடை)
ச.மீனா,
இளம் வேதியல் (இடை)
மு.ஜியாவுதீன்,
இளம்விலங்கியல் (முதல்)
க.அழகிரி,
இளம் வேதியல் (முதல்)
த.கார்த்திக்,
இளம் விலங்கியல் (முதல்)
ச.சுகுணா,
இளம் மின்னணுவியல் (முதல்)
க.குழலினி,
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

உங்கள் படைப்புகள், விமர்சனங்கள் இளந்தூது மின்அஞ்சல் முகவரி அனுப்பலாம்
ilanthoodhu@rediffmail.com

படைப்புகளைத் திருத்தவோ, சுருக்கவோ ஆசிரியர்குழுவிற்கு உரிமை உண்டு.


தொடர்புகளுக்கு:
ஆசிரியர்,
இளந்தூது (மாணவர் இதழ்)
ஏ.வி.சி.கல்லூரி, மன்னம்பந்தல் மயிலாடுதுறை - 609 305



தட்டச்சுக்கோர்வை & அச்சிட்டோர் :
அன்னை பிரிண்டர்ஸ் புஷ்பா காம்ப்ளக்ஸ், விஜயா தியேட்டர் ரோடு, மயிலாடுதுறை. ☎ : 228001


இதழ்


8 — 'நாம் என்ன சிறிது தூரம் பயணம் செய்து இறங்கிப் போகப் போகிறோம். நமக்கேன் வீண் வம்பு' என்று எண்ணாமல் . . . – திருவிழாக்கோலம்

13 — 'அவர்களுக்கு ஏற்படும் வறுமையின் முடிவு உயிர்ப் பலிதான்'. . . – வறுமை

29 — இந்தியா 11 | மற்றவை 12 – நம் மாணவர்கள் – சாதனை

36 — 'மாணாக்கர்களில் சில பேர் சரியான வழிகாட்டுதல் இல்லாததால் திசைமாறிச் செல்லும் மந்தை ஆடுகளாகச் செல்கின்றனர். .' – வெற்றி நிச்சயம்

42 — "கல்லூரிப் பருவத்தில் நானும் ஒரு சராசரி மாணவனைப் போலத்தான். . ." ஆதித்யன – ஒரு சந்திப்பு

62 — "அந்த அறையின் இரு பக்கங்களிலும் சரியாக இருநூறு தமிழ் சிற்றிதழ்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. போஸ்ட் கார்டில் துவங்கி பிளேட் மேக்கிங் வரை அசத்தியிருந்தனர். . ." – இரயில் பயணங்களில்

71 — நான் Vs அது . . .

86 — "மாறாக அழகில்லாமல் இருக்கும் ஆண்களும் அழகான பெண்களையே தேடுகிறார்கள். . ." – அழகி

99 — "லெட்டர் கொண்டு வரும் தபால்காரர் இனி போன் கொண்டு வருவார். . ." – இளைய, ஆசி, வாசி

112 — "பிறக்கும்போது பச்சை நிறமாக இருக்கும் இவர்கள் இளமை காலங்களில் நீலமாக மாறி விடுகிறார்கள். ." – நடந்தாலும் நடக்கலாம்


உங்கள் பார்வைக்கு இவை மட்டுமல்ல
இன்னும் எத்தனை, எத்தனையோ. . . . உள்ளே . . .

இளந்தூது
தூது 14
செய்தி 2

# விளையாட்டிலும் ஏன் இந்த. . .?

விளையாட்டை விளையாட்டாக எண்ணாமல் அப்பாவி மக்களை வகுப்புவாதப் பிரியர்கள் தூண்டிவிட்டுக் குளிர் காய நினைத்ததால் குஜராத்தில் மறுபடியும் ஓர் பூகம்பம் நிகழும் நிலை எற்பட்டது. முன்பு வகுப்புவாதப் பிரியர்கள் சொன்ன சொற்களையெல்லாம் கேட்டு அவர்களின் மகுடிக்கு தலைசாய்த்த மக்கள் இப்போது அவர்களை எதிர்க்கத் துணிந்து விட்டார்கள். அதனால் அவர்கள் வகுப்புவாதத்தைப் பரப்ப விளையாட்டை ஒரு கருவியாக எடுத்துக் கொண்டனர். அதன் விளைவு தான் உலகக் கோப்பையில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா வெற்றி பெற்ற போது குஜராத்தில் நடந்த நிகழ்வு. நம் வீட்டிலிருந்து தம் பங்கை வாங்கிக் கொண்டு. சென்றவர்கள் தானே அவர்கள். அவர்களுக்கும், நமக்கும் பல விதங்களிலும் பல பிரச்சனைகள் இருப்பினும் நம் சகோதரர்கள் அல்லவா? அதனால் அறிந்தும், அறியாமலும் அவர்கள் செய்யும் செயல்களை நாம் தான் பொறுத்துப் போக வேண்டும். அதைவிடுத்து அங்கு அவர்கள் செய்பவற்றிற்கு இங்கு நம்மோடு ஒன்றோடு ஒன்றாக கலந்த, ஒரே நாட்டிலே பிறந்து வளர்ந்த நமக்குள் ஏன் இந்த பிரிவினைகள் !

விளையாட்டை விளையாட்டாக மட்டுமே உணர்ந்து மக்கள் திருந்த ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை ஒடுக்கப் பார்க்கும் வகுப்புவாதப் பிரியர்களை இளைஞர்களாகிய நாம் இனம் கண்டு அவர்களைக் களைய முன் வரவேண்டும். வருவீர்களா?

- ஆசிரியர் குழு





# அன்பார்ந்த வாசகர்களுக்கு..

**இனிய வணக்கங்கள் . . .**

இப்பதினான்கு ஆண்டுகளில் இல்லாது முதன் முறையாக இக்கல்லூரி வளாகத்தை விட்டு வெளியே சென்று பள்ளி மாணவர்கள் மனத்தில் புதைந்திருக்கும் சமூக ஆக்கங்களையும், உணர்வுகளையும் வெளிக்கொணர தேடல் என்ற விவாத நிகழ்ச்சியினை நிகழ்த்தினோம். இதுபோன்ற எங்களின் பல நிகழ்வுகளுக்கு உறுதுணையாக இருக்கும் நம் கல்லூரி முதல்வர் முனைவர். **வீ.இராதாகிருட்டினன்** அவர்களுக்கு எங்களின் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இளந்தூது எப்போதுமே மாற்றங்களை பதிவு செய்வதில் கவனம் செலுத்திவருகிறது. கடந்த இதழில் நாங்கள் வெளியிட்ட இளன், ஆசி, வாசி கட்டுரைக்கு வாசகர்களிடமிருந்து பரவலான வரவேற்பு கிடைத்திருக்கிறது. இந்த இதழிலும் உங்கள் மனமறிந்து பல மாற்றங்களை செய்துள்ளோம்.

மாணவர்களின் படைப்புகளை மட்டுமே தாங்கி வரும் இளந்தூதுவில் கவிதைகள் மட்டுமே அதிகப் பக்கங்களில் இடம் பெற்றிருந்தக் காலம் உண்டு. கடந்த சில இதழ்களில் பல வித்தியாசமான கதைகளையும், விமர்சனங்களையும் நாங்கள் எதிர் நோக்குகின்றோம். எதை எடுப்பது? எதை விடுப்பது? என்று புரியாமல் ஆசிரியர் குழுவினருக்குள் பல அலசல்களுக்கு பிறகே படைப்புகளை தேர்வுச் செய்கின்றோம். மாணவர்களின் ஆக்கபூர்வமான ஆக்கங்களைப் பார்த்தால் இளைய சமுதாயம் மாண்புறுகிறது என்பதை உணர முடிகிறது.

சில நிகழ்வுகளை நிகழ்த்திய மகிழ்ச்சியோடு எங்கள் இளையோரை இம்மண்ணில் மலரவிட்டுச் செல்கிறோம்.

- ஆசிரியர் குழு

நாகை, திருவாரூர் மாவட்டத்திலேயே மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற (Hall Mark) "ஹால் மார்க்" முத்திரை பதித்த நகைகள் வாங்க ஒரே நிறுவனம்.

நாராயணன் ஜிவல்லரி A/c
மயிலாடுதுறை

916 KDM

222082
☎ : 222282
227782

எங்களின் 14-ஆம் ஆண்டு விழாப் போட்டிக்காக இரு தங்க நாணயங்கள், இரு வெள்ளி நாணயங்கள் மற்றும் இரு வெண்கல நாணயங்கள் வழங்கிய நாராயணன் ஜுவல்லரி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

ஆசிரியர் குழு



## என்றும் தொடரும்...

ஜனனம் என்றும் மரணம் என்றும்
தினமும் இங்கே விடிகின்றது,
காலை என்றும் மாலை என்றும்
கணக்கு இங்கே முடிகின்றது,
பகலுக்குச் சூரியனும், இரவுக்குச் சந்திரனும்
இயற்கை நாடகம் நடக்கின்றது,
இன்பமாய்த், துன்பமாய் யாருக்கும்
இதயம் நாளும் துடிக்கின்றது,
உண்மையும், பொய்மையும் நம்மோடு
உறவாடி நம்மையே பிரிக்கின்றது,
வாழ்வு என்ற பாதையில் - தினமும்
வெற்றியும், தோல்வியும் பயணமாகின்றது,
காற்றும் நம்மை (சு)வாசித்து விட்டு
கனவாய் எங்கோ பறக்கின்றது.

ஆர். விஜயசுந்தரம்
முதுநிலை வேதியல் முதல்



# திறவுகோல்

பேருந்துகளை அதிக வேகமாகவும், கவனக் குறைவாகவும் ஓட்டுவது குற்றம் மட்டுமன்றி, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதுமாகும். சிலர் குடிபோதையில் இருக்கும் போது வாகனங்கள் ஓட்டுவது பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். இவ்வாறு ஓட்டுவதால் நிறைய ஆபத்துக்கள் உள்ளன. உதாரணத்துக்கு:- 'ஒரு லாரி டிரைவர் இரவு பயணிக்கும் போது குடித்துவிட்டுப் போதையில் லாரி ஓட்டுகின்றார்' என்று வைத்துக் கொள்வோம். அவரால் நிச்சயம் ஸ்டேரிங்கைச் சரியாக பிடித்து ஓட்ட முடியாது. எதிரே வரும் வண்டிகளின் மீதோ மரத்தின் மீதோ இருட்டில் மோதிக் கொள்ள இதுவழி வகுக்கும். இதே போல் எந்த வாகனமாயினும் சரி, அது அரசு ஊழியர் ஓட்டும் வாகனமாக இருந்தால், தன்னுடைய உத்யோகத்திற்கே கூட பங்கம் விளைவிப்பதாக அமையும். மேலும், உயிர்ச் சேதங்களும், வாகனத்தின் பாகங்களும் நசுங்கிப் போய் பெரிய ரிப்பேர் செய்யும் அளவுக்கும் போய் முடிவதாகும். எனவே, சட்டம் இவ்வாறு நேரக்கூடிய விபத்துகளைத் தடுக்கவே அதற்கான குற்றத்தையும், தண்டனையையும் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது.





இது தவிர பேருந்துகளின் உள்ளே வழக்கமாக நாம் காணக்கூடிய ஒன்று உள்ளது. அதன்படி, 'குறிப்பிட்ட ஓர் எண்ணிக்கைக்கு மேலாக அதில் பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது' என்று சட்ட விதி கூறுகின்றது. இது தவிர, நின்று கொண்டு பயணிகள் பிரயாணம் செய்யக் கூடாது (வழக்கமாக நீண்ட தூர விரைவுப் பேருந்தில்) என்றும், அதை 'ஓட்டுநர் அல்லது நடத்துநர் கண்காணித்து அதுபோன்ற விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று' சட்டம் வகை செய்துள்ளது. ஆனால், அன்றாட வாழ்க்கையில் இவ்வாறு சட்டத்திற்கு மீறிய வரிசையில் அளவுக்குமேல் பிரயாணிகள் பயணம் செய்வதையும், விரைவுப் பேருந்துகளில் நீண்ட பயணங்களில் நின்று கொண்டு பயணம் செய்ய பயணிகளை அனுமதிப்பதை 'நாம் சகஜமாகக் காண்கிறோம், சாதாரணமாக, நாம் என்ன சிறிது தூரம் பயணம் செய்து இறங்கிப் போகப் போகிறோம். நமக்கேன் வீண் வம்பு' என்று எண்ணாமல் ஒவ்வொருவரும் இது மாதிரி சட்டத்திற்குப் புறம்பான காரியங்கள் செய்பவர்களைக் காட்டிக் கொடுத்து, குற்றங்கள் நடைபெறாமல் சமூகத்தை வளப்படுத்த முன்வர வேண்டும். குற்றவியல் சட்டப்பிரிவின் படி "குற்ற நடவடிக்கைகளை யார் வேண்டுமானாலும் மேஜிஸ்திரேட்டிடமோ போலீசாரிடமோ புகார் செய்வதன் மூலம் மேற்கொள்ளலாம்."

- ஆசிரியர்

# NIIT

## The Asia's No.1 IT Education Pioneer.

Making Computer Literate India through its ***SWIFT JYOTI*** program,
Making Computer Professional through its ***FuturZ*** program,

Making Computer Expert through its ***CATS*** program,

***HAT - TRICK OFFER FOR FUTURZ***

- ✦ 25% Fee Discount on 1 year Diploma program.
- ✦ Minimum of 3 interviews from 4000 companies
- ✦ NIIT'S 1 year program leads to the direct 2nd year entry for Bsc,. IT at universities.
- ✦ Finally whichever field you are in (be it Management, Banking, Law, Accounting or even your own Business) there is a program ***Carrier EDGE***.for just 4999 /-(which in turn leads to direct 2nd semester entry)
- ✦ NIIT'S scholarships recognize excellence among meritorious and deserving candidates.

**For further details Contact**


**NIIT**
No.7- A State Bank Road (Old State Bank Building)
Mayiladuthurai- 609 001
Ph:- 226511 & 242511

**Hurry up! Do not miss this opportunity.**

*Life begins at*
**NIIT**






இரா. தேவி

☎: 242950

## NATIONAL TUITION CENTRE

19, Chinna Kannara Street,
Mayiladuthurai.

*Best Coaching. Efficient Teaching*

*Accountancy Tuition for*

**+1, +2, B.Com., B.B.A., M.Com., MCA**

**B.Sc.,** (Maths Allied Accountancy)

**B.Com.,** ( Business mathamatics & Statistics)

***Contact:***

**Jc. HGF. B. MOHAN** M.Com., B.Ed., M.Phil.
(Vocational P.G. Teacher, G.G.H.S. School Myd.)

**Jc. HGF. V. KUMAR** M.Com.,D.cop.
(Vocational P.G. Teacher, Ramakrishna H.S.School, Kothandapuram.)






# வறுமை

உலக நாடுகளில் குறிப்பிட்ட நாடுகள் மக்கள் தொகையில் முன்னணியில் உள்ளது. நம் இந்தியாவோ மூன்றாமிடத்தில் உள்ளது. அதுமட்டுமல்ல நம் நாடு வறுமை எனும் ஒரு கொடுமையான நோயால் மாண்டுகொண்டுள்ளது. வறுமைக்குக் காரணம் பல இருக்கலாம். காரணங்களை நாம் அனைவரும் அறிந்திருப்போம். ஆனால் அதற்காகக் கவலை அடைவதும் துன்பம் வராதவரை அதன் வலி நமக்குத் தெரியாது. எதும் புரிவது அனுபவத்தினால்தான். பிறர் துன்பத்தை நம் துன்பமாய் எண்ணிருக்கவாவது வேண்டும். பின் இப்பூமியில் நாம் ஜனித்ததன் பலன்தான் என்ன? வறுமையின் காரணத்தால்தான் நம் நாடு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இது மறுக்கமுடியாத உண்மை. நாட்டில் நிறைய கொடுமைகள் நிகழ்கின்றன. அதில் வறுமை என்பதுபோல் மற்றொரு கொடுமை எதும் இல்லை.

இரா.சங்கரி பிரியா



வறுமையென்றால் ஒரு மாணவனுக்குப் புத்தகம் வாங்கவோ, பேனா வாங்கவோ பணம் இல்லை என்பது பொருளல்ல. ஒரு நாளில் மூன்று வேளை என்றால் அதில் ஒரு வேளை உணவுக்குக் கூட வழி இல்லை எனும் நிலை வருகிறதே அதுதான். அது பிறந்த குழந்தை முதல் இறக்கப்போகும் முதியவர்வரை நீடிக்கும் நிலையாகும். இவ்வாறு எல்லா உருவங்களிலும் தலைவிரித்து ஆடும்

ENTER HERE

CLICK ANYWHERE

# SISI

**GOVT. OF. INDIA**
**COMPUTER TRAINING CENTRE**

## MINISTRY OF SSI, CHENNAI.

*Invites Applications for Training in Computers*

**Master Diploma in Information Technology (MDIT)**
**Duration : 24 Months (Part Time) 12 months (Full time)**

**Honours Diploma in Software Engineering (HDSE)**
**Duration : 18 months (prat time) 9 months (Full time)**

**PG / Diploma in Computer Application (PG/DCA)**
**Duration : 12 months (part time) 6 months (Full time)**

**Advanced Diploma in computer Hardware & Networking**
**Duration : 4 months (part time) 2 months (full time)**

**PG/Diploma in Computer Hardware & Software**
**Duration : 10 months (Part time) 5 months (full time)**

**Masters Diploma in Networking**
**Duration : 4 months (part time) 2 months (full time)**

**Diploma in Computer Accountacy**
**Duration : 3 months (part time) 6 weeks (full time)**

**Diploma in AutoCad 2K**
**Duration : 3 months (part time) 6 weeks (full time)**

**Masters Diploma in E.commerce (MDEC)**
**Duration : 6 months (part time) 3 months (full time)**





**Diploma in Client Server Technology (DCST)**
**Duration : 6 months (part time) 3 months (full time)**

**Diploma in Java & Internet Programming (DJIP)**
**Duration: 6 months (part time) 3 months (full time)**

**Diploma in Computer Hardware & Software (DCHS)**
**Duration : 10 months (part time) 5 months (full time)**

**Honours Diploma in Computer Hardware & Networking (HDCHN)**
**Duration : 6 Month (Part Time) 3 months (Full Time)**

## SPECIAL COURSES

**Diploma in Visual Basic with Project**
**Duration : 75 hrs**

**Diploma in Oracle with Project**
**Duration : 75 hrs**

**CONCESSION**
50% Concession For SC/ST & PH
10% Concession for Women

**Diploma in Java with Project**
**Duration : 75 hrs**

**Diploma in ASP with Project**
**Duration : 75 hrs**

**Diploma in C & C++ with Project**
**Duration : 75 hrs**

**NOW**
UPTO **50%**
**DISCOUNT**

**Certificate Courses in Tally**

## PG/UG Project Guidance

*For application & further details contact :*

**1-B-1, State Bank Road, Mayiladuthurai.**
**☎ : 242939 (04364) Cell : 98424 - 72004**

ஒரு கொடும்பேய் வறுமையாகும். வறுமையின் பிடியில் சிக்குவது படிக்கும் மாணவர்களே பெரும்பான்மையானவர்கள். படிக்கும் மாணவன் ஒருவனுக்கு வறுமைக் கொடுமை என்றால், அவன் படிக்கும் படிப்பைக் கைவிட வேண்டும் எனும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். தன் வறுமையைப் போக்க வேண்டும் என நினைக்கிறான். அதற்கு வேறு வழியைக் கடைப்பிடிக்கின்றான். அதற்காகத் தவறான வழிகளைத் தேர்ந்தெடுக்கின்றான். வறுமையில் வாழும் குடும்பத்தைச் சார்ந்த ஒரு மாணவன் ஒருவன் கல்வி ஆர்வம் கொண்டுள்ளான். அவன் மேற்படிப்புப் படிக்க வேண்டும் என ஆர்வம் கொள்கின்றான். அதற்கு உறுதுணையாய் - ஆதரவாய்த் தோள் கொடுக்க ஒரு தோழன் வேண்டும். அவ்வாறு ஒரு நாட்டின் அரசு விளங்க வேண்டும். ஆனால், இவ்வாறு அவன் எதிர்பார்த்தது கிடைக்காத போதுதான் அவன் வெறுப்பை அடைகின்றான். இவ்வாறான மாணவர்கள் இரு வகைப்படுவர். முதல் நிலையில் உள்ளவன் கொஞ்சம் மனத்தில் வலிமை இல்லாதவன். அவன் 'தற்கொலை' எனும் கொடுமையான முடிவை எடுத்துத் தன் வாழ்வை முடித்துக் கொள்கிறான். இரண்டாம் நிலை, நிறையவே எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தவன் தேசக்குற்றங்களைச் செய்கிறான்.

இன்று கணக்கிட்டுப் பார்த்தால் வறுமையால் வறுமையில் வாடுபவன், அடுத்ததாக ஆரம்பிக்கும் தொழில் இளமையிலேயே திருட்டு, கொலை, கொள்ளை, ரவுடித்தனம் இன்னும் பல . . . . இதில் குறிப்பிடத்தக்கது தீவிரவாதம் எனும் தேசக் குற்றமாகும். வறுமையில் அடிப்பட்டவன் தன் காயத்தை ஆற்ற வேண்டுமென்று நினைப்பான். அது தவறான வழியோ, சரியான வழியோ, அதைப்பற்றியெல்லாம் அவனுக்குக் கவலை இல்லை. தன்னைப் பற்றிக் கவலைப்படாதவரைப் பற்றித் தான் ஏன் கவலைப்பட வேண்டும் என்று நினைக்கிறான். காயத்தைப் போக்கும் மருந்தாய் அவன் பணத்தையே நினைக்கிறான். அதைக் கண்ணால் கண்டால் போதும் எனும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். இவ்வாறான நிலையில் தான் நாம் நம் நாட்டையும் கூட பணத்திற்காகக் காட்டிக் கொடுக்கவும் தயங்காதவர்களாக உருவாகின்றனர்.

இன்றைய நிலையில் நூற்றுக்கு முப்பது அல்லது நாற்பது சதவீதம் மாணவர்கள் மட்டுமே நல்ல நிலையில் கல்வி பெறுகின்றனர். மீதம் உள்ளவர்கள் ஏழ்மையால் தன்நிலை மறந்தவர்கள். ஒரு தீவிரவாதியையோ, ஒரு திருடனையோ, அணுகி நீ இப்படி ஆவதற்குக் காரணம் என்ன? இப்படிக் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கிறாயே? என்று கேட்டால், அதற்கு அவன் தரும் பதில் **"வறுமை"**. இது முற்றிலும் உண்மை. ஒருவனிடம் நல்ல வேலை கிடைக்கவில்லையா? என்று கேட்டால், என்னிடம் பணம் இல்லை, இருந்தால் பணம் கொடுத்து நல்ல வேலை வாங்கி இருப்பேன் என்பான்.





அடிப்படையான தேவை வேலை, அதற்கே பணம் வேண்டும் என்னும் நிலை. இப்படி எதை எடுத்தாலும் வறுமை எனும் நிலையில் தான் நம் நாடு இன்னும் இருக்கிறது.

கீழ் வர்க்க மக்கள் வறுமை என்று சொன்னால் அது மிகவும் கொடுமையானது. அவர்களுக்கு ஏற்படும் வறுமையின் முடிவு உயிர்ப் பலிதான். மேல் வர்க்கத்தினருக்கும் சாவு உண்டு. ஆனால் அதில் உயிர்ப் பலி ஏற்படுவதில்லை. சிலர் ஏழைகளின் ஏழ்மையைக் காரணமாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களின் வறுமையைப் பயன்படுத்திப் கருணையை பெற நினைக்கிறார்கள். இவ்வாறு வறுமையைப் பயன்படுத்திக் கருணையைச் சம்பாதிப்பது மிகவும் கொடுமையான கீழ்தரமான, இழிவான செயலாகும். அதனால் அவர்கள் தான் அவமானப்படுவார்கள். வறுமையைப் போக்குகிறேன் எனும் பெயரில் கருணையைப் பரிசாகப் பெறும் பேராசையில் தாங்களே தங்கள் மதிப்பைக்குறைத்துக் கொள்கின்றனர். அதனால் ஏற்படும் புகழ் கானல் நீர் போன்றது. 'இரவு சூரியன்' போன்றது! 'பகல் நிலவு' போன்றது! 'கடலில் தாமரை' போன்றது! 'குளத்தில் அலை' போன்றது! எவ்வாறாக இருந்தாலும் நேர்மையான, உண்மையான வழியைக் கடைபிடிக்க வேண்டும்.

நம் நாட்டில் நீண்ட நாட்களாய்க் குடிகொண்டிருக்கும் வறுமையைத் துரத்தியடிக்க வேண்டும். வறுமையைப் போக்கினால் நம் நாட்டிற்கு வரவேண்டிய எல்லா செல்வமும் தானாக வந்துச் சேரும். இப்படிப்பட்ட புதுமையைச் செய்ய நாம் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். பொருளாதாரத்தையே உயர்த்த வேண்டும் என்ற பேராசையை விட்டு வறுமையைப் போக்க வேண்டும் எனும் இலட்சியம் எல்லாருடைய மனத்திலும் பதிய வேண்டும். அதுதான் பண்பட்ட மனிதனுக்கு உரிய சிறந்த இலக்கணமாகும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் அந்த இனிய நாடாய் நம்முடைய இந்தியா திகழும்.

***"வறுமை எனும் முட்களை வெட்டி ஒழிப்போம்***
***இனிமை எனும் மலர்களை மலரச் செய்வோம்"***

துணுக்

மனிதனின் சிந்தனை வேகம் நிமிடத்திற்கு
500 சொற்கள், பேசும் வேகம் 1000 சொற்கள்

எல்.இலாஹி
இளம் நுண்ணுயிரியல் (இடை)

கல்லூரி

ஏவி

# TATTI

(TamilNadu Advanced Technical Training Institute)

**COMPUTER HIGHER EDUCATION**

**COURSE OFFER**

- **PGDCA**
- **ADV. DIP. In RDBMS**
- **C, C++,Unix/Linux**
- **AutoCAD**
- **DTP**
- **Dip. in Hardware Technology**
- **Web Designing**

Govt. of Tamil Nadu
Bound to Govt. of India

*"Delay is the enemy of efficieny"*

Keep in touch,

13-D. IInd Floor, Cutchery Road,
Mayiladuthurai.
H.O: M.K.N. Road, Guindy, Chennai - 32.



## சுமை

சிந்திக்காத வரை
மூளை கூடத் தலைக்குச் சுமை!
பயன்படாத வரை
பணம் கூட பெட்டிக்குச் சுமை!
துணிவு இல்லாத வரை
பயம் கூட வெற்றிக்குச் சுமை!
உழைக்காத வரை
மனிதா நீ உலகிற்கே சுமை.

மு.பிரியா
இளம் மின்னணுவியல் (இறை)

## ஏதார்த்தம்

தேய்ந்து வளர்வது தான்
நிலவு...
வீழ்ந்து எழுவது தான்
வாழ்க்கை...
சென்றது இறந்த காலம்
சிறப்பு!
வருவது எதிர்காலம்
மகிழ்வு!

மகா.இராஜராஜசோழன்.
இளம் தாவரவியல் (இடை)

## சிகரெட்

சிங்க நடை போடும் வீரனையும்
கட்டுமஸ்தான உடல் உள்ள வாலிபனையும்
நெக்ஸ்ட் எடுக்க எமலோகத்திற்கு அனுப்பும்
ட்ரெயின் டிக்கெட்

என்.நூர்
இளம் தாவரவியல் (இடை)

## நோன்பு

வயிற்றுக்குக் கஞ்சி இல்லை
செய்து பிழைக்கத் தொழிலும் இல்லை
இனி வரும் நாளெல்லாம்
எங்களுக்கு நோன்புதானோ!!!

# பயோடேட்டா

பெயர்
விலங்கியல் அருங்காட்சியகம்

வயது — 40

இடம்
விலங்கியல்துறை (அ.வ.அ கல்லூரி)

பிடிக்காதது
தனியாக இருப்பது

நண்பர்கள்
ஆசிரியர்களும், மாணவர்களும்.

பிடித்தது
அனைவரின் வருகையும், தினசரி பார்வையும்.

சோகம்
புது வரவு இல்லாமையால்.

மகிழ்ச்சி
எப்போதும் தூய்மையாக இருப்பது.

எதிரிகள்
என்னை முறைத்துக்கொண்டே என்னைக்கடந்து செல்பவர்கள்

நீண்டநாள் ஆசை
அனைத்துத் துறை மாணவர்களும் என்னைக் காண வரவேண்டும்.

- ஆசிரியர் குழு



# உழைப்பின் மேன்மை

வியர்வை சிந்தி உழைக்கும்
விவசாயி கூறவில்லை
வேலையில்லை என்று!
வெட்டியாகப் பொழுது போக்கும்
இளைஞனே! நீ கூறுகிறாய்
வேலையின்மை என்று!
டீக்கடை பெஞ்சுகளில் வீண்
அரட்டை அடிக்கும் நீ கிளாஸ் கழுவும்
பையனைக் கேட்டுப்பார்!
உழைப்பின் மேன்மை புரியும்.
ஆடம்பரமாக வாழ நினைக்கும் நீ
அலங்காரமாக அணிந்திருக்கும்
ஆடைகளைக் கேட்டுப்பார் !
நெசவாளரின் உழைப்பைச் சொல்லும்
எறும்பைக் கேட்டுப்பார்!
தேனீயைக் கேட்டுப்பார்!
தோல்வி மடியில் விழும் உன்னிடம்
தோழமையாகக் கூறும்
சுறுசுறுப்பின் அர்த்தத்தை!
அரசாங்கச் சேரைத் தேய்க்க விரும்பும் நீ
சுய தொழிலின் சிறப்பைப் புரிந்து கொள்!
விடா முயற்சியைப் பூக்களாக அணிந்துகொள்!
வெற்றி மாலை உன்னை வந்து சேரும்!
உன் வாழ்க்கை இனிக்கும் கரும்பாக!

க. இராஜலெட்சுமி,
இளம் [illegible]

# சிக்னல்



ஆசிரியர் குழு

சென்ற தூதில் தன் காரை நோக்கி ஓடிய விவேக் அவரைப் பார்த்து அதிர்ந்துப் போனாரல்லவா. . . அவர் வேறு யாருமல்ல நம்ம 'சித்தி' ராதிகா தான். . . தன்னிடம் மாட்டிக் கொண்ட பதட்டத்தில் இருந்த விவேக்கைப் பார்த்து. "உன்னைத்தான் பார்க்கணும்னு இருந்தேன். நல்ல வேளை நீயா வந்து மாட்டிக்கிட்ட." என்ற ராதிகாவிடம், விவேக் "ஏன் சித்தி தனியா வந்திருக்கீங்க? சித்தப்பாவைக் கூட்டிக்கிட்டு வரலையா?" என்றார். அதைக் கேட்ட ராதிகா. "அதான பார்த்தேன் என்டா உன் வாய் சும்மா இருக்கேன்னு வந்த உடனே ஆரம்பிச்சிட்டியா உன் வேலையை? என்றார் ராதிகா.

"இல்ல சித்தி. சித்தப்பா சமீபத்துல ரசிகர் மன்றத்துக்காக ஒரு கொடியை அறிமுகப்படுத்தியிருந்தார்ல அதுக்கு யாரும் ஆதரவு கொடுக்கலைன்னா. நானாவது கொடுக்கலாம்னு பார்த்தேன். சரி சித்தி.. .. நாடாளுமன்றத்துக்குப் போற சித்தப்பா நியாயமா கேள்வி கேட்கிறாரா? இல்ல நாடாளுமன்ற மேஜையில் படுத்துத் தூங்குறாரா?" என்று கேட்ட விவேக்கைப் பார்த்து. "எப்பா! எப்பப் பார்த்தாலும் அடுத்தவங்களக் கிண்டல் பண்ணிகிட்டே திரியிரியே உன்ன கிண்டல் பண்றதுக்கு எவனும் வரலைங்கறதாலயா?" என்றார் ராதிகா.

உடனே "அதான் அவர்களே என்னைச் சின்ன கலைவாணர்னு சொல்றாங்களே?" வெயிட்டாக விவேக். ராதிகா. "அப்படின்னா..! நீயே சின்ன கலைவாணர்னு சொல்லிக்கிட்டு ஊர்ல திரியிறியா?" என்றார். உடன் விவேக். "அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு? நீங்களும் தான் முன்பு சித்தியை ஜவ்வு மாதிரி இழுத்தீங்க. பொறுத்திருந்த மக்கள் எப்படா இத முடிப்பாங்கன்னு முணுமுணுக்க ஆரம்பித்த பிறகு ஏதோ முடிக்கிறோம்னு முடிச்சீங்க. இப்ப என்னடான்னா அண்ணாமலைன்னு ஆம்பிள பேர டைட்டிலா வச்சிகிட்டு நாடகத்துல அண்ணாமலையா நீங்க நடிக்கிறீங்க. அதோட நிக்காம அதுல சங்கு. சாமின்னு சொல்லிகிட்டு இந்த நூற்றாண்டிலேயும் மக்களை ஏமாத்திகிட்டு இருக்கீங்க."

உடன் "சித்தி" "நீ மட்டும் என்ன ஜோக்கடிக்கிற பேர்வழின்னுட்டுக் காட்டுமிராண்டித்தனமா கத்திகிட்டு. ஒவ்வொரு படத்துலயும். ஒவ்வொருத்தரைக் கிண்டல் பண்ணிகிட்டேயிருக்க. அடுத்த படத்துல யாரைக் கிண்டல் பண்ணலாம்னு இருக்க?" என்றார். இதைக்கேட்ட விவேக்கின் உதவியாளர் ஒரு கேவிச் சிரிப்பு சிரித்தார்.. உடனே விவேக்கிடம் ராதிகா. "சரி விவேக்! நீ கூட எனக்குப்



போட்டியா சித்தப்பான்னு சீரியல் ஆரம்பிக்கிறதா? சொல்லிகிட்டு அலஞ்சியே என்னாச்சு?" "அவருக்குப் பதிலாக நீங்க சித்திய ஆரம்பிச்சுப் பெண்களை அழவச்சீங்க. நான் சித்தப்பான்னு ஒரு சீரியல் ஆரம்பிச்சு ஆண்களை கவரலாம்னு பார்த்தேன். ஆனா நாடகத்தாலயும். திருட்டு வி.சி.டி.யாலயும். சினிமாத்துறை பாதிக்கப்பட்டு வருவதால் அந்த விஷயத்தை கைவிட்டுட்டேன்"

மறுபடியும் விவேக் சித்தியிடம். "உங்க RAADAN PICTURES-இல் திரைப்படம் தயாரிக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். என்னையே ஹீரோவா வைத்துப் படம் தயாரிக்கலாமே? படத்துல பயங்கர காமெடி சீன் வைத்துப் படத்தை வெள்ளி விழா கொண்டாட வைத்து விடுவோம்?" "ஏன்? நான் ஒழுங்கா ஒரு நிறுவனத்தை நடத்திட்டு வர்றது உனக்குப் பிடிக்கலையா?" என்று பாய்ந்தார் ராதிகா. உடனே அங்கிருந்த விவேக்கின் உதவியாளர். நமட்டுச் சிரிப்புடன் "அப்படியே அவங்க படம் தயாரித்தாலும். சித்தப்பாவை வைத்துதான் படம் தயாரிப்பாங்க. ஏன்னா. ஹீரோவுக்குச் சம்பளம் கொடுக்காமலேயே படத்தை முடிச்சிடலாம்ல" அவரைத் தொடர்ந்த விவேக். "சித்தப்பாவுக்கு ஹிட்டான படங்கள் எல்லாமே நாட்டாமை ரேஞ்சுல வேட்டிய வரிஞ்சு கட்டிக்கிட்டு நடிக்கிற படங்கள் தான்

மயிலாடுதுறையில்
பத்து வருடங்களுக்கு மேலாக ஸ்டிக்கர் தொழிலைச் செய்து வரும் நிறுவனம். டூவீலர்கள் மற்றும் கார்களுக்குப் பெயிண்ட் மூலம் நம்பர் பிளேட் எழுதித்தருகிறோம்.



தசன்

டிசைன்ஸ்

கம்ப்யூட்டர் சைன்மேக்கிங் சிஸ்டம்ஸ்

15, கச்சேரிரோடு. மயிலாடுதுறை.

☎: 227482

வினையல் சைன் போர்டு. ஸ்கிரீன் பிரிண்டிங், டூவீலர் மற்றும் கார்களுக்கு நம்பர் பிளேட் கூலிங் பேப்பர் சிறந்த முறையில் ஒட்டித் தருகிறோம்.

நற்செய்தி:
மேலும் நாங்கள் சன் கன்ட்ரோல் பிலிம் ரிப்லெக்டர் ஸ்டிக்கர்ஸ், பிளாஸ்டிக் போர்டு. கார் ஷோ ஸ்டிக்கர்ஸ், போன்றவை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.





டியிருக்கு. அவரைப் போய் இப்ப உள்ள TREND க்கு ஹீரோவா போடுறதுன்னு சொல்றீங்களே. . . என்னை ஹீரோவா போட்டீங்கன்னா, YOUTH க்கு எத்த மாதிரி நடிப்பேன்" என்றவரிடம், கையெடுத்துக் கும்பிடாத குறையாக "ஆமாம்பா, ஏற்கனவே இப்படிதான் உன்ன ஹீரோவா வச்சி படம் எடுக்குறேன்னு சொல்லிட்டுப் 'பஞ்சு'ன்னு ஒரு படம் ஆரம்பிச்சாங்களே, ஆரம்பிச்ச வேகத்துலேயே படமும் நின்னு போச்சு, தயாரிப்பாளரும் இறந்து போய்ட்டாரு. அந்த நிலைமை எனக்கு வேண்டாம்பா நீ சீக்கிரமா இங்கிருந்து நடையைக் கட்டு" எஸ்கேப் ஆனார் சாதிகா. செய்வதறியாது விவேக்கும் அங்கிருந்து சொல்லாமல் கொள்ளாமல் நடையைக் கட்டுகிறார். ●

## மறதி

நான் உன்னைப் பார்த்தேன்
நீ மண்ணைப் பார்த்தாய்
நான் கேள்வி கேட்க
நீ மவுனமாய் இருந்தாய்
நானும் தேர்ந்தெடுத்தேன்
என் மணப்பெண் நீ தான் என்று
அன்பே நீ ஏன் சொல்ல மறந்தாய்
முன்பே மணமானவன் என்று.

கணே.விஜயன்
இளம் கணினி (இடை)

## வானம் வசப்படும்

காற்று வசப்படும்
குழல் இசைப்பவனுக்கு
தேனீக்கள் வசப்படும்
மலர்களில் தேன் இருக்கும் வரை
ஞானம் வசப்படும்
தன்னை அறிந்தவனுக்கு
வானமே வசப்படும்
தன்னம்பிக்கை உள்ளவர்களுக்கு

ம.கார்த்திகேயன்
இளம் வேதியல் (நிறை)

ஏ
வி
சி

# ...அவள்

அதிகாலை வானம் யாருமில்லாத நேரம்
பனிநனைந்த சோலைகள்,
நான்மட்டும் தனிமையில்
பச்சைத்தாவணியில் ஒற்றைக்காலில்
நின்றிருந்தாள் ஒருத்தி
எனை "வாவா"என அருகில்அழைத்தாள்!
இன்னும் மலரக்கூட இல்லை - மொட்டு
பருவத்திலே இத்தனை நக்கலோ...!
எனக்கோபமாய் அவள் அருகில் சென்றேன்.
செவ்விதழ்க்கண்டு வியந்து நின்றேன்!
சல்லமாய் வருடி மெல்லமாய்க் கிள்ளினேன்
அவள் கால்களை!
இரத்தமே வந்துவிட்டது என்கைகளில்,
அப்போது தான் நினைவிற்கு வந்தது
ரோஜாச்செடியில்
முட்களும் உண்டென்று...!

இரா.ப்ரியன்
இளம் கணினி (இடை)

**துளிக்**

சட்டம் ஒரு இருட்டறை, வக்கீலின் வாதம் ஒரு விளக்கு, அது ஏழைக்கு எட்டாத விளக்கு.

- அறிஞர் அண்ணா

தொகுப்பு:
அரு. ஆனந்தகுமார்
இளம் கணினி (நிறை)



# நூலகமே...

உன்னுள் உருவானது அறிவு.
அதனுள் ஆராய்ந்தவன் அறிஞன்
இன்நூல் சிந்தித்தவன் விஞ்ஞானி
கலைநூல் கலைத்தவன் கலைஞன்
அந்நூல் சேமித்தவன் ஆசிரியன்
உன்னில் நூலைப் புரட்டியவன்
சிறந்த மாணவன்
அங்கு வந்து போனவர்களோ,
சிறந்த குடிமகன்.

அ.சரவணக்குமார்
இளம் வேதியல் (இடை)

# இந்தியா

இமயம் மட்டும்
உயரத்தில்
குமரி வரை குநிதியிருப்பவை
குன்றுகளே!

யோ. செந்தமிழ்குமார்
இளம் வேதியல் (நிறை)

# நாங்கள்

வாழ்க்கையின் இனிய தொடக்கமாகிய
கல்லூரி என்கின்ற ஆலமரத்தில்...!
கல்வி என்ற நிழலுக்காகப்
பறந்து வந்த பறவை கூட்டங்கள்...!
நட்பு என்னும் பழங்களைப் பகிர்ந்துண்டு...!
அன்பு என்னும் கூடுகட்டிச் சிறகடித்தோம்...!
கல்லூரி முடிவு என்கின்ற பருவகாற்றில்
இலையுதிர்...!வாழ்க்கையை ஆளுக்கொரு
திசையில்...

எஸ்.தனினி
இளம் வேதியல் (இடை)

# ஜகன்

**கிறிஸ்துவ இலக்கிய மையம்**

இச்சமயத்தில் வேதாகமங்கள், ஆன்மிகப் புத்தகங்கள், பிறந்த நாள், திருமண நாள், கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்து அட்டைகள், வேத வசனங்கள் அடங்கிய பலரக பல வண்ண ஸ்டிக்கர்கள், ஒலி நாடாக்கள், கணினி குறுந்தட்டுகள், 2003 ஆம் ஆண்டிற்கான வேத வசனங்கள் அடங்கிய மாதாந்திர நாள் காட்டிகள், தினசரி நாள் காட்டிகள், பண்டிகை நாள் அலங்காரப்பொருட்கள், இதரப் பரிசுப் பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

இம்மையத்திற்குத் தாங்கள் வருகை தந்து ஆதரவு அளித்துப் பயன் பெற அன்புடன் அழைக்கிறோம்.

Jagan CLC

**ஜகன்**
**கிறிஸ்துவ இலக்கிய மையம்**

**சிவாஜி கணேசன் வணிக வளாகம்**
**முதல் தளம்,**
**புதிய பேருந்து நிலைய முனை,**
**மயிலாடுதுறை - 609 001.**




# சர்வே



"முன்னாள் வீரர்களின் அலசல்கள், விளம்பரதாரர்களின் உச்சக்கட்ட பான்ஸர், ஜிம்பாப்வே, கென்யா பிரச்சனைகள், ஜாம்பவான்களுக்கே ஜகா கொடுத்தது. . ."

இவற்றையெல்லாம் மீறி உலகமே எதிர்பார்த்து நிற்கும் ஒரே விசயம் இவ்வருடம் உலகக் கோப்பை வாங்கப் போவது யார்?

பலரின் அலசல்கள், எண்ணிக்கையற்ற விவாதங்கள் ,போட்டிகள் இதுவெல்லாம் ஒருபுறம் இருக்க, நம் கல்லூரி மாணவர்களின் ஓட்டு யாருக்கு? இதோ அவர்களின் வேட்பாளர்கள். . .

வெஸ்ட் இன்டீஸ் தான் கப் வாங்கும். கண்டிப்பாக இ ந் தி ய ா வ க் கு க் கிடையாது.
எஸ்.செந்தில்ராணி
இளம் வணிகம் (நிறை)

நான் இந்தியன். இந்தியா மீது எனக்கு நம்பிக்கை இருப்பதால் நிச்சயம் இந்தியாவுக்கு வேல்டு கப் கிடைக்கும்
கே.பரிமளா
இளம் வணிகம் (இடை)

டெண்டுல்கர் நன்றாக விளையாடினால் நமக்கு வேல்டு கப் கிடைக்கும் என்று நம்புகிறேன்.
சி.ரதி
இளம் கணினி (முதல்)

1983 இந்தியாவுக்குக் கப் கிடைத்ததால், 2003 லும் கிடைக்கும் என்ற நம்பிக்கை.
[illegible]
இளம் கணினி (இடை)
[illegible]
இளம் மின்னணுவியல் (முதல்)
[illegible]
இளம் வேதியல் (நிறை)

சவுத் ஆப்பிரிக்காவுக்கே கிடைக்கல வேறுயாருக்குகிடைச்சா எனக்கென்ன?
எஸ்.கே.வெண்ணிலா
முதுகலை ஆங்கிலம் (முதல்)

பாகிஸ்தான், இந்தியா யாரு வாங்கினாலும் சந்தோஷம் தான்.
முகம்மது ரிஃபாயுதின்
இளம் கணினி (இடை)

ஏ
வி
சி

இந்தியாவுக்குக் கிடைக்க ஆசைப்படுகிறேன். திறமை நம்மிடமும் இருப்பதால் வெற்றி நமக்குத்தான்.

ப.வசந்தி
இளம் வேதியல் (இடை)

வெஸ்ட் இன்டீஸ் விளையாடுற திறமை + confidence இதுவே சொல்லிடும் வேல்டு கப் அவங்களுக்குத்தான்னு.

ஆர்.ராஜசேகர்
இளம் கணினி (நிறை)

ஆஸ்திரேலியா வாங்கலாம். இந்தியா வாங்குவதற்கு வாய்ப்பே இல்லை.

எச்.மகேஸ்வரி
இளம் இயற்பியல் (இடை)

ஸ்ரீ நாத், சச்சின் நல்ல Performance பண்ணினார்கள் என்றால் கப் நிச்சயம் நமக்குத்தான்.

எல்.இலாஹி
இளம் நுண்ணுயிரியல் (இடை)

திறமை யார்கிட்ட இருக்கோ அவங்களுக்குத் தான் அது நம்மிடமும் இருக்கிறதை மறந்திடகூடாது.

எழில்ராஜா
இளம் இயல்பியல் (நிறை)

நான் பெர்ணாட்ஸா கட்சி . . .

சி.சுந்தராம்பாள்
முதுகலை மின்னணுவியல் (முதல்)

முதல் வெற்றி! முற்றிலும் வெற்றி!

சி.சங்கீதா
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

Open Batsman சச்சினாக இருந்தால் இந்தியாவுக்குத் தான் கப்.

வ்.ஜெயந்தி
இளம் நுண்ணுயிரியல் (இடை)

வெஸ்ட்இன்டீஸ் கப் வாங்கும். இல்லைன்னா இந்தியா வாங்கலாம்.

ஜி.ஜமுனா
முதுநிலை விலங்கியல்

நாட்டுப்பற்றுள்ள ஒவ்வொருத்தரும் இந்தியாதான் வாங்கனும்னு நினைப்பான்

ஆர்.சி.ஸ்டாலின்
இளம் வணிக மேலாண்மை (இடை)

ஸ்டிவாக் இல்லாதது ஆஸிக்கு பெரும் இழப்பு

ஜெ.விமல்
இளம் வணிகம் (நிறை)

இந்தியாவுக்கு வாய்ப்பே இல்லை. நிச்சயம் சவுத் ஆப்பிரிக்கா தான் வாங்கும்.

டி.சங்கர்
இளம் தாவரம் (இடை)

நிச்சயம் இந்தியா வாங்கும் என்கிற நம்பிக்கை இருக்கு

பி.மோசஸ்
இளங்கலை ஆங்கிலம் (முதல்)

வெஸ்ட்இன்டீஸ் சமீப காலமா நல்லா விளையாண்டுகிட்டு இருக்கு. அதனால் அதுதான் வாங்கும்.

டி.பிரகாஷ்
இளம் வேதியல் (இடை)





ஆஸ்திரேலியாதான் கப் வாங்கும். அதன்மீதுள்ள நம்பிக்கை நல்ல பௌலிங்.

வி.சாந்தி
இளம் இயல்பியல் (இடை)

ஸ்ரீலங்கா தான் கண்டிப்பா கப் வாங்கும்.

டி.சுஜாதா
இளம் மின்னணுவியல் (இடை)

'ஈகோ'வை விட்டு உண்மையா ஆட சொல்லுங்க! கப்போட வருவோம். .

ஏ.மணி
இளம் வேதியல் (நிறை)

நம்ம classmates போட்டியில கலந்து கிட்டா அவங்கதான் ஜெயிக்கனும்னு நினைக்கிறோம். அதைவிட நமது நாடு என்று சொல்லும்போது இந்தியாதான் ஜெயிக்கனும்.

க.சங்கீதா
முதுநிலை கணினிப் பயன்பாட்டியல் (முதல்)

இ
ந்
தி

வியாபார கிரிக்கெட்டை விட்டுட்டு உண்மையா ஆடுங்க வெற்றி பெறுவீங்க.

எச். வசந்த்
இளம் கணிதம் (நிறை)

semi final வரைக்கும் இந்தியா வரும். அதன் பிறகு லக் இருந்தா வெற்றி பெறும்.

சு.தீபா
இளம் வணிகம் (நிறை)

**"மூளைச் சொல்கிறது இந்தியா வேல்டு கப் வாங்காது என்று, ஆனால் இதயம் சொல்கிறது இந்தியா வேல்டு கப் வாங்குமென்று!"**

- கபில்தேவ்

| இந்தியா | மற்றவை |
|---|---|
| 11 | 12 |

- *நம் மாணவர்கள்*

*பொறுத்திருந்து தான் பார்ப்போம். வெல்லப் போவது யாரென்று!*

## ஆசை

பண்ணையார் வீட்டுத்
தோட்டத்தில் பார்வைக்காக
வைத்திருக்கும் சோலக்கொல்ல
பொம்மையைப் பார்த்து . . .
அது அணிந்திருக்கும்
ஆடையை ரசித்து அதன் மேல்
ஆசைபட்டானாம்
அத்தோட்டத்தில் பணிபுரியும்
உழவனின் மகன்

க.குருமூர்த்தி
இளம் வணிகம் (இடை)

## தெய்வம் யார்?

கள்ளமில்லா மனம், ஏற்றத்
தாழ்வில்லா குணம் எல்லோர்க்கும்
ஒளி வீசுகிறது நிலவு!
சாதி, மதம் பார்ப்பதில்லை
எல்லோர்க்கும் வீசுகிற உருவம்
இல்லா தென்றல்!
வேறுபாடு இல்லாமல் வேண்டியவை
கொடுப்பது கள்ளமில்லா
இயற்கை தானே!
இயற்கை போல் மனம்
படைத்தவர் யாரோ அவரே
இவ்வுலகின் தெய்வம்.

ஜெ.இன்பவாணன்
இளம் கணினி (இடை)

## யார் சொல்வது?

வறுமைக்குச் சொந்தக்காரன்
வரைகின்றேன் ஒரு கவிதை
கூட்டுப் பொறியலுடன்
கோவிலில் சாப்பாடு-விவசாயக்
கூலித்தொழிலாளியோ
வறுமையினால் கூப்பாடு-அவனைத்
தட்டு எடுக்க வைத்தவர்க்கு-நாம்
பட்டாடைப் போர்த்துகிறோம்.

த.கோபிநாத்
இளம் வரலாறு (இடை)







## முதிர்கன்னி

பள்ளிசென்று கல்விகற்கையில்-உன்
பார்வை பண்புடையவனாக மாற்றியது,
கல்லூரி சென்று கல்விகற்கையில்-உன்
பார்வை பாச முடையவனாக மாற்றியது
வேலைக்குச் சென்று வேலைசெய்கையில்-உன்
பார்வை குடும்பஸ்தனாக மாற்றியது,
வீட்டிற்குப் புறப்படுகையில்-உன்
பார்வை என் காதலியாக மாற்றியது,
இரவுக்கனவு காண்கையில்-நீ
முதிர்ந்தகன்னி.

ஜெ.விஜயபாலன்
இளம் வணிகம் (இடை)

## சாதனை

காலத்தைக் காலம் ஒரு நாள்
அடையாளம் காணும்

க.இராஜா
இளம் கணினி (இடை)

## அடிமைத்தனம்

இந்தியை எதிர்த்து
ஆங்கிலத்திடம் அடிமைப்பட்டது
Tamil

சு.விஜய்வெங்கடேஷ்
இளம் கணினி (இடை)



## கனவு

மனிதன் உறங்கும்போது
உறங்காமல் இருக்கும்
மூளையின் செயல்பாடு.

கு.புவனேஸ்வரி
இளம் வேதியல் (இடை)

☎: 221143

மயிலாடுதுறையின்
புதிய காலணிகளின் தனி உலகம்

# சூப்பர்வாக்

Bata Action LIBERTY

ஸ்கூல் பேக், காலேஜ் பேக், லேடீஸ் பேன்ஸி பேக், இவை அனைத்தும் குறைந்த விலையில் உயர்ந்த தரத்தில் கிடைக்கும்.

185, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை.







உரிமை : ஜி. வாசுதேவன்

☎ வீடு : 225841
கடை : 221210

அழகான வீட்டுக் கதவுகளுக்கு மரத்தில் அழகிய பூ வேலை செய்ய

# நியு திருச்சி கார்விங்





மாடிப்படிகால் கடைசல்
நவீன இயந்திரம் மூலம் செய்யப்படும்

H.O.: 99, பூக்கடைத் தெரு கூறைநாடு.
மயிலாடுதுறை - 609 002.

B.O.: தலத் தெரு முருகு காம்பளக்ஸ் (தீயணைப்பு நிலையம் எதிரில்)
காரைக்கால் - 609 602

# வெற்றி நிச்சயம்




கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளி வரும் மாணவர்களிடம் எத்தனை சுமைகள், எத்தனை எதிர்பார்ப்புகள், எத்தனை ஆசைகள், எத்தனை கனவுகள். . . . ஏராளம். இவை அனைத்தையும் நிறைவேற்றுவது என்பதை ஒவ்வொரு மாணாக்கரும் கடமையாகக் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் நான் ஓர் அதிகாரியாக, அலுவலராக (OFFICER) வியாபாரியாக, (BUSINESS MEN) மருத்துவராக (DOCTOR) பொறியாளராக (ENGINEER) மாவட்ட ஆட்சியாளராக (COLLECTOR) வர வேண்டும் என ஒவ்வொரு மாணவரும் எண்ணிக் கொண்டு தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகிறான்.

இவர்கள் அனைவரும் வெற்றி பெறுகிறார்களாி அனைவருக்கும் வெற்றிபெறும் வாய்ப்பு கிடைக்கிறதாி மாணாக்கர்களில் சில பேர் சரியான வழிகாட்டுதல் இல்லாததால் திசைமாறிச் செல்லும் மந்தை ஆடுகளாகச் செல்கின்றனர். ஒரு சிலருக்கே இந்த வாய்ப்பு கிடைக்கின்றது. சிலருக்கு இந்த வாய்ப்பு கிடைத்தும் பயன்படுத்துவதில்லை. மாணாக்கர்களின் எதிர்காலம் இன்று பந்தயக் குதிரையாகிவிட்டது. இதில் படித்தவர்கள் அனைவர்களுமே ஓடுகின்றனர். அவர்களில் ஒரு சிலருக்கே வெற்றி கிடைக்கிறது.







போட்டியில் பந்தயக் குதிரைகளாகச் செல்லும் மாணாக்கர்களுக்குச் சில எளிய வழிகாட்டுதல், தாங்கள் எதிர்காலத்தில் பணி புரிய விரும்பும் துறையைத் தெளிவாக தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வு செய்த பின் வேறு துறையைத் நோக்கிச்செல்லுதல் கூடாது. ஒவ்வொரு மாணாக்கரும் எத்தனை முறை தோற்றாலும் தன் இலக்கை அடைவதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். தோல்வியைக் கண்டு துவள்வதோ, மனம் தளர்வதோ கூடாது. மீண்டும் ஒரு முறை முயற்சி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முன்பெல்லாம் தனியார் அல்லது அரசு ஊழியர்களைத் தேர்தெடுப்பதற்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வந்தன. ஆனால்,கல்வித் தரத்தை மேம்படுத்தவும், ஊழியர்களின் திறமையை சோதிக்கவும் இன்று தேர்வாணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இனி நாம் எதிர்காலத்தில் இவைகளின் உதவியுடன் பணிகளைப் பெற முடியும். அவைகளில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே உங்களுக்காகக் கொடுத்திருக்கிறோம். . . .

## ரயில்வேத் துறை:

இத்துறையில் பணியாளர்களைத் தேர்வு செய்யத் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. இதை RRB (RAILWAY RECRUITMENT BOARD) என்று கூறுகிறோம். இத்தேர்வு இந்திய அளவில் நடத்தப்படும் தேர்வு. இதற்குக் கல்வித்தகுதி பட்டப்படிப்பு மட்டுமே. இந்த தேர்வு இரண்டு நிலைகளில் நடத்தப்படுகின்றன. i) TECHNICAL ii) NON TECHNICAL அதில்

தொழில்நுட்ப பிரிவு (TECHNICAL CADRE):

**Electrical, Electronics, Welding, Turner, Fitter, Wireman, Electrician, Etc.,**

தொழில்நுட்பம் அல்லாத பிரிவு (NON TECHNICAL CADRE):

**Proficinary Assistant Station Master, Commercial Clerk,Train Examiner, Guard, Ticket Collector, Teacher, Para-Medical Staff, Nurse, Etc.,**

## பணியாளர் தேர்வாணையக் குழு: (Staff Selection Commission)

இது இந்திய அளவில் நடத்தப்படும் குழு. இது இரண்டு நிலைகளில் நடத்தப்படும்.

i) நுழைவுத் தேர்வு (PRELIMINARY EXAM)
ii) முதன்மைத் தேர்வு (MAIN EXAM)

கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை.

ஏ
வி
சி

ஸ்ரீம் ☎ : 242015

# SHREEM READYMADE

PASSION FOR FASHION

43/1, Mahadhana Street,
Mayiladuthurai - 609 001

Authorised Dealer for

## Live-in Jeans

- Tshirts
- Shirts
- Trousers
- Perfumes
- Wallets
- Night Pants
- Bermudas
- Caps
- Belts





இ
த
ழ்

Phone No:220486

cell:9843030486

# Micro - Chip

COMPUTER SALES, SERVICES AMC, AND
COMPUTER PERIPHERALS

We are conducting Hardware Course

1. INTRODUCTION
2. ASSEMBLING
3. INSTALLATION
4. TROUBLE SHOOTING
5. NETWORKING

Contact :

No. 4, Agarasasthirigal Building, 1st floor,
77, Pattamangala Street,
Mayiladuthurai -609 001.

**UPSC (Union Public Service Commission)**

இது அனைத்துத் துறைகளுக்கும் பணியாளர்களைத் தேர்வு செய்யும். CIVIL SERVICE EXAM (IAS - INDIAN ADMINISTRATIVE SERVICE, IPS - INDIAN POLICE SERVICE, IFS - INDIAN FOREIGN SERVICE)

ஏ வி சி

இந்த தேர்வுக்குக் கல்வித் தகுதி - பட்டப்படிப்பு அல்லது பட்ட மேற்படிப்பு (GRADUATE (OR) POST GRADUATE)

**BSRB (Bankling Service Recruitment Board)**

இது இந்திய அளவில் நடத்தப்படும் தேர்வு. வங்கிகளுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்வதே இந்நிறுவனத்தின் பணியாகும். இந்த நிறுவனம் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுத்துப் பணியில் அமர்த்துகிறது. இதற்குக் கல்வித் தகுதி - பன்னிரெண்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை.

**TNPSC (TamilNadu Public Service Commission)**

இது தமிழ்நாடு அளவில் நடத்தப்படும் தேர்வு. இத்தேர்வு எழுதக் குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு தேர்வு பெற்றிருக்கவேண்டும். கல்வித்தகுதி - பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை. இதில் Group I முதல் VIII வரை உள்ளது. இத்தேர்வில் துணை மாவட்ட ஆட்சியர் (Sub Collector) முதல் அலுவலக உதவியாளர் (Office Assistant) வரை உள்ள பதவிகளுக்குப் பணியாளர்களைத் தேர்வுச் செய்யும்.

நாம் கற்ற கல்வியை நமது வாழ்க்கையின் திறவுகோலாகவும், ஊன்றுகோலாகவும் பயன்படுத்த வேண்டும். ஏதோ கல்லூரிக்கு வந்தோம், கல்விக் கற்றோம், பட்டம் பெற்றோம் என்றில்லாமல் அதன் முழு மதிப்பை அறிந்து பயன்படுத்தும் போது தான் அது நமது வாழ்க்கையை மேம்படுத்தும். ஒரு மாணவன் அவன் கற்ற கல்வியின் முழுப் பயன் அறிந்து பயன்படுத்தும்போது தான் அவன் வாழ்க்கையின் அனைத்து பிரச்சனைகளையும் தன்னைத் தானே சரிப்படுத்திக் கொள்ளுவான். "தேர்வ எழுதி வெற்றி பெறுவோம்" என்று தேர்வு எழுதத் தொடங்குங்கள்.

*வெற்றி நிச்சயம்!*

இந்தியாவிலேயே சென்னைப் பல்கலைக்கழகம் தான் 1987 ஆம் ஆண்டு முதல் பெண்களை மருத்துவப் படிப்பிற்குச் சேர்த்துக் கொண்டது.

**வே.வெண்ணிலா**
இளம் வேதியல் (முதல்)

து ணு க்



## மீண்டும் சந்திப்போம். . .

முகவரி மறக்கலாம்
முகங்கள் மறப்பதில்லை,
கனவுகளுக்கு மேல் கனவுகளாய்
இருந்த நமக்கு-இன்று
பிரிவுகளுக்கு மேல் பிரிவுகள்
ஒரு தோட்டத்து மலர்களாய்
இருந்த நாம் இன்று
மாலைகளாய் மாற
மாற்றிடம் செல்கிறோம்,
நாம் பழகிய நாட்களை
நினைக்கும் போது
ஈரமாகிறது கண்கள்,
கண்ணீரைத் துடைத்து விட்டன
காலத்தின் கைகள்,
வானத்து நட்சத்திரங்களாய்
நாம் இருப்போம்
ஒரு பகல் முடியட்டும்
மீண்டும் சந்திப்போம்.

ந.சந்திரலேகா
இளம் கணினி (முதல்)

## மது

மது சிரித்தது
கீழே விழுந்த கிண்ணத்தைப் பார்த்து
கிண்ணம் பேசியது
"உன்னை ஒரு நிமிடம்
சுமந்த எனக்கே இந்த நிலை!
உன்னைக் குடித்தவன் நிலை ?

சி.சங்கீதா
இளம் வணிகமேலாண்மை (முதல்)

## அபார்ஷன்

கருவறைக்குள்
ஒரு
கல்லறை.

இரா.இராஜா
முதுநிலை கணிதம் (முதல்)

## வரதட்சணை

தாமரை நீ வரும்போது
கூடவே ஏன்
உன் இலை?

பு.அன்புராஜ்
இளம் வணிகம் (இடை)

வழக்கமான இசையிலிருந்து வேறுபட்டுத் தன் இசை மூலம் தமிழகத்தைக் கிராமத்திற்கு அழைத்துச் சென்ற பெருமை இளையராஜாவுக்கு ரொம்பவே உண்டு. அதேபோல கிராமியப் பாடல்கள் மட்டுமல்லாமல் கல்லூரி, காதல் போன்றவற்றைத் தன் கம்ப்யூட்டரால் கட்டிப்போட்டு வைத்துள்ளவர் ஏ.ஆர்.ரகுமான். இவர்களுக்கிடையே எத்தனைப் பேர்களைச் சந்தித்தது நம் இசை உலகம் அப்படிவந்தவர்களில் மிக முக்கியமானவர் நம் 'அமரன்' ஆதித்யன்

எங்க சார் போனீங்க? என்ன சார் பண்றீங்க? எப்படி சார் இருக்கீங்க? இப்படியெல்லாம் கேட்கத் தோன்றுகிறதா! கவலையை விடுங்க. . . உங்களின் சார்பாக நாங்களே கேட்டுவிடுகிறோம். (மயிலைக்கு வந்த அவரை நம் ஆசிரியர் குழு சந்தித்த போது)

# அவரும் திமிறென்னு அவுட்டாயிருறாரு!

- ஆதித்யன்

**மறைக்காம உண்மையைச் சொல்லுங்க சார்?**

(சிரித்துக் கொண்டே) திரைத்துறையில் இல்லைன்னாலும், இசைத்துறையில் பிஸியாக இருக்கிறேன். இங்கு நம்முடைய திறமையை நமக்கு கிடைத்த 1, 2 படங்களிலேயே நிரூபிச்சிக்க வேண்டிய கட்டாயம். நானும் என்னுடைய ஆரம்பத்தில் அமரன், சீவலபேரி பாண்டி போன்ற வெற்றிப் படங்களுக்கு இசையமைத்திருக்கிறேன். அமரன்ல கானா பாடல்களைப் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிச்சி வச்சேன். இப்ப அது நல்லா போய்ட்டு இருக்கு. அதுமட்டுமல்லாமல் டி.வியிலும் கொஞ்சம் பிஸியாகவே இருக்கேன்

**இசைத்துறைக்கு. . . .**

நமக்குள்ளேயே எல்லாத் திறமையும் அடங்கியிருக்கு. நம் தாய் தந்தையின் கடமைகளை நிறைவேற்றிட்டு வாய்ப்பு வரும் போது நமது திறமையைக் கண்டிப்பாக வெளிப்படுத்தணும். இதே போல்தான் நானும். எனக்குள்ளே இசை வளர்ந்திருக்கு. அதை வெளிப்படுத்தினேன். அதனாலத்தான் என்னால சினிமாவுல நுழைய முடிஞ்சிச்சு.





**இன்றைய புதியவர்கள் பற்றி . . .**

இப்ப வர்ற இசைகள் எல்லாமே நல்லா இருக்கு. காலக்கட்டத்திற்கு எற்ற மாதிரியும் இருக்கு. மெலடியுடன் வெஸ்டன் மியூசிக் சேர்ந்து தரமானதாக இருக்கு. இது ஆரோக்கியமான ஒன்று. இப்ப வர்றவங்களுக்குத் திறமை மட்டுமல்லாமல் அதிர்ஷ்டமும் வேணும். எல்லாருமே மேடைக்கு வரணும். வரும்போதுதான் அவர்கள் திறமை வெளிப்படும். புதுசா வர்றவங்களுக்கு சின்னத்திரை, பெரியத்திரையும் நல்லா வாய்ப்பு கொடுக்க முன் வரணும்.

**கல்லூரிப் பருவ ஆதித்தியனுக்கும், இசையமைப்பாளர் ஆதித்தியனுக்கும் உள்ள வித்தியாசம். . . . .**

கல்லூரிப் பருவத்தில் நானும் சராசரி மாணவனைப் போலத்தான். சுமாராகத்தான் படிப்பேன். ஆனால் நீங்கள் என்னைப் பேட்டிக் காணும் இந்நிலைக்கு முக்கியக் காரணம் இசைத்துறைதான். எந்தத் துறையாக இருந்தாலும், அதில் பயபக்தி வேணும். அதைத்தான் இசையமைப்பாளராக இருந்து கொண்டு செய்கிறேன். இதுதான் கல்லூரியிலும், இசையமைப்பிலும் எனக்குள்ள வித்தியாசம். ஏ.ஆர்.ரஹ்மான் என்ன படிச்சிருக்கார்னு தெரியாது. ஆனா, இசையில் நல்ல நிலையில் இருக்கிறார்.

**ஆங்கில பாப் பாடல்களைப் போலத் தமிழ் பாப் பாடல்கள் சிறப்பாக மக்களைச் சென்றடைவதில்லையே ஏன்?**

இப்பல்லாம் பாப் பாடல்கள் நம் தமிழ் படங்களிலேயே வந்துகிட்டு இருக்கு. இந்தி, ஆங்கில பாப் பாடல்களுக்கு டி.வி காரங்க, புரடியூசர்கள் ஆகியோர் சான்சு கொடுத்து என்கரேஜ் பண்றாங்க. அதைப்போல தமிழ் பாப் பாடல்களையும் பிரபலமாக முன் வர வேண்டும். நான் வெளிநாடுகளுக்கு இசை நிகழ்ச்சிக்கு போயிருந்த போது ரிமிக்ஸ் பாடல்களுக்கும், தமிழ் பாப் பாடல்களுக்கும் நல்ல வரவேற்பு இருந்ததைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன்.

**மற்றத் துறையில் உங்களைப் பற்றி. . . .**

கவிதையில் கொஞ்சம் ஆர்வம் உண்டு. அதைவிட சமையல் கலையில் எனக்கு விருப்பம் அதிகம். இசையைப் போலவே சமையலும் எனக்குப் பிடிக்கும். இசை செவிக்கு விருந்து. சமையல் வயிற்றுக்கு விருந்து. இவை இரண்டையுமே ரசித்து செய்வேன். இவை இரண்டும் இல்லாமல் நான் இல்லை. இசை எனக்கு நல்ல நண்பன்.

**'கேசம்' பற்றி . . . .**

இது ஒரு தனி ஸ்டைல் போலதான். இப்ப ரஜினி இருக்கார்னா அவருக்குன்னு தனியா ஒரு ஸ்டைல் வச்சிருக்காரு. இது என்னுடைய உருவத்திற்குத் தகுந்த மாதிரி வச்சிருக்கேன். வெஸ்ட்டன் கல்சரைப் பின்பற்றி வச்சிருக்கேன். இதை என்னோட ரசிகைகளும் விரும்புறாங்க.

# VEENUS

**Systems & Software**

**Ph : 223159**

Computer


- Sales
- Service
- Rental
- Maintanence
- Networking

Software

- Development
- Training

Expert in :

- Chip level Sercice,
- Monitor
- SMPS
- UPS



***CONTACT :***

*#116, No. 2 Road, Raja Lodge,*
*Mayiladuthurai - 609 001.*






**ஒவ்வொரு ஆணோட வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள். . . உங்களோட வெற்றிக்குப் பின்னால். . .?**

*பெண்ணால மட்டும் வெற்றி கிடைக்காது. 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்று கூடச் சொல்லியிருக்காங்க. ஏன் பெண்ணால மட்டும் தான் வெற்றி கிடைக்க வேண்டுமா? வேறு ஏதாவது சக்தி மூலம் வெற்றி இருக்க கூடாதா? எனக்கு முன்னாடி எங்கப்பா ஆர்மோனியம் வாசிச்சி இசை நிகழ்ச்சி நடத்தியிருக்காங்க. அவங்களைப் போலதான் நானும். என்னோட வெற்றிக்கு எங்கப்பாவோட ஊக்கம் தான் காரணம்.*

**உலகக் கோப்பை பற்றி . . . .**

*எனக்குக் கிரிக்கெட்டில் ஆர்வம் கிடையாது. நம்ம டீம் நல்லா ஆடணும். ஒருசில மேட்சுல நல்லா ஆடறாங்க. ஒரு சில மேட்சுல டக் அவுட் ஆயிடுறாங்க. நம்ம டெண்டுல்கரை எடுத்துக்கோங்க அவரும் திடீரென்று அவுட் ஆயிடுறாரு. விளையாடுறதுக்கும் ஒரு லக் வேணும். அது இருந்தால் நம்ம கண்டிப்பா ஜெயிச்சுடலாம்.*

*சந்திப்பு - ஆசிரியர் குழு.*

# என் பார்வையில்

*"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றனர் முன்னோர்கள். அவர்கள் பேச்சைத் தட்டாமல் கேட்டனர். அதன் விளைவு இன்று சந்து பொந்து எங்கிலும் கோவில்கள். அதில் தவறாது வரும் பண்டிகைகள். அன்று ஊர் கூடி தேர் இழுத்தனர்., ஒற்றுமையாக இன்று சந்து பொந்துகளில் கோவில்கள் இருந்தும், தேர் இழுப்பது புல்டோசர். நம் பண்பாடு, கலாச்சாரம், ஒற்றுமை எல்லாம் தூரப் போய் விட்டது. "கொன்றால் பாவம் தின்றால் போச்சு" என்று யார் சொன்னாரோ, ஆடு, கோழி வெட்டாத நாளே இல்லை. பாவம் சாமி. அன்பே தெய்வம் என்று தெய்வத்தை ஏமாற்றுகின்றனர்.*

*சந்து பொந்துகளில் பண்டிகையின் போது ரோட்டில் போவோர், வருவோர் மீது சிலர் சாயம் பூசுகின்றனர். மறுபக்கம் காசு கேட்கின்றனர். சில இடங்களில் மேடையில் ரெக்கார்டு ஆட விடுகின்றனர். அதுவும் அசிங்கமாகக் காலையிலிருந்து மாலை வரை கோவிலில் பாடும் பக்தி பாடல்கள். காதை மூடக்கூடிய பாடல்களாகப் போட்டு பக்தர்களை மனம் நோக வைக்கிறார்கள். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் தேவை தான். கோலாட்டம், கும்மி, நாட்டுப்பாடல், கபடி, தாயம், குச்சிவிளையாட்டு இவையெல்லாம் இருக்க, இவைகளை விட்டு விட்டு நம் பண்பாடும், கலாச்சாரமும், சீரழிய இந்தக் கோவில் விழாக்கள் தேவையா? வேண்டவே, வேண்டாம், இந்த விபரீத விளையாட்டு.*

**இரா.ரவிச்சந்திரன்**
முதுநிலை தாவரவியல் (முதல்)

குறைந்தவிலை!

அதிக தரம்!

மயிலாடுதுறை மாநகரில் ஓர் இனிய உதயமாக
சுடிதார் மெட்டீரியலுக்கு என்றே பிரத்யேகமாக
அமைக்கப்பட்ட ஸ்தாபனம்



"தாரா"
சுடிதார்
மெட்டீரியல்ஸ்

15, ஹமா சென்டர், 141, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை - 609 001.
(நகராட்சி மேல்நிலைப்பள்ளி எதிரில்)

எங்களிடம் மகளிர்க்கான சுடிதார் மெட்டீரியல்ஸ், சுடிதார் ரெடிமேட்ஸ், சிம்மீஸ், ஷால்ஸ், நைட்டீஸ், பேண்டீஸ் அனைத்தும் அதிக தரத்திலும், குறைந்த விலையிலும் கிடைக்கும்.

பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு ஆண்டுமுழுவதும் 5% தள்ளுபடியில் சுடிதார் மெட்டிரியல்ஸ் கொடுக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு முறை எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்.
பிறகு நீங்கள் எங்கள் கடையின் நிரந்தர
வாடிக்கையாளராக மாறி விடுவீர்கள்.






# தமிழுக்கு நிகரா ?...

*இச்சிறு கட்டுரை என்னைப் போல் ஓராயிரம் இளையோர் உள்ளங்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதே . . .*

ஈரைந்து மாதங்கள் சுமந்து குருதியோடு சதையையும் உயிரையும் சேர்த்து அனுப்பிய தாய்க்கு ஈடானவள், அவள் வலியை அறிந்த தாய்மொழி - நம் தமிழ்மொழி. ஆனால், மூடர் பலர் இதை உணரவில்லை.

நம் தாய்த் தமிழை மறப்பது, ஈன்ற தாயை மறப்பது போல்ஆகாதா? அதைக் காட்டிலும் வேறொரு பாவச்செயல் ஏதேனும் உண்டா? ஆங்கில மோகம் தற்போதுள்ள தமிழரை நிலைகுலைத்து அலைக்கழித்து வருகிறது. "மாற்றான் தோட்டத்து மல்லிகை மலர்ந்து கிளர்ச்சிப் படுத்தினாலும், நம் வீட்டுப் பாரிஜாதம் அடக்கமான, அமைதியான இன்ப மணத்தைப் பரப்புவதை பலர் உணராதது வருந்தக் கூடிய விசயம்." அதேபோல் நம் மொழிச் சிறப்பை அயலோர் உணர்ந்த அளவிற்கு நாம் அறியாதது ஒவ்வொரு தமிழனும் வெட்கப்பட வேண்டிய விசயம். ஆங்கிலம் பேசுவதில் தவறு நேர்கிறதே என வருந்தும் நாம், சரியில்லாத தமிழ் உச்சரிப்பைப் பெருமையாகக் கருதுகிறோம். என்ன ஓர் அவலநிலை.

"தமிழயாத் தாழ்வான் தமிழன் - அவனே
தமிழுயரத் தானுயர்வான் தான்!"

என்பது பாவாணர் வாக்கு. முகவரியைக் கொடுப்பது ஒவ்வொருவனுக்கும் அவனது தாய் மொழியே. ஆனால், அம்முகவரியையே தொலைத்துவிட்டு வழி தேடுகிறார்கள், நம் தமிழர்கள். உயர்தனிச் செம்மொழி என்று வல்லுநர்கள் ஆராய்ந்ததில் தமிழ் மொழி இடம் பெற்றிருப்பதும், ஆங்கிலம் இடம் பெறாததும் கவனிக்கத்தக்க விசயம். ஆயினும், இவ்விசயத்தைப் பொறுத்தவரை தமிழர் செவிடராய் இருப்பது ஏனோ? இக்கேள்வி ஒவ்வொரு தமிழனின் குருதியிலும் ஓடினால், கேள்விக்கு விடையறிந்தால் தமிழை உணர்ந்து நரம்புகள் கிளர்ந்தெழுந்தால் போதும். நம் மொழி நாளை உலக மொழியாகலாம். பல்லோர் வியக்கலாம்.

"தாய்க்கு நிகரான உறவும் இல்லை
தமிழுக்கு நிகரான மொழியும் இல்லை"

என்ற கூற்றுக்குத் தக்கவாறு தாயை எங்ஙனம் உயிர் பிரிகையிலும் மறக்கலாகாதோ அவ்வாறே தாய் புகட்டிய நம் தமிழையும் மறக்கலாகாது.

கி.இராஜேஸ்வரி
இளம் இயற்பியல் (இடை)



பரிசளிக்கும் தருணங்கள்
பரவசமாய் இருக்கட்டும் . . .



என்றும் கனிவான சேவையில் . . .

ஷாலிமார்'ஸ்
தி ரியல் கிஃப்ட் ஷாப்

Exciting Discount

5%
For All
GIFT ITEMS

(COLLEGE STUDENTS ONLY)

- Gift Articles
- Home Interiors
- Greeting Cards
- Perfumes
- Belts
- Sun Glasses
- Fancy Imitations




SHALIMAR'S



41, Avayambalpuram,
(Opp. to Deen Plaza & LIC)
Mayiladuthurai.
☎ : (04364) 221284
Mob: 98431 53015





# மாணவர்களே நாம்

ஆந்தையைப் போல் விழித்திருப்போம்!
எருதைப்போல் பொறுமையாய் இருப்போம்!
எறும்பைப் போல் ஊக்கமாய் இருப்போம்!
கவரி மானைப் போல் தன்மானமாயிருப்போம்!
காளையைப் போல உழைத்திருப்போம!
காகத்தைப் போல் பகிர்ந்திடுவோம்!
கிளியைப் போல் இனிமையாக பேசுவோம்!
குருவியைப் போல் சேமித்திடுவோம்!
சிங்கத்தைப் போல தைரியமாக இருப்போம்!
தேனீயைப் போல் சுறுசுறுப்பாய் இருப்போம்!
நாயைப் போல் நன்றியாயிருப்போம்!
பசுவைப் போல் சாதுவாயிருப்போம்!
பருந்தைப் போல் கூர்மையாய் இருப்போம்!
புலியைப் போல் கௌரவமாய் இருப்போம்!
மொத்தத்தில் கலாமைப் போல் சாதனைப் புரிவோம்!

சௌ. சிவச்சந்திரன்
இளம் பொருளியல் (இடை)

# புதியதோர் பாரதம் படைப்போம்

வாலிபனே!
வேரறுக்க வீறுகொண்டு எழு,
உறங்கும் உனது கண்களை
விழிக்கச் செய்-அப்போது தான்
நிராகரிக்கப்பட்ட
உண்மைகள்-உன் முன்
நிழலாய்த் தெரியும் . . . !

தவறான உனது
வழிகளை மாற்றினால் தான்
பார்போற்றும் பல
சரித்திரங்களை
உருவாக்க முடியும் . . .

அலைபாயும் உனது
எண்ணங்களுக்கு
வடிவம்கொடு-அவை
உறுதியுள்ளதாய்
மாறமுடியும் என்றால் . . .

உன் பார்வையை
உணர்வுமிக்கதாய் மாற்று
அப்போது தான்-நீ
உறங்கும் உண்மைகளையும்
ஓங்கி வளரும் வன்முறைகளையும்
அழித்தொழிக்க முடியும் . . .

முடியும் என்று - நீ
முயன்றால் ஊழலில் திளைக்கும்
அரசியல்வாதிகளை ஒழித்து
ஊழலில்லா புதியதோர்
பாரதத்தை
உருவாக்க முடியும் . . .

தே.கணேஷ்பிரபு
இளம் வணிகம் (இடை)





Browsing
@
JEECCorp Netcafe
Rs. 20/- Per hr

Features
Games, Email, Voice Chat, Webfone, Printout

Privacy cabin, parking facility, free Guidance, Pleasant environment

Please Visit :

**JEECCorp Netcafe**
**38, Kalarai Thoppu Street, (Near Canara Bank)**
**Mayiladuhturai.**

**JEECCorp DTP Centre**
**128, Gandhiji Road, Mayiladuthurai.**

Email, Scanning, Printout & Project work done
Hardware & Servicing also done

*For Details please contact :*

**Ln. J. STEPHEN RAJ**
128, Gandhiji Road, Mayiladuthurai
☎ : 04364 241955, 242206, 223766

*Offline system provided for project student on hourly basis.*

இருக்கும் போது இரத்த தானம்!

இறந்த பின் கண்தானம்!

எங்களிடம் அனைத்து விதமான பவர் கிளஸ்கள், கூலிங் கிளாஸ்கள், காண்டாக்ட் லென்சுகள், காண்டாக்ட் லென்ஸ் சொலிசன் மற்றும் அனைத்து விதமான ஃபிரேம் வகைகளும் கிடைக்கும்.



G.V.S.
ஆப்டிக்கல்ஸ்

R.D. காம்ப்ளக்ஸ்,
அரசு பொது மருத்துவமனை சாலை,
(மதனா மருத்துவமனை பின்புறம்)
மயிலாடுதுறை. ☎ : 222386





# இமேஜ்




'ஒரு மனிதன் எப்படிப்பட்டவன்' என்பதை அவனுடைய இமேஜை வைத்துக் கண்டுக்கொள்ளலாம். எந்த ஒரு மனிதன் தன்னுடைய இமேஜை நல்ல முறையில் உயர்த்துகிறானோ? அவன் தான் சமூகத்தில் உயர்ந்த மனிதனாகக் கருதப்படுவான். மற்றவருடைய மனத்தில் படிகின்ற உங்களுடைய மனத்தோற்றம் தான் உங்களின் இமேஜைத் தெளிவாகக் காட்டும். மற்றவர்களின் மனத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உங்களுடைய ஒவ்வொரு செயலும் உங்களின் இமேஜை உயர்த்தும். "எதிர்காலத்தில் நீங்கள் எப்படி வர வேண்டும்?" என்ற கற்பனையே உங்களுடைய எதிர்கால இமேஜின் அடித்தளம். "நான் அதிர்ஷ்டசாலி இல்லை, வீக்கான ஆள், எனக்குப் படிப்பு வராது" என்று புலம்புபவர்கள் தான் அவர்களின் இமேஜைக் குறைத்துக் கொள்வார்கள். இமேஜ் என்பது ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். உங்கள் இமேஜை உங்களால் தான் உருவாக்க முடியும்.

இமேஜை உருவாக்குவதில் கற்பனைக்கு முக்கியப் பங்கு உண்டு. **"கற்பனை உங்களை வடிவமைக்கும், கற்பனை உள்ளவன் உலகை ஆளுகிறான்"** என்று கூறினான் நெப்போலியன் அவனுடைய வாழ்கையே அந்த வைர வரிகளுக்கு நிருபணம்.

வெற்றிக்கான இலக்கை நாம் நிர்ணயித்துச் செயல்படாத போதுதான் தோல்வியைத் தழுவுகிறோம். உங்கள் எதிர்காலம் பற்றிய கற்பனையே உங்களை நல்வழிப்படுத்துகிறது. உங்களால் செய்ய முடிந்ததைக் கற்பனையாக்குங்கள். அந்த கற்பனையே உங்களை. வெற்றியை நோக்கி இழுத்துச் செல்கிறது. "மாற்றம் என்பது தானாக வருவதில்லை முயற்சியில், நம்பிக்கையில், உழைப்பில் தான் மாற்றம் வருகிறது!" உங்களில் மாற்றம் ஏற்படும்போதுதான் உங்கள் இமேஜ் உயர்கிறது. பிரபலமானவர்களின் பிரபலம் எப்படி வந்தது என்றால், அவர்கள் தங்கள் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தினார்கள். அதேபோல் நமக்குள்ளும் ஏதாவது ஒரு விஷேசத் தன்மை கட்டாயம் . நாம் எல்லோருமே ஒரே மாதிரியாகப் படைக்கப்படவில்லை. அவரவரிடம் ஒரு தனித்துவம் இருக்கிறது. ஒவ்வொரு செயலிலும் உண்மை, உழைப்பு, உத்வேகம் இருந்தால் எல்லாரும் நல்ல இமேஜைப் பெற முடியும். உங்கள் கற்பனையை Positive ஆக உபயோகித்தால் உங்களின் இமேஜ் Positive ஆக அமையும். கற்பனை சக்தி மிக்கது. கடுமையாக உழைத்தால் கற்பனை வெகு சீக்கிரமாக நிஜமாகும். கற்பனையை நிஜமாக்கி உங்கள் வாழ்வை முன்னேற்றி பெற்றோருக்குச் சேர வேண்டிய பெயரையும் புகழையும் தேடித் தாருங்கள்.

தேவர்
பாத்திரக் கடை

**S.N. குருமூர்த்தி & சன்**

பித்தளை & எவர்சில்வர்



பெரியகடைத்தெரு,
மயிலாடுதுறை -1.
☎ : 222816



# பத்திரிகையும், அரசியலும். . .

உலகில் மிகப்பெரிய புரட்சிகளும், ஆட்சிமாற்றங்களும் ஏற்பட மக்களுக்கு எழுச்சிக் கருவியாகச் செயல்படுவது நமது பத்திரிகைகளே. இன்றைய செய்திகள் நாளைய வரலாறு. அரசியல் ஆட்சியின் நான்கு தூண்கள் - ஆட்சி, நீதி, நிர்வாகம் மேலும் நமதுப் பத்திரிகைகள் நான்காவது தூணாகவே கருதப்படுகின்றன.

பத்திரிகைகளில் வெளியிடப்படும் அரசியல் விமர்சனங்களும், விவாதங்களும் அரசியல் வாழ்க்கைக்கு ஒரு வழிக்காட்டியாக அமைவதோடு மட்டுமல்லாமல் அரசியல் பிழைத்தோருக்கு அறமே கூற்றாகும் என நினைவூட்டுகின்றன.

இன்றைய சூழலில் காலத்தைக் கடந்து வந்துள்ள உலகப்பத்திரிகைகளில் சில :- தி டைம்ஸ் ஆப் இந்தியா, தி பிரிட்டிஷ் நியூஸ், தி யுனெஸ்கோ கூரியர், தி ஜெர்மன் நியூஸ்.

தமிழ்ப் பத்திரிகை உலகின் மிகப்பெரிய சாதனை நாயகன் திரு.வி.கல்யாணசுந்தரனார் ஆவார். அவர் ஆரம்பித்த "தேசபக்தன்" (1917) என்ற இதழ் அன்றைய அரசியல் சூழ்நிலையை வெகுவாகச் சாடியுள்ளார். அவர் அன்றைக்கு எழுதியிருந்த வரிகளில் : - தற்கால இந்திய ஆட்சி முறையில் தருமமில்லை என்பது எனது அனுபவத்தில் பெற்ற உண்மை. மற்றவர் எம்மை என்ன செய்யினும் செய்க. இதுவே அதற்குச் சான்று.

இந்தியா மட்டுமல்லாது உலகநாடுகளை எடுத்துக் கொண்டால் பல உதாரணங்களை நாம் முன்வைக்கலாம். ரூசோவின் (1712 - 1778) எழுத்துக்கள் பிரஞ்ச் புரட்சிக்கு வழிவகை செய்தது. லெனின் போன்ற கம்யூனிஸ் தலைவர்களின் எழுத்துக்கள் ரஷ்யப் புரட்சிக்கு வழிவகை செய்தன. காரல்மார்க்ஸ் போன்றோர் கம்யூனிச சிந்தனைகளைப் பத்திரிகைகள் வாயிலாகப் பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்பினர்.

(தொடர்ச்சி - 79ஆம் பக்கத்தில்)

## அருள் புக்ஸ் & ஐஸ்கிரீம் பார்லர்

கல்லூரி மாணவர்கட்குத் தேவையான அனைத்து வகை நோட்டுகள்
பேனாக்கள் மற்றும் ஸ்டேஷனரி வகைகளும் குறைந்த விலையில்
தரமானதாகக் கிடைக்கும்.

எந்நாளும் சுவையான ஐஸ்கிரீம் வகைகள் கிடைக்கும்
வருகை தர வேண்டுகிறோம்.

## அருள் புக்ஸ்

ஏ.வி.சி. கல்லூரி (எதிரில்)
SMH பில்டிங், மன்னம்பந்தல்.

## ராஜா தையல் பள்ளி (மகளிர் மட்டும்)

162, ரஸ்தா மணவெளித் தெரு,
குருஞான சம்பந்தர் மெயின் ஸ்கூல் பக்கத்து தெரு, மயிலாடுதுறை - 609 001. ☎ : 226839

எங்களிடம் நவநாகரீக முறையில் சுடிதார்கள், ஜாக்கெட்டுகள்
தைத்துத் தரப்படும்.
சுடிதார் மெட்டீரியல்ஸ் கிடைக்கும்.







## சுஜா மியூசிக்கல்ஸ் & பொக்கே

உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அனைத்து பழைய பாடல்கள், புதிய
பாடல்கள், பக்தி பாடல்கள் பதிவு செய்யவும், ஆடியோ கேசட்டுகள்
வாங்கவும் நீங்கள் அணுக வேண்டிய இடம்

## சுஜா மியூசிக்கல்ஸ்

அனைத்துவிதமான சுப நிகழ்ச்சிகளுக்கும்சிறந்த முறையில்
இயற்கைப் பூக்களை வைத்துத் தயார் செய்த பூங்கொத்துகள்
(BOUQUETS) டோர் டெலிவரியும் செய்யப்படும். பத்து ரூபாயிலிருந்து
பொக்கே கிடைக்கும்.

எங்களிடம் சுவையான உலகத்தரம் வாய்ந்த

## சிவிதா ஐஸ்கிரீம்



உங்கள் இல்லங்களில் நடைபெறும் புதுமனை புகுவிழா, திருமணம்,
காதணி விழா, வளைகாப்பு, பிறந்த நாள் விழா மற்றும் அனைத்து
சுப நிகழ்ச்சிகளுக்கும் எல்லா வகையான குளிர்பானங்களும்
பெருமை சேர்க்கும் வகையில் ஆர்டரின் பேரில் குறித்த
நேரத்தில் குறிப்பிடும் இடத்தில் வழங்கப்படும்.

கிடைக்குமிடம் :

**சுஜா மியூசிக்கல்ஸ் & பொக்கே**
**அக்ஷய் ஐஸ் கிரீம்ஸ்**
25, வண்டிக்காரத்தெரு, மயிலாடுதுறை.
☎ : 228622

## வாருங்கள்...

தீவிர வாதம் வேண்டாம்,
நம் மனத்தில் பேதம் வேண்டாம்,
ஒருமைப்பாடு வேண்டாம், அதனால்
நம் வாழ்வில் பெருமை கூட வேண்டாம்,
இன்று பறக்க நினைப்போம்,
நாளை இவ்வுலகை அளக்க நினைப்போம்,
பைந்தமிழ் படித்துப் பார்ப்போம்,
புது பாரதத்தைப் பார்ப்போம்,
புது பாரதத்தைப் படைப்போம் ...

ஏ.ஆர். ரஞ்சனி
இளம் இயல்பியல் (முதல்)

## அவளொரு...



ஆ அவள் நினைவுகள் பாதரசம்
பாசத்தில் எனை மிதக்க வைத்ததால்,
ய் அவள் கண்கள் காந்தங்கள்
கனிவால் எனை ஈர்த்ததால்,
வ அவள் வார்த்தைகள் வைரங்கள்
என் அறியாமையைக் கூறுபோட்டதால்,
க அவள் புன்னகை சோடியம் ஆவிவிளக்கு
என் சோகங்களை உட்கவர்ந்ததால்,
ம் என் சோகங்களை உண்டாக்கிய
இய(ற்)ல்பியல் மாற்றங்களை உண்டாக்கிய
அவளொரு இயற்பியல் ஆய்வகம்.

ச.மீனா
இளம் வேதியல் (இடை)





# சுமையில்லை

கனவு
சுமையென்றால்
உறக்கமேது?

முள் சுமையென்றால்
ரோஜா ஏது?
வானம் சுமையென்றால்
பூமி ஏது?

தோல்விகள்
சுமையென்றால்
வெற்றி ஏது?

லட்சியங்கள்
சுமையென்றால்
லட்சங்கள் ஏது?

எதிர்ப்பு
சுமையென்றால்
உண்மையான
அன்பு ஏது?

துக்கங்கள்
சுமையென்றால்
வாழ்க்கை ஏது?

ச.கீதா
முதநிலை வரலாறு (முதல்)








04.10.02











"இந்திய முதலாளித்துவத்தின் நாற்றாங்கால்' என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட குஜராத்தில் தேர்தல் புயல் மெல்லக் கரையை கடந்து கொண்டிருந்த நேரமது. அச்சமயத்தில் நமக்கு ஒரு அழைப்பிதழ் வந்தது. வழக்கம் போல் இல்லாமல் அதில் ஒரு சிறப்பும் இருந்தது. என்ன சிறப்பு? என்று நீங்கள் கேட்பது எங்களுக்குப் புரிகிறது.

ஆனால் அதே ஆர்வம் தான் எங்களுக்கும். அழைப்பிதழை யார் அனுப்பியது? எங்கிருந்து வந்துள்ளது? எதற்கு வந்துள்ளது? என்று குற்றவாளியை விசாரிக்கும் சி.பி.சி.ஐ.டி. நமது மூளை அதே வேகத்துடனே அழைப்பிதழைப் பிரித்தோம். நமது எதிர்பார்ப்பை மேலும் உச்சக்கட்டத்திற்குக் கொண்டு செல்லும் உள்ளுரை. அந்த அழைப்பிதழை அனுப்பியது 'தமிழ்ச் சிற்றிதழ் சேகரிப்பாளர் **தி.மா.சரவணன்.** பொருள் - "பதினைந்தாவது தமிழ் சிற்றிதழ் மாநாடு". இடம் - அய்க்கஃப் அரங்கம், திருச்சி. அதைப் பத்திரமாக ஒளித்து வைத்துக் கொண்டோம். (பின்னால் உதவும் அல்லவா?) அதே சுறுசுறுப்போடு ஒரு இன்ஸ்டண்ட் மீட்டிங்கை (ஆசிரியர் குழுக் கூட்டம்) கூட்டி அவரவர் தங்கள் வரவை உறுதிபடுத்தி, ஒரு "இதழ்யாத்திரை" க்குத் தயாரானது நமது குழு. (நீங்களும் தான்)

# இரயில் பயணங்களில்...

ஆசிரியர் குழு

காலை சரியாக 5.00 மணிக்கு ரயில். தயார் செய்வதற்காக மூன்று மணிக்கே எழுந்தாக வேண்டியிருந்தது. மாலை 3.00 மணியே பார்த்து பழகிய நம் கண்களுக்கு "இரவு" 3.00 மணி புதுமையாகவே தெரிந்தது. ம்... என்ன செய்வது கிளம்பியாகணுமே.? எல்லாம் தயாராக எடுத்துக் கொண்டு வாசலில் நமக்காகக் காத்துக்கொண்டிருந்த நண்பர்களோடு அவசர அவசரமாகப் புறப்பட்டோம். சரியாக 4.47-க்கெல்லாம் ரயில் நிலையத்தை அடைந்து 4.48-க்கெல்லாம் டிக்கெட் வாங்கி, 4.49-க்குப் ஒன்றாவது பிளாட்பாரத்தில் தயாரானோம்.






பறந்து வந்த பாதைகள்

10 Years

வாடிக்கையாளர்கள் நம்பிக்கையில் முன்னனி. . .

- விமான டிக்கெட் விற்பனையில் முன்னணி . . .
- ஓமன் ஏர் டிக்கெட் விற்பனையில் தமிழகத்தின் நெ.1
- கல்ப் ஏர் டிக்கெட் விற்பனையில் தமிழகத்தின் நெ.2
- **ஏர் இந்தியா மற்றும் அனைத்து விமான டிக்கெட்டுகளின்** விற்பனையில் முன்னணி . . .

என்றும் உங்கள் அன்பான ஆதரவுடன். . . .

**கிரேட்வே ஏர் டிராவல்ஸ்**
42, ஆயிகுளம் ரோடு, கும்பகோணம்.
☎: 2432578, 2430786, 2401744, Fax : 2431478, Mobile: 098430 07858

கிளைகள்

28/5, நஜீம் காம்ப்ளக்ஸ், டவுன் எக்ஸ்டன்ஷன், மயிலாடுதுறை. ☎: 226215, 227315

J.B.காம்ப்ளக்ஸ் 35/B ப்ரோமேனேட் சாலை, கண்டோன்மென்ட் திருச்சி - 1 ☎: 2417478, 2417472

அன்புடன்,

IATA

**கிரேட்விங்ஸ் டிராவல்ஸ் (பி) லிட்.,**
59A, ஆஷா மேன்சன் மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை - 8. ☎: 044-28587701, 28594649, 52147786, 52147486

BPL mobile
Believe in

கிரேட்வே மொபைல் கம்யூனிகேசன்ஸ்
37D, ஆயிகுளம் ரோடு, கும்பகோணம்.
☎: 2425478, Cell : 098430 - 07846,47,49

10 years

மயூரி

பெண்கள் ஆடையகம்





152, மகாதானத் தெரு,
ICICI Bank எதிரில்,
மயிலாடுதுறை.

சுடிதார், பிளவுஸ் சிறந்த முறையில்
தைத்துக் கொடுக்கப்படும்.

புதுரக சுடிதார் மெட்டீரியல் கிடைக்கும்.

திருமணத்திற்கு நகைசெட் மற்றும்
பரதநாட்டிய டிரஸ் வாடகைக்கு
கிடைக்கும்.







மணி சரியாக 5.00 ரயில் வரப்போவதை எண்ணி எங்களிடையே ஒருவிதமான பரபரப்பு ஒற்றிக் கொண்டது. கனத்த மௌனம். பார்வையில் ஒரு மின்சாரம். வரப்போகுது. வரப்போகுது. வரப்...... போகுது. . . அட! வந்துவிட்டது. உடனே ஒரு ஒலிம்பிக் ஓட்டத்தைப் பிடித்து நமக்கென்று ரிசர்வ் செய்யப்பட்ட அன்ரிசர்வ் கம்பார்ட் மெண்டில் ஏறி. காலி இடத்தைப் பிடித்து உட்கார்ந்தோம். சற்று அனிச்சையாக மணிக்கட்டை சுழற்றியபோது அதிர்ச்சியானோம். இன்னும் என்னப்பா அதிர்ச்சி? என்கிறீர்களா வேறு ஒன்றுமில்லை. எங்கள் வாட்ச் 6.15 என்று காட்டியதற்குத்தான். (அதாம்பா, இந்தியன் ரயில்வே! என்று நீங்கள் கமெண்ட் அடிப்பது எங்களுக்கும் கேட்கிறது)

சற்று நேரத்தில் ரயில் புறப்பட. வழியனுப்ப வந்திருந்த நண்பர்களிடத்தில் விடைபெற்றுக் கொண்டு நம் பயணத்தைத் தொடங்கினோம்.

பயணம் தொடங்குகிறது. . . ....

எங்கள் கம்பார்ட்மெண்டில் நம்முடன் ஒரு "நாம் இருவர் நமக்கு ஒருவர்" இருந்தனர். வழியே சென்று நாமே அவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டோம். (என்னஇருந்தாலும் . சீனியர் அல்லவா) முன்னதாக ஒரு சராசரி பயணியைப் போலவே நாங்களும் அவரவர்களுக்கு விருப்பப்பட்ட இதழ்களை வாங்கி "ஸ்டாக்' வைத்துக் கொண்டோம். (படிப்பதற்கு மட்டும்) அதில் வாங்காத நண்பர் ஒருவர் "என்னைப் பொறுத்தவரைக்கும் இப்பல்லாம் புத்தகம் வாங்குவது ஒரு பேசனாயிடுச்சு. சும்மா. . . எதிரில் உட்கார்ந்து இருப்பவங்கக்கிட்ட பந்தா காட்ட. இதை ஒரு காரணமா வச்சியிருக்காங்க அவ்வளவு தான்" என்றார் ஒரு பிரபல இதழின் இணைப்பாக வந்த ராசி பலனைப் பார்த்தவாறே . . . . (பலன் : நிதானம்)

வழியில் எங்களைக் கடந்த ஒவ்வொரு ஊரும் எங்களுக்குள் தஞ்சை மாவட்டத்திற்கே உரிய அந்தப் பசுமையை உண்டாக்கியது. அதை ரசித்துக் கொண்டே வாங்கி வைத்திருந்த இதழையெல்லாம் படித்துக் கொண்டிருந்தோம். மெல்ல "பேப்பர்" கலாச்சாரம் முடிந்து. பேச்சு கலாச்சாரம் ஆரம்பித்தது. சுற்றுத்தர வேண்டுமா? நம்மவர்களுக்கு. எங்களில் சிலர் "ஏவாள் முதல் லேடன் வரை" பேசித் தீர்த்தனர். அப்போது எல்லாருக்கும் பிடித்தமான ஒரு பகுதிக்கு வந்தோம். வேறென்ன? சாப்பாட்டுக்குதான் (செவிக்கு உணவில்லாத போது . . . .) ஏற்கனவே சொல்லியிருந்தபடி நம் குழுவில் வந்த நண்பர் ஒருவர் வீட்டிலிருந்து எடுத்து வந்ததே காலை உணவானது. ஆனால், அந்த அரைகுறை சாப்பாட்டில் தான் எத்தனை இனிமை! இந்த நேரத்தில் மெகா சீரியலுக்கு இடையே வந்து

போகும் விளம்பரம் போல எதிரெதிரே வந்து சென்ற "எக்ஸ்பிரஸ்" களுக்கெல்லாம் வழிவிட்டு நின்றோம். ஒரு வழியாக "மலை" நகரை அடைந்து ஒரு பெருமூச்சு விட்டு நின்றது நமது ரயில்.

அங்குத் தெரியாத ஊரில் தெரிந்த நண்பரும், இளந்தூது (13-ம் ஆண்டு) ஆசிரியருமான இர.செ.விடுதலை (தற்போது செயிண்ட் ஜோசப் கல்லூரியில் படிக்கிறார்) நமக்காகக் காத்திருந்தார். அவரிடம் நம் அழைப்பிதழைக் காண்பித்து 'நிகழ்ச்சி நடைபெறும் இடம் அருகிலுள்ளது' என உறுதிபடுத்திக் கொண்டோம்.

அங்கிருந்து ஏறக்குறைய அரை மணி நேர பயணத்திற்குப் பிறகு நாம் சேர வேண்டிய இடத்தை அடைந்தோம். பிரபல செயிண்ட் ஜோசப் கல்லூரிக் காம்பவுண்டின் வால் பகுதியே "அய்க்கப்" அரங்கம். அரங்க வாயிலில் மாநாட்டுக் கொடி ஏற்றிக் கொண்டிருந்த நேரத்தில் நாம் நுழைந்தோம். உள்ளே நமது கல்லூரிக் கருத்தரங்க அறையைப் போன்ற ஒரு அறையில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வறையின் வாயிலில் இருந்த வரவேற்பாளர்கள் நம் பெயரைப் பதிவு செய்து கொண்டு அடையாள அட்டையும், கருத்தரங்கத்திற்குத் தேவையான இன்னும் சிலவற்றையும் கொடுத்து உள்ளே உட்கார வைத்தனர். இருக்கையில் உட்கார்ந்து யதேச்சையாகச் சற்று மேலேநிமிர்ந்த போது மிக பெரிய அதிர்ச்சி. ஆம். . அந்த அறையின் இரு பக்கங்களிலும் சரியாக இருநூறு தமிழ் சிற்றிதழ்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. (அதில் நம் **இளந்தூது**வும் ஒன்று) போஸ்ட் கார்டில் துவங்கி பிளேட் மேக்கிங் வரை அசத்தியிருந்தனர். அவற்றை ஒவ்வொன்றாக உட்கார்ந்து கொண்டே நோட்டமிட்டுக் கொண்டிருந்தபோது, திடீரென்று ஒருவர் நம்மிடம் வந்து "சற்று வந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாட முடியுமா? " என்றார். நமது உறுப்பினர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் 15வது தமிழ்ச் சிற்றிதழ் மாநாடு இனிதே தொடங்கிற்று. முன்னதாக ஒருசில காரணங்களால் விழா தாமதமானதால் ஏற்கனவே அவரவர்களுக்கு என்று ஒதுக்கியிருந்த நேரம் குறைக்கப்பட்டுச் சொல்லவரும் கருத்தைச் சுருக்கமாகவும், நிறைவாகவும் தர அறிவுறுத்தப்பட்டிருந்தது.

பேசியவர்களில் பெரும்பாலானவர்களின் கருத்துக்கள் "ஒரு இதழ் எப்படி இருக்க வேண்டும்? அது எதையெல்லாம் பெற்றிருக்க வேண்டும்?, சிற்றிதழில் தமிழ் மொழியின் அவசியம்?, மாறி வரும் அரசுகளின் செயல் பாடுகளால் சிற்றிதழ் நடத்துவதில் ஏற்படும் சிதைவு?, இதழ் நடத்துவதின் நடைமுறை சிக்கல்கள்" என்பவைகளையே மூலமாகக் கொண்டிருந்தது. இதோ அவர்கள் பேசிய சுருக்கங்களின் "ஹைலைட்ஸ்" உங்களுக்காக.. . .





★ ஒரு இதழில் 90 சதவீதம் அரசியல் செய்திகள் இல்லையென்றால் அவ்விதழுக்கு "ஸ்டாம்ப் சலுகை' ரத்து செய்யப்படுகிறது. மேலும் அக்ரடேஷன் என்ற ஒரு வகை அனுமதியும் முக்கியம்.

★ காரல்மார்க்ஸ், அம்பேத்கார் போன்றவர்களும் சிற்றிதழ்கள் மூலமாகத் தான் நிலைப்பெற்றார்கள். தொடக்கக் காலத்தில் சிற்றிதழ்கள் அச்சுப் பிரச்சனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

★ 1983-லிலேயே "உலகத் தமிழ் வரலாறு" ஆரம்பித்தது எனலாம். எனென்றால் இலங்கைப் பிரச்சனையின் காரணமாக அங்கிருந்தவர்கள் பல்வேறு நாடுகளில் போய் குடியேறத் தொடங்கியது ஒரு காரணமாகலாம். மேலும் வடதுருவத்திற்கு ஒருமுறை சென்றிருந்த போது யதார்த்தமாகக் கவனித்ததில் இருவர் தமிழில் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போ மனசுல ஏற்பட்ட சந்தோஷம் இருக்கே! அதைச் சொல்லவே முடியாது. அப்பப்பா!

★ இந்தியா மட்டுமல்லாமல் மேலை நாடுகளிலும் சிற்றிதழ்களுக்கு வரவேற்பு அதிகமாக இருக்கிறது என்பதை உணர்ந்தேன். அமெரிக்காவில் "செய்தி இதழ், பொதுவான இதழ், இலக்கிய இதழ்" என வகைப்படுத்தி உள்ளனர். அங்கு இன்றளவும் நடைமுறையில் உள்ள சிற்றிதழ்களில் சில - செந்தாமரை, நம்நாடு, வாசம் இதில் ஓர் நற்செய்தி "உதயம்" என்ற இதழ் 10.000 காப்பி எடுத்து இலவசமாக வழங்கப்படுகிறது.

★ ஆஸ்திரேலியாவில் "ஈழமுரசு, வாசகன்" போன்ற இதழ்களும், இதே போன்று கனடாவில் சில இதழ்களும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

★ இதழ்களோடு அன்றி கனடாவில் 24 மணி நேர மூன்று வானொலிகள் 2½ லட்சம் பேரையும், ஆஸ்திரேலியாவில் இரண்டு வானொலிகள் நாற்பதாயிரம் பேரையும் சென்றடைகின்றன. அவை மட்டுமன்றி இதில் "முக்கியம் + சிறப்பு = அற்புதம்" என்பதைத் தனது அதிக வயதிலும் "மல்லிகை" எனும் சிற்றிதழை "டோம்னிக் ஜீவா" என்பவர் நடத்தி வருகிறார்.

★ இடையே ஒருவர் "சிற்றிதழில் ஒரு சமயம் தலையங்கம் எழுதும் ஆசிரியர் மறு சமயம் ஸ்டாம்ப் ஒட்டித் தபால் நிலையங்களுக்குக் கொண்டு செல்லும் ஆபீஸ் பாயாகவும் மாறி விடுகிறார்" என்று சொன்னதும் அரங்கத்தின் சிரிப்பொலி அய்க்கப்பையும் தாண்டியது.

இப்படிப் பல விசயங்கள் சேகரித்துக் கொண்டோம். அவர்கள் தயார் பண்ணி வைத்திருந்த சுவையான மதிய உணவு உண்டவாறு. வந்த சிற்றிதழியலாளர்களில் ஒரு சிலர் தங்கள் இதழ்களைப் பார்வைக்கு வைத்திருந்தனர். (அதில் 'வேனர்' வின் படைப்புகளும் இருந்தன) அங்கு வாங்கியும். விரும்புபவர்கள் சந்தாவுக்கும் பதிவு செய்து கொள்ள வசதி செய்யப்பட்டிருந்தது. இப்படி ஒவ்வொரு ரம்மியமான நிகழ்ச்சிகளும் நகர்ந்து கொண்டே போயின.

ஒரு வழியாக லஞ்ச் முடிந்தது. அதன் பிறகு நடந்த முதல் நிகழ்ச்சியில், வந்த இதழ் ஆசிரியர்கள் தங்கள் இதழ் குறித்தும், தங்கள் இதழ்களின் நோக்கம், செயல்பாடு, சாதனை, அதில் அவர்கள் சந்தித்த தடைகள் குறித்தும் விவாதித்தார்கள். வளரும் சிற்றிதழியலாளர்களுக்கு இது மிகவும் பயனுள்ள பகுதியாக அமைந்தது. இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அத்தனை இதழியலாளர்களுக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கி விழாவை இனிதே முடித்தனர்.

பிறகென்ன. . . அரக்கப் பரக்க இரயிலைப் பிடித்து ஊர் வந்து சேர்ந்தோம். ஆனால் ஒன்று **Pre.kg** போல் சென்ற நாம் **Ph.D.** முடித்தது போன்ற திருப்தியோடு வந்தோம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை


## *ANNAI Furniture*

No.140-B, Gandhiji Road,
Mayiladuthurai - 609 001
☎ : 222946



**Dealer:**
**Steel & Wooden Furniture.**
**Mattrasses Fancy Sofasets.**
**Computer Furnitures & etc..**







# M.M.FASHION A/C

**BEST READYMADE'S SANGAMAM**

92F, MAHADANA STREET
MAYILADUTHURAI.

Scorpion

WE SUPPLY DRESSES OF

High Quality and Correct Fittings

# களையெடுப்போம்

செப்டம்பர் 11, அமெரிக்காவின்
இரட்டைக் கோபுர நினைவுநாள்,
டிசம்பர் 6, இந்தியாவின்
பாபர் மசூதி நினைவுநாள்,
இன்னும் எத்தனைஎத்தனை
நினைவுநாட்கள் நம்
கண்களைக் குளமாக்கக்
காத்திருக்கிறதோ ?
தீவிரவாத களையெடுப்போம்,
மனிதநேய விதைவிதைப்போம்,
சாதிவெறியைச் சாய்த்து
சமதர்மம் காண்போம்,
மதவெறி நேயம் காப்போம்!

இரா. தேவிகா
முதுநிலை கணினி (முதல்)

# குறள்

பழகிய நட்பும் பண்பும் கெடும்
பேசிய தீயவார்த்தை களால்

முயற்சியை விடுவது நன்றன்று நன்றல்லது
தோல்வியை மறப்பது நன்று.

அ. கோகிலா
இளம் நுண்ணுயிரியல் (இடை)





# நான் Vs அது . . .

இக்கணம் இறைவன் தோன்றினால்!
எண்ணிய மறுகணம்
தோன்றியது ஒளியுருவம்,
'யாது உன் விழைவு' ?
ஒளியுருவம் கனிந்து கேட்டது!
'படைத்தல் உன் தொழிலா' ? என்றேன்,
'ஆம்! நல்லவை படைப்பது'! என்றது,
"சாதி, பலமொழி, பணபேதம் . . .
படைப்பவையாவுமே தீமை!" என்றேன்.
'காத்தல் உன் தொழிலா' ? என்றேன்.
'ஆம், நல்லவை காப்பது'! என்றது,
வக்கிரம், வன்முறை, போர் . . .
'காப்பவை யாவுமே தீமை'! என்றேன்,
'அழித்தல் உன் தொழிலா' ? என்றேன்,
'ஆம்! தீயவை அழித்தல்'! என்றது,
"இயற்கை, இன்பம், நல்லோர் உயிர் எங்கே ?
அழிப்பவை யாவுமே நல்லவை"! என்றேன்.
படைத்ததைத் தீமையாகவும்,
காத்ததைக் கேடாகவும்,
அழிப்பதை நல்லவையாகவும்,
ஆக்கியது உம்மறிவு!
பகுத்தறிவால் யாது செய்தீர் நீர் ?
ஒளியுருவம் வெகுண்டது.

கு. இராஜேஸ்வரி
இளம் இயற்பியல் (இடை)

# நதிகளை இணைத்தால்

ப.த.ஆசைத்தம்பி
முதுகலை கணினி பயன்பாட்டியல்



"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம் "

என்று மீசைக்கவிஞன் பாடினான் அன்று. ஆனால் இன்று, தமிழகத்தைப் பொறுத்தவரை காவிரி டெல்டா பகுதி விவசாயிகள், பயிர்களைத் தண்ணீர்விட்டு காப்பாற்ற முடியாமல், கண்ணீர்விட்டுக் கதறும் நிலைதான் காலம் காலமாக தொடர்கிறது. நதிநீர் பிரச்சனையில் மாநிலங்களுக்கிடையில் நடந்துவரும் மோதல்கள், இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்களாக நடந்து வருகின்றன. நதிநீர் பங்கீடு பற்றிதேசிய கொள்கையை வகுத்து மாநிலங்களுக்கிடையே பாயும் ஆறுகளைத் தேசிய மயமாக்கி கங்கையையும், காவிரியையும் இணைத்தால் இந்தியாவிலுள்ள பல மாநிலங்கள் பயனடையும்.

இந்தியா முழுவதற்கும் மொத்த தண்ணீர் தேவை 629 மில்லியன் க.மீ ஆகும். இந்தியாவின் ஆண்டு சராசரி மழையளவு 1150 மி.மீ. தமிழகத்தின் சராசரி மழையளவு 925 மி.மீ. இது இந்தியாவின் சராசரியைவிட 225மி.மீ. குறைவாகும். ஒரு இந்தியனுக்கு 2200 க.மீ. நீர்தான் கிடைக்கிறது. மழையளவு வட்டார அளவிலும், பருவகால அளவிலும் ஒரே சீராக பகிர்ந்து பெய்வதில்லை.

ஒரு ஆண்டில் நாட்டில் பெய்யும் மழையளவு 75% ஜூன் மாதம் முதல் நவம்பர் வரையிலான பருவத்தில் பெய்கிறது. இதில் 90% நீரை இதே பருவகாலத்தில் நாட்டிலுள்ள ஆறுகள் கொண்டு செல்கின்றன. எஞ்சியுள்ள காலத்தில் 10% மழைநீர் மட்டுமே ஆறுகளில் ஓடுகின்றன. நாட்டின் மொத்த தண்ணீர் தேவை 2050-ஆம் ஆண்டில் 1180 பில்லியன் க.மீ ஆக உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அன்றைய சூழ்நிலையில் நதிநீர் பிரச்சனை மேலும் பலமடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மத்திய அரசின் நீர்பாசனத்துறை அமைச்சராக இருந்த வரும் தலைசிறந்த பொறியியல் வல்லுநராக விளங்குபவருமான K.L.இராவ் வகுத்தத் திட்டத்தின் படி ரூ.70,000 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் ஆறுகளை இணைப்பதற்கு ஏறத்தாழ ரூ.4 இலட்சம் கோடி முதல் ரூ. 5 இலட்சம் கோடிவரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தேசிய கண்ணோட்டத்தோடும், அகில இந்திய அளவில் கிடைக்கும் நலன்களை எண்ணிப்பார்த்தால் இது எவ்வளவு சொற்பமான தொகை என்பதை உணரலாம்.

1834 ஆங்கிலேய இஞ்சினியர் ஆர்தர்காட்டன் நதிகள் இணைப்புப் பற்றி யோசனை தெரிவித்திருந்தார். கேப்டன் தின்ஷாவும், ஜே.தஸ்தூர் என்பவரும் இமயமலையிலிருந்து உற்பத்தியாகும் நதிகளையும், மற்ற நதிகளையும் இணைப்பது குறித்து தயாரித்து இருந்தனர்.

கர்நாடகம் மற்றும் கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடும் நதிகளில் 4 ஆயிரம் டி.எம்சி. தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது. இதில் 10% நீரைக் (400 டி.எம்.சி) கிழக்கே திருப்பி காவிரி, பவானி, வைகை, தாமிரபரணி நதிகளில் விட்டால் சுமார் 40 முதல் 45 இலட்சம் வரையிலான ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். (1 டி.எம்.சி நீரைக் கொண்டு 10 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்யலாம்.) மகாநதி, கோதாவரி ஆகிய நதிகளின் உபரி நீரில் (1400 டி.எம்.சி.) 25% நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிட்டால் அதிலிருந்து 30 இலட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். கேரளத்தின் பம்பா மற்றும் அட்சன்கோவில் நதிகளில் ஓடி அரபிக் கடலில் வீணாகும் உபரி நீரின் (230 டி.எம்.சி) ஒரு பகுதியைத் தமிழக வைப்பாறு நதியில் திருப்பிவிட்டால் அதைக்கொண்டு விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் 2.26 இலட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற முடியும்.

(தொடர்ச்சி - 76 ஆம் பக்கத்தில்)








# பரிசு

வாசம் வேண்டி
    பூக்களை நேசித்தேன்!
புகழ் தேடி
    புலமையை நேசித்தேன்!
கனி நாடி
    மரங்களை நேசித்தேன்!
இசைத் தேடி
    மூங்கிலை நேசித்தேன்!
மழை தருமே அதனால்
    முகிலை நேசித்தேன்!
கீதம் கேட்க தினம்
    குயிலை நேசித்தேன்!
நிலவைக காண
    இரவை நேசித்தேன்!
எதையும் எதிர்ப்பார்க்காமல்
    உன்னை நேசித்தேன்!
படிப்பின்றி பட்டம் கொடுத்து விட்டாய்
    பைத்தியக்காரன் என்று!

ஜி கண்ணதாசன்
இளம் விலங்கியல் (இடை)

(73-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

நதிநீர் இணைப்புத் திட்டத்தின் மூலம் நாம் அடையும் பயன்கள் :

★ இந்தியாவில் வெள்ளப் பெருக்குகளினாலும், வறட்சியினாலும் அடிக்கடி ஏற்பட்டு வரும் பேரழிவுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்.

★ 35 ஆயிரம் முதல் 45 ஆயிரம் மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யலாம்.

★ 10 கோடி ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி பெற முடியும்.

★ உணவு உற்பத்தி பெருகும்.

★ ஏராளமாக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

★ வறட்சியை அடியோடு ஒழித்துக் கட்டலாம்.

★ ஆண்டுதோறும் வெள்ளப் பெருக்குகளினால் ஏற்படும் பல்லாயிரம் கோடி இழப்புகளைத் தவிர்த்து விடலாம்.

★ இயற்கை சமநிலையை மீண்டும் பெறலாம்.

★ நதிநீர் குறித்து மாநிலங்களுக்கு இடையில் நிரந்தர தீர்வு ஏற்படும்.

பிரம்மபுத்திரா, கங்கை, மகாநதி, காவிரி ஆறுகளை இணைத்து விட்டால் நாட்டில் நீர் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தத் திட்டம் முழுவதையும் பகுதி பகுதியாக பகுத்து, ஒவ்வொரு பகுதியையும் நிறைவேற்றும் பொறுப்பைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கலாம். பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைகள், நிதி உதவிகள், மானியங்கள் போன்றவற்றை இத்திட்டத்திற்குச் செலவிட்டால் அதைவிட அதிக நன்மையை அடைய முடியும்.

## காதலி

என் இறுதி ஊர்வலத்தில்
நிறைய மலர்களைத்
தூவுங்கள்
அவள் வந்தாலும் வருவாள் -
பாவம்
அவள் பாதங்கள்

ப.குருராகவேந்திரன்
இளம் வேதியல் (முதல்)





## ஒரு நிமிடம் இளைஞனே !

நிரந்தரமற்றவைக்காக உன்
நித்திரையை இழக்காதே !
தழும்புகள் தாம் உன்னைத்
தரமாக்கும் விதைகள்!
அழிந்து வரும் சமுதாயத்தில் - நீயும்
ஆஜராகி விடாதே!
எழுந்திடு இளைஞனே!
எழுந்திடு ! எழுச்சி உன்பக்கம் தான்
உன்னோடு தான் உன்னில் தான்! ! !

எஸ். பிளாரன்ஸ்
முதுநிலை தாவரவியல் (முதல்)

## பயம்

தீவிரவாதிகள்
கட்டடங்களுக்கெல்லாம்
குண்டு வைக்கின்றனர்! - என் று
கேள்வி ?
அதிர்ந்து போனேன்
அவளை நினைத்து - நான்
கோட்டை அல்லவா
கட்டியுள்ளேன் . . .

மு. வீரமணி
இளம் வணிகம் (முதல்)

## கல்வி

சமுதாயம் எனும் கட்டடம்
சிறப்பாக அமைய
கட்டப்படும் அஸ்திவாரம்

ம.சாலமன்ஜெய்சங்கர்
இளம் தாவரம் (இடை)

## வாழ்வு

பூவின் ஒரு நாள் வாழ்வு
நீட்டிக்கப்பட்டது
குளிர்சாதனப் பெட்டியில்
வைத்து . . .

கு.பிரவீனா
இளம் வணிகம் (இடை)

## மேஸ்ட்ரோ

வீடியோஸ்-போட்டோஸ்



எல்லா விதமான டிஜிட்டல் வீடியோ & போட்டோ மற்றும் வீடியோ கேசட்டுகளை வி.சி.டி. ஆக மாற்றித் தருகிறோம்.

S.S.R. காம்ப்ளக்ஸ், கிட்டப்பா அங்காடி எதிரில்,
நெ.2, ரோடு, மயிலாடுதுறை.

☎ Off : 242665
Resi : 251012

**சாந்தி மோட்டார் டிரைவிங் ஸ்கூல்**

எண் 5, **OSM** நகர்,
(விஜயா தியேட்டர் எதிர்புறம்)
மயிலாடுதுறை. ☎: 225728



சிறந்த முறையில் ஓட்டுநர் பயிற்சி அளித்து உரிமம் எடுத்துத் தரப்படும்.

A.M.K

**சாந்தி ஆட்டோ கன்சல்டன்ஸி**

கார், ஆட்டோ, பஸ், டிராக்டர், லாரி இரு சக்கர வாகனங்கள் வாங்கவும் விற்கவும் மற்றும் வீடு, மனைகள் வாங்கவும், விற்கவும், வாடகை வீடு அமைத்துக் கொடுக்க அணுகவும்.

**A.M. கண்ணன்**
எண் 5, OSM நகர்,
(விஜயா தியேட்டர் எதிர்புறம்)
மயிலாடுதுறை. ☎: 225728





*(55 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)*

*அரசியலும், பத்திரிகைகளும் பிரித்தே பார்க்க முடியாத இரு இணைக்கோடுகள். இந்திய அரசியலும் சரி, உலக அரசியலும் சரி எதாவது ஒரு பத்திரிகைகளின் துணைக்கொண்டு தங்களது ஆட்சியைப் பிடித்திருக்கும் நிலையை உணரலாம். அரசியல் வாதிகள் இன்று பத்திரிகைளுக்குப் பயந்தே தங்களது தவறுகளைக் குறைத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. தவறு செய்யும் அரசியல் வாதிகள் சட்டத்தின் கம்பிகளைச் சந்திப்பதற்கு முன்பாகவே பத்திரிகையின் அச்சுகள் பதம் பாத்த்து விடுகின்றன.*

*பொது மேடையில் பேசும் தலைவர்கள் தங்கள் முன்னால் அமர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களை மட்டும் மனத்தில் கொள்ளாமல் அவரின் பேச்சு நாளை பத்திரிகையின் வாயிலாக எதிரொலிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் பேசுகின்றனர்.*

*தலையங்கம் என்ற ஒரு பகுதி ஒவ்வொரு பத்திரிகைகளிலும் உண்டு. அவைகள் அன்றைய சூழலில் ஏற்படும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் கட்டுரைகள். இதைச் சுட்டிக்காட்டப்படும். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மட்டுமே பத்திரிகைகளைப் பார்க்க வேண்டும் என்பதில்லை. சாதாரண பாமரனும் புரிந்து கொள்ளக் கேலிச் சித்திரங்கள் உதவுகின்றன.*

*இங்கிலாந்து இளவரசி டயானாவின் மரணம் பத்திரிகைத் துறைக்கு ஏற்பட்ட ஓர் அவமானமாகவே சொல்லலாம். "நெல்லில் உமி என்ற சுற்றம் உண்டு" "நீரில் நுரை என்ற குற்றம் உண்டு." "பூவில் புல்லிதழ் என்ற குற்றம் உண்டு" அதேபோல இந்தத் தவறுகள் நடைபெறா வண்ணம் பத்திரிகைகள் பார்த்துக் கொள்ள வேண்டும். மேன்மேலும் இந்தத் துறை புகழடைந்து வளர்ச்சியடைந்து இச்சமுதாய அரசியல் சீர்கேடுகளை அழகாகச் சுட்டிக்காட்டி, அரசியல் ஆட்சியின் நான்காவது தூணாகிய பத்திரிகைகள் தனது தர்மத்திலிருந்து மாறாமல் புதியதோர் உலகத்தினைப் படைக்க வேண்டுகிறோம்.*

**ஆர்.சர்மிளா**
இளம் கணினி (இடை)
ரபியம்மாள் அஹமது மொய்தீன்கல்லூரி,
திருவாரூர்.

**அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்காக நமது கல்லூரியின் இளைய ஜேசிஸ் இயக்கம் கட்டுரைப் போட்டி நடத்தியது. அதில் முதல் தகுதியைப் பெற்ற இக்கட்டுரை உங்கள் பார்வைக்காக.**

# சிந்திக்க சில நிமிடங்கள்!

விடையளித்துப் பரிசுகளை வெல்லுங்கள்!

1. உலகில் மிகச் சிறிய நாடு எது?
2. "செய் அல்லது செத்து மடி" என்று யாரால் எப்போது சொல்லப்பட்டது?
3. 'நுயிஸ் மாடிக்ஸ்' என்பது என்ன?
4. 'பாரிஸின் இரும்புப் பெண்மணி' எனபவர் யார்?
5. விமான ஓட்டிகளாக இருந்து அரசியலுக்கு வந்த இருதலைவர்கள் யாவர்?
6. நல்லவெள்ளி எந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது?
7. அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை எழுதியது யார்?
8. NYLON என்றச் சொல் எவ்வாறு பெயரிடப்பட்டது?
9. இந்தியாவிற்கு வந்த முதல் ஐரோப்பியர் யார்?
10. COFEPOSA என்பதன் விரிவாக்கம் என்ன?

**பரிசுக் கூப்பன்**

பெயர் __________

__________

வகுப்பு __________

பதிவு எண். __________

**விடைகள்**

1. __________
2. __________
3. __________
4. __________
5. __________
6. __________
7. __________
8. __________
9. __________
10. __________

விதிமுறைகள் :

✓ இதிலுள்ள கேள்விகளுக்கு விடையெழுதி கூப்பனைப் பூர்த்தி செய்து ஆங்கிலத்துறைப் பேராசிரியர் **திரு.எஸ்.ஞானஸ்கந்தன்** அவர்களிடமோ, இளந்தூதுப் பெட்டியிலோ சேர்க்கவும்.

✓ விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 30.3.2003

✓ ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.





☎: (04364) 226975

SUN WIN THE WORLD

SSC

**SUN SOFTWARE COLLEGE**

**JOIN SSC**

**GET PROFESSIONAL CARRIER**

| | |
|---|---|
| C, C++, Java, Unix | Prog.2000: E \ Acad 2000 |
| VB, VC++, ASP, Oracle | VLSI & Embedded |
| All MultiMedia Course | Accounting Package |
| Digital Graphics | Laser Printing |
| Hardware & Networking Courses | |

**Special Features**

Specialised Parking specilities
specialized Project Team
Extensive Guidence
Well Equipped Lab

**UG, PG, PROJECT**

**TAMILNADU COMPUTER EDUCATION DEVELOPMENT SCHEME**

IN PGDCA, PGD-E.COM, DCA, DIT.

ALL KIND OF SOFTWARE, HARDWARE COURSES & DTP WORKS

Razak Tower, #15, Cutchery Road, (Near Arunpriya Hospital)
Mayiladuthurai - 1. E-mail: SSC_Myld@Sify.com

# Royal Constructions

**ENGINEERS & CONTRACTORS**

I, II nd floor, Hama Centre, 142, Pattamangal St.,
Mayiladuthurai - 609 001.
☎ : 223614, Fax : 225849 Mobile : 098424 - 33225

H.O.: E5/234, 28 Arcot Road, Saligramam, Chennai - 600 013
☎ : 044 - 4804749

B.O : 10, Railway St.,
Ambagarathur,
Karaikal - 609 601.
☎ : 04368 - 52388



B.O.: 99/8, Australia complex,
South Main St.,
Thiruvarur - 610 002
Mobile 098424 - 44288

BUILDING DESIGNERS MULTY - STOREYED
RCC STRUCTURELS
QUALITY CONSCIOUS, ASSURANCE
SPECIALIST IN INTERIORS, DESIGNERS

**ராயல் கன்ஸ்ட்ரக்சன்ஸ்**

141, ஹமா சென்டர், (2-வது தளம்)
பட்டமங்களத்தெரு, மயிலாடுதுறை - 609 001
Email : royalconstructions@rediffmail.com








## காதல்

கள்ளமில்லா உள்ளங்களின் கனவு இன்று
கள்ளமுள்ள கயவர்களால் கலைந்தது!
ஈரமுள்ள இதயங்களின் நினைவு இன்று
ஈவுஇரக்கமற்ற மிருகங்களால் அழிந்தது!
எத்தனையோ கனவுகளைத் தாங்கிய இதயம் இன்று
கல்லறையில் தூங்குகின்றது! 'கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தம் ஒன்று வருகிறது' என்பது இதைத்தான் போலும் ?
புத்திகெட்ட மிருகங்களால்
புத்தகம் தூக்கும் எத்தனையோ பேரின் நிலை?

சா. ஞானபிரகாசம்
இளம் வரலாறு (இடை)


**விவேகானந்தா**

**பேப்பர் ஸ்டேசனரி மார்ட்**

116, நெ.2 ரோடு, மயிலாடுதுறை.
☎ : 226593



- Students Note Books & Government Text Books.
- Account Books & Office Envelope covers
- Decoration flowers, all Matellie items - Welcome Happy New Year & Birthday, X-Mas etc.,
- Paper plates, Seasons greeting.
- PVC pouches & folders
- Quality Office Files, Lever, Timex, Box, Laminated & College Files, etc.,
- All Office Stationery, Pen & Ball Pen items A to Z.

For Computer Training Courses,
Sales & Service . . . .

**BASE COMPUTERS**

For Personality Development Courses Individual / Corporate . . . .

**BASE INSTITUTE OF MANAGEMENT**

For School & College Students Private Tuition
(All subjects) . . . .

**BASE TUITION CENTRE**

FOR FURTHER DETAILS CONTACT . . . .

Jci Sen. Rtn. V.Raman
Director - Base Institutions

103, Mahadhana street, Mayiladuthurai - 609 001
☎ : 222355, 224855 Cell : 98424 - 24855







G.SELVAM ☎243095



**VEE YEN SPORTS**



ALL KINDS OF SPORTS GOODS

**VEE YEN TYPEWRITER SERVICE CENTER**

ALL KINDS OF TYPEWRITERS
DUPLICATORS, SALES & SERVICE

9, 1st Floor, Lakshmi Vilas Complex,
Cutchery Road, Mayiladuthurai-609001.

# அழகி

மேலையூர் எனும் கிராமத்தில் வசித்து வருகிறாள் வள்ளி. அவளுக்குப் பெற்றோர்களுடன் இரண்டு தங்கைகளும் உள்ளார்கள். பொதுவாகக் கிராமத்துப் பெண்கள் அழகாக இருப்பார்கள் என்று கூறுவார்கள். ஆனால் மேலையூர் கிராமத்தில் வள்ளியைத் தவிர மற்ற எல்லாப் பெண்களும் அழகாக இருந்தார்கள். அதனால் வள்ளிக்கு மிகவும் வருத்தம். ஏனென்றால் தனது இரண்டு தங்கைகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது. தன்னைப் பெண்பார்க்க வந்தவர்கள் எல்லாம் தன் தங்கைகளைத் திருமணம் செய்து கொண்டு செல்கின்றார்கள் என்று மிகவும் வருத்தப்பட்டாள்.




வள்ளிக்குத் தன் இன்ப துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதற்குத் தோழியென்று யாருமில்லை. அப்படியே இருந்தாலும் 'நம்ம ஊருக்கே வள்ளிதான் அழகி' என்று கேலி செய்து சிரிப்பார்கள். கிராமத்தில் கோவில் திருவிழா அன்று அனைவரும் சந்தோஷமாக இருந்தார்கள். பெண்கள் அனைவரும் கோவிலுக்குச் சென்றனர். ஆனால் வள்ளி மட்டும் அவர்கள் பின்னால் தனியாகச் சென்று கொண்டிருந்தாள். கூட்டமா நின்று கொண்டிருந்த பையன்கள் 'நம்ம ஊர்ல எவ்வளவு அழகான பொண்ணுங்கெல்லாம் இருக்காங்க' என்றான் ஒருவன். ஆனால் இன்னொருவன் வள்ளியைப் பார்த்து "இதப் பாருடா நம்ம ஊர் பொண்ணுங்களுக்குத் திருஷ்டி புள்ளி" என்று கிண்டல் செய்யவே அனைவரும் சிரித்தனர். வள்ளிக்குக் கண் கலங்கியது. மிகவும் வேதனைப்பட்டுத் தனக்குள் பேசிக் கொண்டாள். "இந்த ஆண்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? நான் மட்டும் படித்திருந்தால் இந்த நிலைமை எனக்கு வருமா? இல்லை, நான் எவ்வளவு தான் படித்தாலும். இவ்வுலகில் அழகாக இருந்தால் தான் பெண்களை மதிக்கின்றார்கள். எவ்வளவு படித்துவிட்டு வேலைக்குச் சென்று சம்பாதித்தாலும் படித்தால் மட்டும் போதாது.



பெண் அழகாக இருக்கனும்னு சொல்கிறார்கள். ஆண்கள் அழகாக இருந்தால் அழகான பெண்களைத் தேடுகிறார்கள். அழகாக இருக்கும் ஆண்கள் அழகில்லாமல் இருக்கும் பெண்களைத் தேடுவதில்லையே. மாறாக அழகில்லாமல் இருக்கும் ஆண்களும் அழகான பெண்களையே தேடுகிறார்கள்.

இந்தச் சமுதாயத்தில் கருப்பாக இருந்தால் அழகில்லையா? அழகில்லாமல் இருக்க கூடாதா? ஏழையாக இருந்தாலும், பணக்காரராக இருந்தாலும் பெண் அழகாக இல்லையென்றால் வரதட்சணை அதிகமாகக் கேட்கிறார்கள். ஆண்கள் எவ்வளவோ சாதனை செய்கிறார்கள். ஆனால் தான் அழகாக இருந்து அழகில்லாமல் இருக்கும் பெண்களை வரதட்சணை எதும் கேட்காமல், திருமணம் செய்து சாதனை செய்திருக்கிறார்களா? செய்வார்களா? . . ." யாரோ கூப்பிடும் குரல் கேட்டு வள்ளி எழுந்து நடந்தாள். வள்ளிக்கு அவள் எதிர்பார்த்தது போல் திருமணம் நடக்குமா? அவளைத் தேடி அழகான மாப்பிள்ளை வருவாரா? இல்லை அதிகமாக வரதட்சணை கேட்கும் மாப்பிள்ளை வருவாரா?

"செடி மொட்டுக்களைப் பார்த்து
மயங்கியது
மொட்டுக்கள் பூக்களைப் பார்த்து
மயங்கியது
பூக்கள் பெண்ணின் கூந்தலைப் பார்த்து
மயங்கியது
கூந்தல் யாரைப் பார்த்து மயங்கியதோ?"

தரமான மளிகை பொருட்கள்,
பிளாஸ்டிக், பேன்ஸி கிப்ட்
அனைத்தும் நியாயமான
விலையில் கிடைக்கும்.

தரணி
A/C

டிபார்ட்மெண்ட் ஸ்டோர்
பட்டமங்கலத் தெரு,
மயிலாடுதுறை.
☎ : 222968, 220921

☎: 222960

ராமான காபி
SRCM
1956 முதல்

மக்களின் சேவையில் இந்த அமைப்போடு ...

ஸ்ரீ ராமன்ஸ்
காபி மார்ட்

45A-பெரியகடைத் தெரு மயிலாடுதுறை-609001

We among
House of Qualitygoods

☎: 241517

அனைத்து ரக ஜவுளிகளுக்கு

ஸ்ரீ ஸத்குரு சில்க்ஸ்
மர்ஹபா காம்ப்ளக்ஸ்,
பெரியகடை வீதி, மயிலாடுதுறை.





# செம்பருத்தி

ப.தேன்மொழி
முதுநிலை நுண்ணுயிரியல்
(முதல்)

"மீனா. . . மீனா . . . அம்மாடி! என்னம்மா பண்ணிகிட்டு இருக்க? காலேஜிக்கு லேட்டாயிடுச்சு இல்ல, வந்து பார்த்துக்கலாம். சீக்கிரம் கௌம்புடி! பொழுது விடிஞ்சு பொழுது போனா இந்த செம்பருத்தி தோட்டத்துலயே உட்கார்ந்திரு." முணுமுணுக்கிறார் மீனாவின் அம்மா.

மீனாட்சி மூன்றாமாண்டு பி.காம்., படிப்பவள். "இதோ கிளம்பிட்டேன்" என்று சைக்கிளில் செல்ல ஆரம்பித்தாள். "அதோ போகுதே! அது மீனாட்சி தானே?" "ஆமாம் மீனாட்சி தான். எல்லா புள்ளைங்களும் இந்த வயசில நகைநட்டு மேல ஆசைபடுங்க, துணி மணிங்க மேல ஆசைபடுங்க. இந்தப் பொண்ணு என்னன்னா செம்பருத்தி பூமேல அம்புட்டு ஆசை வச்சிருக்கு." இது ஊரின் பேச்சு. மீனாவின் வீடு நகரத்தை ஒட்டியுள்ள ஒரு சிறு கிராமத்தில் அமைந்துள்ளது. வீட்டிற்கு எதிரே ஒரு அரை கிரவுண்டு நிலம் உள்ளது. அவர்களுக்குச் சொந்தமான அந்த இடத்தைச் சுற்றிலும் வேலிக் கட்டி செம்பருத்தி செடிகளை வைத்திருந்தாள். ஒரு நாளைக்குக் குறைந்தது 5 முறையாவது செம்பருத்திச் செடிகளைப் பார்க்காவிட்டால் அவளுக்கு அன்று தூக்கமே வராது. "எண்டி! என்னைவிட உனக்குச் செம்பருத்தி மேல தான் பாசம் அதிகமான்னு?" அம்மா கேட்டா, "நீ எனக்கு அம்மான்னா, அது எனக்குச் சித்தி முறை" என அம்மாவையே வம்புக்கு இழுப்பாள். மீனா, செம்பருத்தி தோட்டத்திலுள்ள ஒவ்வொரு பூக்களையும் தன் தோழிகளாகவே கருதினாள். தன் மனத்தில் ஏற்படும் இன்ப துன்பங்கள் அனைத்தையும் அதனிடத்தில் கொட்டி விடுவாள்.

அவளிடம் வம்பு செய்வதற்காக அவளது நெருங்கிய தோழி சீதா "ஏண்டீ? உன்னை கல்யாணம் செய்து கொடுத்திட்டா இந்த செம்பருத்தியெல்லாம் என்னடீ செய்வ?" "ம்..... எங்க ஊர்ல இருக்கிற பையனையே பார்த்து கல்யாணம் பண்ணிக்குவேன்." "சரி, சரி உங்கிட்ட பேசவே முடியாதும்மா."

அன்று நள்ளிரவு மீனாவின் அப்பாவிற்குத் திடீரென மாரடைப்பு வந்தது. அம்மாவிற்கு ஒன்றும் புரியவில்லை. அப்பாவைப் பக்கத்து நகரத்திலுள்ள மருத்துவமனையில் சேர்த்தார்கள். இரண்டு நாட்கள் I.C. யூனிட்டில் வைத்து இறந்துவிட்டார் என்றார்கள். எல்லாம் முடிந்து விட்டது. அழுது. அழுது.... அம்மாவும் ஒருவாறு தேறி விட்டாள். அப்பா ஏற்கனவே வீடு கட்டுவதற்காகப் பணம் வாங்கியிருந்தார். அப்பாவின் இறுதி காரியம் முடிக்க, என ஏகப்பட்ட செலவாயிற்று. எல்லாக் கடனையும் வங்கியிலுள்ள பணம், நிலம், என எல்லாவற்றையும் வீட்டு மூலமாகவே அடைத்தார்கள். இனி காலத்தை எப்படி ஓட்டுவது? அப்பாவின் வேலையிலிருந்து வரும் பென்ஷன் வீட்டுச் செலவிற்கே பற்றாக்குறையாக இருந்தது. 'என்ன செய்யலாம்?' என யோசித்தாள் மீனா. உடனே 'செம்பருத்தி டியூசன் சென்டர்' என்ற பெயரிலேயே அக்கிராமத்தில் உள்ள இருபது பேருக்கு டியூசன் எடுத்தாள்.

அதில் வரும் பணம் போதுமானதாய் இருந்தது. அன்று அவளைப் பார்க்க பழைய தோழி சீதா வந்தாள். அவளை மிகவும் வேதனையுடன் பார்த்தாள். "என்னடி? இதெல்லாமீ எவ்வளவு பாசம் வைத்திருந்த? அப்படி ஆசை ஆசையாய் வளர்த்த அந்த செம்பருத்திச் செடியெல்லாம் வெட்ட உனக்கு எப்படி மனசு வந்தது?" என்றாள். 'என்ன சீதா பண்றது?' - மீனா

ஒன்றை இழந்தால்தான் இன்னொன்று கிடைக்கும்னா அதை இழந்துதான ஆகணும். வாழ்க்கையில எதுவுமே நிரந்தரம் கிடையாது. நான் நேற்று இப்படி இல்லை, நாளைக்கும் இப்படி இருக்க போறதுமில்லை. ஏன்? எடுத்துக்காட்டா! உன்னையே சொல்வோமே. உங்கம்மா, அப்பாவையெல்லாம் விட்டுப் பிரிந்ததே இல்லைன்னு சொல்லுவ? இப்ப எப்படி ஹாஸ்டல்ல தானே இருக்க? ரொம்பத் தூரமா இருக்கறதனால எப்பவாச்சும் தான் உங்க ஊருக்குப் போய் பார்க்கிற? அதனால அவங்க மேல நீ வச்ச பாசம் குறைஞ்சுதா? எப்பவும் ஒன்றை இழந்து ஒன்று கெடைக்கிறப்போ அதை ஏத்துக்குற மனப் பக்குவம் வேணும். அது எங்கிட்ட இருக்கு. கண்டிப்பா என்னால இன்னொரு செம்பருத்தி தோட்டத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கு." சொல்லி முடிக்கையில் மீனாவின் கண்களில் நம்பிக்கை ஒளி மிளிர்ந்தது.





# பொதுத் தேர்வு

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு இலட்சியம் உண்டு. சின்ன வயதில் இருக்கும் குழந்தையைக் கேட்டால் கூட "நான் டாக்டர் ஆக வேண்டும், இஞ்சினியராக வேண்டும், கலெக்டராக வேண்டும்" என்பார்கள். அவர்கள் வளர்ந்து, தன் வாழ் நாளில் முதலில் சந்திக்கும் இந்தத்தேர்வுகள் அவர்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றிவிடுகின்றன.

பொதுத் தேர்வுக்காக மாணவ, மாணவிகள் கடுமையாக உழைக்கிறார்கள். இந்த உலகம் போட்டியாளர்களின் உலகமாக மாறிவிட்டது. எல்லோருமே கடினமாக உழைக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த உலகத்தில் தன்னை தனியாக உயர்த்திக் காட்டிக் கொள்ள வேண்டுமானால் வெறித்தனமாக உழைக்க வேண்டியுள்ளது. வெற்றிக் கனிகள் தொலைவில் இருக்கின்றன. அதை எட்டிப் பறிப்பது அவசியம். வேண்டாக் கனிகள் நமக்கு அருகிலேயே கிடைக்கின்றன. இதுதான் நம்முடைய வேதனைக்குரிய விஷயம்.

சினிமா, கிரிக்கெட் போன்றவைகள் அவர்கள் சிந்தனையைச் சிதறடிக்கின்றன. இன்று பார்க்காத சினிமாவைத் தன் வாழ் நாளில் பிறகு எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம். இந்த உலகக் கோப்பை இல்லையென்றால் அடுத்த நான்கு ஆண்டுகளில் இன்னொரு உலகக் கோப்பைத் திருவிழாவும், அத்தை, மாமாவும் அடுத்த வருடமும் வருவார்கள். ஆனால் மாணவர்கள் இந்தத் தேர்வைத் தவற விட்டால் பிறகு எல்லா விஷயங்களுக்கும் போராட வேண்டும். வாய்ப்பு கிடைக்கவில்லையே! என்று புலம்புபவன் சோம்பேறி. கிடைத்த வாய்ப்பை நழுவ விடுபவன் ஏமாளி. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி சாதிப்பவன் தான் அறிவாளி. மாணவ பருவம் என்பது மீண்டும் கிடைக்காத ஒன்றாகும். இந்த வயதில் "பெற்றோர்கள்" என்னும் பல்லக்கில் உல்லாசப் பயணம் நாளை முதல் சொந்தக்காலில் பயணித்திட ஒத்திகை ஆரம்பம்.

உங்களுக்காக இல்லையென்றாலும், நீங்கள் எவ்வளவு தவறுகள் செய்தாலும், "என் புள்ள மாதிரி உலகத்திலேயே யாருக்கும் கிடையாது" என்று உள்ளங்கையில் வைத்துத் தாங்கும் உங்கள் பெற்றோருக்காகவாவது நீங்க சாதிக்க வேண்டாமா? இதுவரை இல்லையென்றாலும் நாளைய பொழுதுகள் அது நமக்காகவே விடியட்டுமே.


அ.ஹேமா
முதுநிலை கணினி
(முதல்)

ஏ
வி
சி

மயிலாடுதுறையின் அழகிய காலணிகளின் கடல்

# பாட்டம்
# ஷூ மார்ட்

117/123, பட்டமங்கலத் தெரு,
மயிலாடுதுறை.



குறிப்பு : [ Bata, Action, Liberty, Phonscix, Aristocrat, Diamond, Rex ]

ஆகிய கம்பெனிகளின் காலணிகள் கிடைக்கும்

(College Collections also Available)





இ
த
ழ்

☎: 224954

# National
## Watch House

*Dealer:*

- hmt
- TITAN
- CITIZEN
- SONATA
- SAMAY



ORPAT® Scientific Fx100 Calculators


ORPAT® Telephones

**( HMT Authorised Service Centre )**

No. 10, Raj Building, Pattamangala Street,
Mayiladuthurai - 609 001.

# புதி(ர்)ய பாதை

*மயிலை நகரில் புதிதாகப் போடப்பட்ட சாலைகள் பல உள்ளன. இருந்தாலும், அவற்றில் தேவையில்லாத சில சாலைகளும் உள்ளன. ஏன் இந்தச் சாலைகளுக்கு இந்த நிலை? அதைப்பற்றிய ஒரு சிறப்புப் பார்வையே இது. . . .*



மண்சாலைகளாக இருந்தவை சிமெண்ட் சாலைகளாக உருமாறினாலும், உபயோகம் இல்லாமல் இருக்கிறது. இப்படி உபயோகம் இல்லாமல் எத்தனையோ சாலைகள் ஆங்காங்கே தென்படுகின்றது. புதிய பேருந்து நிலையம் பேருந்து நிறுத்தமாக செயல்பட்டு வருகிறது. பேருந்து நிருத்தத்திற்கு (நிலையம்) 'நிழற்குடை' ஒன்று அனாதையாக இருக்கிறது. பயணிகள் அதைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. ஏனென்றால் அங்கே அசுத்தம் அமர்ந்திருப்பதால். சிமெண்ட் சாலைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டன. இவைகள் என்றும் பயன்படாது நிற்கின்றன. ஏனென்றால் குப்பைகளின் இருப்பிடமாகவும், பொது கழிவின் வழிபோக்காகவும் மாறியதுதான் காரணம். "இந்தச் சாலைகள் எப்போதும் போக்கு வரத்து என்றால் என்ன? சுத்தம் என்றால் எப்படி?" என்ற கேள்வியை எழுப்பிய வண்ணமே உள்ளது. இதற்குக் காரணம், நகராட்சியின் அலட்சியப் போக்கா? பொது மக்களின் பொறுப்பின்மையா? என்பதை இருவரிடமே அலசினோம்.





பொதுமக்கள் ஒரு சிலரிடம் கேட்டபோது அவர்களின் கருத்து - "நகராட்சி சரியான முறையில் பராமரிப்பதில்லை, குப்பைகளைத் தினசரி வந்து அகற்றுவதில்லை. சாக்கடைக் கழிவுகளை எடுத்து சாலையிலேயே போட்டு விடுகிறார்கள். இந்தச் சாலைகள் மண் சாலையாக இருக்கும்போதே யாரும் பயன்படுத்துவதில்லை. சரியான போக்குவரத்து இல்லாமல் தான் இருந்தது. சிமெண்ட் சாலையாக மாற்றியும் உபயோகம் இல்லாமல் தான் இருக்கிறது. நகராட்சியின் முக்கிய பகுதிகள் மட்டும் சுத்தம் செய்கிறார்கள். இதுபோன்ற சாலைகளை கண்டு கொள்வதேயில்லை.

இதுபோன்ற சாலைகள் கழிவு நீர் செல்ல மட்டுமே பாதைகளாக உள்ளது. புதிய பேருந்து நிலையத்திலுள்ள குப்பைகள் பொது மக்கள் போடுவதில்லை. இந்தப் பேருந்து நிலையத்தில் கல்லூரி மாணவர்களும், அரசு ஊழியர்களுமே அதிகமாக வருகிறார்கள். அவர்கள் குப்பை போட வாய்ப்பு உள்ளது. இங்குக் கடைக்காரர்களால் வரும் குப்பைதான் அதிகம். இதை நகராட்சி தான் பராமரிக்க வேண்டும்." இவர்கள் தொடுத்த கேள்விக்கணைகளை எல்லாம் ஒன்று சேர்த்துத் தூக்கிக் கொண்டு நகராட்சிக்கு ஓடினோம்.

நகராட்சி ஊழியர்கள் ஒரு சிலரிடம் கேட்டபோது - "இந்த சிமெண்ட் சாலைகள் நகராட்சியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன் போடப்பட்டது. இது பொது மக்கள் பயனுக்காக அடிப்படை வசதிகளையும், அத்தியாவசிய வசதிகளையும் சிறப்பாக செய்து வருகின்றது. இந்த வசதிகளைப் பொது மக்கள் உபயோகமானதாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது அவர்களுடைய பொருட்களை அவர்களே நாசம் செய்வது போல் உள்ளது.

பொது மக்கள் குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடலாம் அல்லது நகராட்சி குப்பை வண்டியில் சேர்த்து விடலாம். ஆனால், சாலைகளிலேயே கொட்டி விடுகிறார்கள். இதனால் அவர்களுக்குத் தான் கஷ்டம். நகராட்சி சாலைகளையும், சாக்கடைகளையும் பராமரித்து தான் வருகிறது. பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நிழற்குடையைப் பயன்படுத்தாமலேயே விட்டு விட்டார்கள். அந்தப் பகுதியைக் கழிப்பிடமாகவும் மாற்றி விட்டார்கள்." நகராட்சி ஊழியர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம். "பொது மக்கள் குப்பைகளைச் சாலைகளில் போட வேண்டாம். பொது இடங்களை அசுத்தப்படுத்த வேண்டாம். இது பொதுச் சொத்து பொது மக்களின் சொத்து. அவர்களுக்கே சொந்தமானது."

# வாங்க . . . வாங்க . . சிரிக்கலாம்

ஏ
வி
சி



**கரன்:** இந்த வருஷம் மழை எப்படி பெய்யும் தெரியுமா?

**சரன்:** தெரியலையே . . .

**கரன்:** வழக்கம் போல தண்ணியாகத்தான்.

த.சங்கர்
இளம் தாவரவியல் (இடை)



**ஆசிரியர்:** மாணவர்களே நல்லா கவனியுங்கள் இந்தக் குடுவையில் கரையக்கூடிய அமிலம் இருக்கு இப்ப நான் என் பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை இதில் போடறேன் இது கரையுமா . . . கரையாதா?

**மாணவர்கள்:** (ஒரேகுரலில்) கரையாது சார்.

**ஆசிரியர்:** வெரிகுட் எல்லாரும் கரெக்டா சொல்லிட்டிங்களே.

**மாணவர்கள்:** கரையிறமாதிரி இருந்தா உங்க காச போடுவிங்களா சார்.

**ஆசிரியர்:** ? .? . . . ? . . . .

த. சுதாகர்
இளம் தாவரவியல் (இடை)



பையன் தம் அடித்தான் ரஜினிகாந்த் ஸ்டைலில் .
அப்பா உதைத்தார் விஜயகாந்த் ஸ்டைலில்.

வை. செந்தில்
இளம் கணினி (முதல்)





இ
த
ழ்



**கரன்:** "அந்த டாக்டர் இல்லாதது பொல்லாததெல்லாம் சொல்லிப் பயமுறுத்துறாரு, ஒண்ணும் கவலைப்படாதடா !"

**சரன்:** எப்படிடா சொல்ற?

**கரன்:** "பின்ன? உனக்குப் போயி மூளையில ஆபரேஷன் பண்ணனும்னு சொல்றாருடா!"

அரு. ஆனந்தகுமார்.
இளம் கணினி (நிறை)

மணி காட்டும் பிளேடு எது தெரியுமா ?

செவன் 'ஓ' கிளாக்



மேஜர் சுந்தர் ராஜனின் தம்பி பெயர் என்ன?

மைனர் சுந்தர்ராஜனா.

உங்க பெண்டாட்டி பூரிக்கட்டையால தலையிலதானே அடிச்சாங்க, ஏன் கால்ல கட்டு போட்டிருக்கீங்க?



அடுத்த அடி விழும் முன்னே தப்பிக்க மாடியிலிருந்து குதிச்சிட்டேன்!

க. ஜமுனா
இளம் வணிகம் (நிறை)

# "No Problem"

ஏவிசி

அந்தப் புத்தகம் இல்லை

இந்தப் புத்தகம் இல்லை


என்ற *Problem* இனி இல்லை

அனைத்திற்கும்







இதழ்

*காலை வழக்கத்திற்கு மாறாக சற்று லேட்டாகவே எழுந்தான். அவசர, அவசரமாகக் கிளம்பி கல்லூரிக்குச் சென்றான். ஒரு பாட வேளை முடிந்த பின் ஆசியைத் தேடிய வாசி, வகுப்பறையில் அவன் இல்லை என்பதையும், அவன் கல்லூரிக்கே வரவில்லை என்பதையும் தெரிந்துக் கொண்டான். கல்லூரி முடிந்த பின் ஏன் கல்லூரிக்கு வரவில்லை? என்று அறிந்து கொள்ள, ஆசி வீட்டிற்குச் சென்றான் வாசி.*

*அவன் ஆசியின் வீட்டில் காலை வைத்த போது "சிக்ஸர்" என்ற ஒரு சத்தம். .. என்னது! ஆசியின் சத்தம் போல் உள்ளதே? என்று நினைத்துக் கொண்டே உள்ளே சென்றான். அங்கே ஆசி மிகவும் ஆர்வத்துடன் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்தான். "அடப் பாவி! இதுக்குத் தான் காலேஜ் கட்டடிச்சியா?" என்று கேட்டுவிட்டு மேலும் பேச்சைத் தொடர்ந்த வாசி, "சரி... எப்படி போய்ட்டிருக்கு மேட்ச்!" என்று கேட்டான் ஆசி கிரிக்கெட்டைப் பார்த்துக் கொண்டே..... "ம்.... ஏதோ போய்ட்டிருக்கு" என்று சொல்லிவிட்டுச், "சரி நீ காலேஜ் முடிஞ்ச உடனே வீட்டுக்குக் கூடப் போகாம இங்க வந்திருக்கியே ஏன்?" என்று கேட்டான். "ஒண்ணுமில்லடா, நீ காலேஜ் வரலியே... அதான் என்ன காரணம்னு கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்" என்று பதிலளித்தான் வாசி.*

*மேட்சைப் பார்த்துக் கொண்டே, "காலேஜில ஏதாவது ஸ்பெஷல்" "சொல்றேன் இரு. நம்ம காலேஜ் பைன் ஆர்ட்ஸ்லேருந்து பூண்டி கல்லூரி நடத்திய போட்டியில கலந்துகிட்டாங்களே தெரியுமா?" ஆமாம் தெரியும். அதுக்கென்ன இப்ப?*

*"என்ன இப்பவா! அதுல கலந்துகிட்ட நம்ம மாணவர்களுக்கு ஸ்கிரிப்ட்க்காக இரண்டாவது பரிசு கிடைத்திருக்குடா என்றதுடன், அடுத்து நம்ம என்.சி.சி. மாணவர்கள் லயோலா காலேஜ்ல நடந்த பெரேடுல கலந்துகிட்டு அவங்களும் இரண்டாவது பரிசு வாங்கியிருக்காங்க தெரியுமா? அப்புறம் நம்ம கணிதத்துறைப் பேராசிரியர்* ***மணி சார்*** *பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினரா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கார் தெரியுமா?" என்றான். "அப்படியா! கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்குடா," எனப் பெருமிதத்துடன் கூறினான் ஆசி. வாசி அதற்குப் பதிலாக "இதுக்குத்தான் ரெகுலராக காலேஜ்க்கு வரணும்னு சொல்றது" என்றான்.*

"ஏன்? உனக்கு மட்டும் தான் இதெல்லாம் தெரியுமா? சரி நம்ம மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்தில் மழை சேகரிப்பு மையம் ஆரம்பிச்சிருக்காங்க தெரியுமா?" என்றான் ஆசி. "அதென்னடா, மழை சேகரிப்பு மையம்" என்று கேட்டான் வாசி. "அது ஒண்ணுமில்லடா, வர வர பூமியில நிலத்தடி நீர் குறைஞ்சு ரொம்ப வறட்சியா இருக்குல. அதுக்காக இயற்கையா பெய்யுற மழையை வீணாக்காம சேகரிச்சி குழாய் மூலமா பூமிக்கு அனுப்புறதுக்கு பேர் தான் மழை சேகரிப்பு. இதைப் பற்றி நகர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துறதா இருக்காங்க. அப்புறம் நம்ம காலேஜ்லயும் மழைத் தண்ணியைச் சேகரிக்கிறாங்க தெரியுமா" என்றான் வாசி.

பேசிக் கொண்டிருக்கும்போதே ஆசியிடம் வாசி "எங்கடா அக்கா?" என்றான். ஆசி "நம்ம இஞ்சினியரிங் காலேஜ்ல யாரோ ப்ரெண்ட்சைப் பார்த்துட்டு வரேன்னு சொல்லிட்டு போனாங்கடா" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே "என்னங்கடா? என்பேரு இங்க அடிபடுது" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் இளன்.

இளனிடம் "இல்லக்கா... உங்களை எங்க காணும்னு கேட்டேன். அதான் நீங்க இஞ்சினியரிங் காலேஜ்க்கு போயிருக்கிறதா சொன்னான் ஆசி. சரிக்கா. ஏன் இவ்வளவு லேட்?" என்றான் வாசி. அதற்கு பதிலளிக்கும் விதமாக இளன். "என் ப்ரெண்ட் ஒருத்தி இஞ்சினியரிங் காலேஜ்ல படிக்கிறா. அவளப் பார்க்க போனேன். அவ என்னன்னா.....? E -LIBRARY க்குப் போய்ட்டாளாம். அதான் லேட்" என்றாள். "அதென்னக்கா E -LIBRARY" அதுவா NET மாதிரி தான். "யார் NETல WORK பண்ணனும்னு நினைக்கிறாங்களோ. அவங்க அன்னிக்குக் காலையில போய் அவங்க பெயரைப் பதிவு செஞ்சிட்டு வந்திட்டா Evening ஒரு மணி நேரம் போய் அவங்க work பண்ணலாம்."

"அப்படியா? கேட்கவே ரொம்ப சந்தோமா இருக்குக்கா!" என்று சொல்லிவிட்டு ஏன்கா நம்ம காலேஜ்லயும் அதுமாதிரி ஸ்டுடண்ட்ஸ்காக எக்சிபியூசன் வருஷா வருஷம் வச்சா என்னக்கா? அதுமட்டுமில்லாமல் ஒவ்வொரு டிபாட்மெண்ட்டா பிரிச்சி பண்ணினா அவங்க துறை மட்டுமில்லாமல் வேற துறையைப் பற்றியும் மாணவர்கள் தெரிஞ்சிப்பாங்கல்ல என்றான் வாசி. ஆசி சட்டென்று டீவியைப் பார்த்து "MISS THE CATCH" என்று கூறிக்கொண்டு 'சொல்லுடா வாசி" என்றான். "'நான் பிரபல வார இதழ் ஒன்றில் நியூஸ் படிச்சேன்டா. அப்ப நம்ம இந்தியா ஓர் விதத்தில் முன்னேறுகிறது என்று ஒரு சின்ன சந்தோஷம்டா. கடந்த டிசம்பர் 26-ந் தேதி நம்ம பிரதமர் கிராம போன் ஒன்றை அறிமுகப்படுத்தினார். அது முதன்முதலில் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த





மொரப்பாக்கம் ஊராட்சிக்குக் கிடைச்சிருக்கு. இதை நகரத்துல இருக்குற நமக்கு ஒன்னும் பெரிய விசயமா இருக்காது. ஆனால், கிராம மக்களுக்குப் பெரிய சந்தோஷம். நகரம் முன்னேற, கிராமப்புறம் பின் தங்கிய நிலையில் இருந்தது அதில் ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டது போல் தோன்றுகிறது" என்றான் வாசி.

"டேய், வாசி எனக்கு ஒன்றும் புரியவில்லை கிராம போன் என்றால் பஞ்சாயத்தில் ஒரு போன் இருக்கும் அதானடா?" என்றான் ஆசி. 'அதில்லடா' என்று பதிலளித்தான் வாசி. 'அப்புறம் என்னடா' என்ற ஆசிக்கு "இது ஒரு புதுமைடா. நமக்கு முதலில் லெட்டர் கொண்டு வந்தவர், இப்போது போனைக் கொண்டு வருவார். யார் பேச வேண்டும் என்கிறார்களோ? அவர்கள் தபால்காரரிடம் பணம் கொடுத்து பேசலாம்."

உடனே ஆசி நக்கலாக, "டேய் தபால்காரர் முதலில் லெட்டர் படிச்சி காட்டிகிட்டு இருந்தார். இப்ப பேசிக்காட்ட போறார்" என்று கூறிய வாசியிடம். அடுத்து நம்ம காலேஜ்ல கட்டடம் எல்லாம் புதுசா கட்டிகிட்டு இருக்காங்க போல" என்றான் வாசி. ஆமாம் "நம்ம காலேஜ்ல 50-வது ஆண்டு விழா வருதுல அதுக்காகத்தான் எல்லாம் புதுசா கட்டிகிட்டு இருக்காங்க." 'சரி! நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்க. நம்ம காலேஜ்ல இருந்து குவாலியர்ல நடந்த பளு தூக்கும் போட்டியில கலந்துகிட்டு பரிசு வாங்கிட்டு வந்திருக்காங்க தெரியுமா?' என்றாள் இளன். "எங்களுக்கு தெரியாமலா? வணிகவியல் துறையில் இளநிலைப் பயிலும் **செல்வமுத்துகுமாரும்,** முதுகலை பயிலும் **கிரிராஜனும்** தான்" என்றான் ஆசி.

"அப்புறம் அவங்க ரெண்டு பேரும் அண்ணன், தம்பி தெரியுமா?" என்ற வாசியிடம் இளன் "என்னடா? Project Work முடிச்சாச்சா." என்றாள். 'இன்னும் இல்லக்கா. அதான் கொஞ்சம் கஷ்டமாயிருக்கு. நாம காலேஜ் 2nd year முடிக்கும் போது உள்ள leave அவங்க படிக்கிற துறை சம்பந்தமா ஏதாவது ஒரு கம்பெனியில போய் Training எடுக்கனும்னு ஒரு சிஸ்டம் கொண்டு வந்தா எல்லாருக்கும் 3rd Year ல Prioject Work பண்ணும் போது ஈஸியா இருக்கும்ல' என்றான் வாசி.

"ஆமான்டா, ரொம்ப நல்லாயிருக்கு இந்த ஐடியா," என்று பாராட்டினாள் இளன். "எப்படிடா? இப்பயெல்லாம் உனக்குத் தோணுது" என்று நக்கலாகக் கேட்ட ஆசி திடீரென்று "WIN THE MATCH" என்று கத்தினான். அதைக் கேட்ட வாசி "இந்தியா ஜெயிச்சுடுச்சா!" என்று கேட்டுவிட்டு "டயமாயிடுச்சு நான் நேரா காலேஜ் முடிஞ்சி இங்க வந்துட்டேன்டா. லேட்டா போனா அம்மா திட்டுவாங்க அதனால வீட்டுக்குப் போய் அம்மாகிட்ட சொல்லிட்டு வரேன்." என்று இருவரிடமும் கூறிவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டான் வாசி.

**BISMI FURNITURES (P) LTD.,**

BISMI FURNITURES

**Head Office**

**Bismi Furnitures(p) Ltd.,**
**Deen Complex, O.S.M.Nagar,**
**Mayiladuthurai - 609 001**
**Ph. No - 04364 - 222856**

**Branches**

Bismi Funitures
80, Nageswaran North,
Kumbakonam - 612 001.
Ph.No : 0435 - 2425262

Bismi Furnitures (p) Ltd.,
554, Maraimalai Adikal salai,
Pondicherry - 605 001
Ph.No. - 0413 - 2221297





# என் கனவில் இந்தியா

என் சுவாச பாரதத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும்
அவலங்களை அலசிப் பார்த்தேன்: கவலை ரேகைகள்
முகத்தில் படிந்தன: விழிகளுக்குள் உறக்கமில்லை
அவலங்களுக்கு விடைதெரியாமலேயே விழி மூடினேன்
விடிந்தது! எழுந்தேன்
காலையில் மட்டுமே சொட்டுச்சொட்டாக வரும் குழாய் நீருக்காக
அடுத்தவர் முடியை இழுத்து சண்டை போடும் அம்மா
அடுப்பங்கரையில் அமைதியாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்!
முகத்தில் தாடியுடனும், விழிகளில் விரக்தியுடனும்
வேலை கிடைக்கவில்லை என ஊர் சுற்றிக்கொண்டிருந்த
அண்ணன்: கையில் சுண்டல் பொட்டலங்களுடனும்,
முறுக்குப் பாத்திரத்துடனும்: கேள்வி முடிச்சுகளுடன்
நோக்கினேன் விழிகளில் ஒளிச்சுடர் தெரிய
சிரித்துக் கொண்டே சொன்னேன் சுயதொழில் செய்யப் போகிறேன்!
எங்கோ ஒலிக்கும் நாதஸ்வரத்தைக் கேட்டு
பெருமூச்சு விடும் முதிர் கன்னி அக்காவை தேடிப் பார்த்தேன் காணவில்லை
அம்மாவைக் கேட்டேன் அக்கா எங்கே?
அவள் மாமியார் வீட்டில் இருக்கிறாள்
என்னுள் அதிர்ச்சி வரதட்சனை
கொடுக்க முடியாமல் என இழுத்தேன்வரதட்சனையா?
அப்படி என்றால் என்ன?என ஆச்சர்யமாகக் கேட்டாள் என் அம்மா!
கல்லூரிக்குக் கிளம்பி வீதியில் இறங்கி நடந்தேன்
பட்டாசுத் தொழிற்சாலைக்குச் செல்லும் பிஞ்சுக் குழந்தைகள்
பாடப் புத்தகத்தோடு தெருவில் நடந்து கொண்டிருந்தன!
என் மதம் தான் உயர்ந்தது என சண்டைப் போட்டுக்
கொள்ளும் முனீஸ்வரனும், ஜானும், அப்துல்லாவும்

தோள்மேல் கைப்போட்டுக் கொண்டு "அன்பே"
உயர்ந்தது எனப் போதனை செய்துக் கொண்டிருந்தனர்.
பேருந்து நிலையம் சென்றேன்! படியில் தொங்கிக் கொண்டிருக்கும்
இளைஞர்களைக் காணவில்லை, அடுத்த நிறுத்தத்தில் தோழி ஏறினாள்
அரசியல் வாதியின் பேச்சைக் கேட்டு
எத்தனை ஆண்டுகள் தான் மக்கள் ஏமாறப் போகிறார்களோ!
என் தோழி என்னை முறைத்துப் பார்த்தாள்!
எந்த உலகத்தில் நீ இருக்கிறாய்? இன்று
அரசியல் இருக்கிறது ஆனால் அரசியல்வாதிகள் இல்லை!
என்றோ "மக்களாட்சி" மண்ணில் மலர்ந்து விட்டது என்றாள்!
கல்லூரி வந்தது உள்ளே நுழைந்தேன்
ஒரு வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம்
கூறிக் கொண்டிருந்தார் அனைத்து மக்களும்: தீவிரவாதத்தில் இறங்க
இளைஞர் பலரும் தங்களது இரத்தத் துளிகளை
மண்ணில் சிந்துவதை விடுத்து ஒன்று சேர்ந்து
உழைப்பு என்னும் வேர்வை முத்துக்களைச் சிந்தியதால்
இன்று உலக நாடுகளில் இந்தியா முதன்மை நாடாக
அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்! என்ன இந்தியா முதன்மை நாடா?
என்னுள் எழுந்த மகிழ்ச்சி வெள்ளத்தை
அடக்க முடியாமல் தாய் மண்ணை முத்தமிட்டேன்
மண்ணில் விழுந்து புரண்டேன்! கட்டிலிலிருந்து
கீழே விழுந்தேன் சுயநினைவிற்கு வந்தவளாய் அடிப்பட்ட இடத்தைத்
தடவிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தேன்
அது என் வீடு, என் இதயம் சற்று நழுவியது
அய்யகோ! இது அத்தனையும் என் கனவில் மட்டுமே!

வி.பார்வதி
இளம் பயோகெமிஸ்டிரி (நிறை)
த. ஞா. ம. கலைக்கல்லூரி

அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்காக நமது கல்லூரியின் இளைய ஜேசிஸ் இயக்கம் கவிதைப் போட்டி நடத்ியது. அதில் முதல் தகுதியைப் பெற்ற இக்கவிதை உங்கள் பார்வைக்காக.





வாருங்கள்! வாங்குங்கள்! பயன்பெறுங்கள்!

மங்கையரின் அழகுக்கு அழகூட்டவும்,
ஆடவரின் பெருமிதத்திற்கும் ஏற்ற வகையில்
லேட்டஸ்ட் டிசைன்களில் அனைத்து ரக நகைகளும்
குறைந்த விலையில் நிறைந்த தரத்துடன் அனைவரும்
வாங்கி பயன் பெற மயிலாடுதுறையில்
நம்பிக்கையான ஸ்தாபனமாக திகழ்ந்து வரும்

ஸைராசி நிறுவனம்




ph. 222635, 222809

அழகுக்கு அழகு சேர்ப்போம்!

வாழ்க்கைக்கு வளம் சேர்ப்போம்!

# முகவரி




"பெரியவர்களிடமும், மாணவர்களிடமும் வரலாற்றை உங்களுக்கு பிடிக்குமா?" என்று கேட்டால், பெரும்பாலும் 75% பேர்களிடமிருந்து "பிடிக்காது" என்ற பதில் வரும். ஏனென்றால், வரலாற்றில் பல ஆண்டுகளும், மாதங்களும் நாள்களும் வருகின்றன. எந்த நாளில் இவர் பிறந்தார்? எந்த ஆண்டில் அந்தப் போர் மூண்டது? எனப் பல கேள்விகள் கேட்பதால் அனைவருக்கும் வரலாறு பாகற்காய் போல் கசக்கிறது. வரலாறு இல்லையென்றால் இந்தியா எவ்வாறு சுதந்திரம் பெற்றது? எனவும், உலகப்போர் எவ்வாறு மூண்டது? எனவும் நமக்குத் தெரியாது. எனவே வரலாற்றை ஒவ்வொருவரும் கட்டாயமாக தெரிந்திருக்க வேண்டும். "எனக்கு வரலாறு தெரியவில்லையே, என்னப் புத்தகம் வாங்கிப் படிக்கலாம் என்று கேட்கிறீர்களா?" வரலாற்றைச் சொல்லித்தா உங்களுக்கு இந்த வெப் தளம் உதவுகிறது. இந்த தளத்தில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் ஆண்டினைக் கொடுத்தால் போதும் அந்தத் தேதியில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும் இந்த வெப்தளம் காட்டும்.

**http://www.historychannel.com/thisday**

<u>**பொன்மொழி**</u>

நீங்கள் மேடை பேச்சாளர்களின் பேச்சை உன்னிப்பாகக் கேட்கிறீர்கள் என்றால் உங்களுக்கு ஒன்று புலப்படும். இவர்கள் பேசும்போது பல பழமொழிகளை, சிறு கதைகளை மேற்கோள்களாக உபயோகிப்பார்கள். "ஷேக்ஸ்பியர் அப்படிச் சொன்னார், திருவள்ளுவர் இப்படிச் சொன்னார்." என்று அவர்கள் சொன்ன பொன்மொழிகளை நம் காதுகளில் போட்டு வைப்பார்கள்.

பொன்மொழிகளுக்கு என்று பல புத்தகங்கள் வந்து விட்டன. பொன் மொழிகளுக்கு வெப்தளம் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்குமா? இருக்காது. எனவே பொன்மொழிக்காகவே ஓர் தனி வெப்தளம் உருவாக்கியுள்ளார்கள். இந்தத் தலைப்பில் பொன்மொழிகளைப் பல பிரிவுகளாகத் தொகுத்துள்ளனர். எடுத்துக்காட்டாக Advice, Anger என்று பற்பல பிரிவுகள் உள்ளன. அந்தப் பிரிவின் பெயரைக் கிளிக் செய்தால் அதைப்பற்றியப் பொன்மொழிகள் வழங்கப்படும்.

**http://www.fn.net/n-degoodquotes.html**

<u>**தடயவியல்**</u> **: (Forensic)**

கொலையாளி கொலை செய்துவிட்டு ஓடி விடுவான். போலீசும் அவனைப் பிடித்துவிடும். ஆனால் பிடிபட்ட கொலையாளி தான் குற்றவாளி. என்று கண்டுபிடிக்க தடயவியல் அறிவியல் (forensic Science) உதவுகிறது. உண்மையில் நடைபெற்ற ஓர் எடுத்துக்காட்டை கூறுகிறேன். ஒருவன் தன் பெற்றோரைக் கொன்று ஒரு இடத்தில் புதைத்துவிட்டுப் போலீசில் "தன் பெற்றோரைக் காணவில்லை" என புகார் கொடுத்தான். போலீசுக்கு இவன் தான் கொன்றிருக்க வேண்டும் என்ற சந்தேகம். எனவே தடயவியல் வல்லுநர்களை அழைத்தார்கள் அவர்கள் அவன் வீட்டையும், காரையும் சோதனை செய்த போது அவன் மட்கார்டில் (Mud Guard) இருந்து சில விதைகள் தென்பட்டன. அந்த விதைகள் மிகவும் அரிதானவை. அந்த ஊரைத் தள்ளி உள்ள காட்டில் மட்டும் தான் இந்த விதைகள் உள்ள மரங்கள் அதிகமாக இருக்கும். காவலர் அவனிடம் "ஏன் அந்தக் காட்டிற்குச் சென்றாய்?" என்று கேட்ட போது அவனிடமிருந்து சரியான பதில் வரவில்லை. பின்பு காவலர்களே அந்தக் காட்டிற்குச் சென்று பார்த்தபோது, இரு உடல்கள் தென்பட்டன. இருஉடல்களும் அவன் பெற்றோருடையதுதான்! என்று கண்டுபிடித்து அவனைக் "கொலையாளி" என்று உறுதிபடுத்தினர். எனவே தடயவியல் அறிவியல் காவலர்களுக்கு மிகவும் உதவக்கூடியது. தடயவியல் பற்றி விளக்கம் தருகிறது. இந்தத் தளம்

**http://www.aol.com/murrk/index.htm**

<u>**வானிலை**</u> **:**

"நாம் இன்று வெளியில் செல்லலாம்" என்று தீர்மானித்திருப்போம். ஆனால் அன்று மழை வந்து நமது புரோகிராமைக் கெடுக்கும். "இன்று மழை வரும்" என்று எண்ணினால் அன்று மழை வராது.

வாடிக்கையாளர்களின் அன்பும், ஆதரவுடன்
பத்தாம் ஆண்டை நிறைவு செய்கிறது உங்கள்

# கிப்ட் கார்னர்

அழகிய பரிசுப் பொருட்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள், அனைத்து வகையான வாழ்த்து அட்டைகளின் சங்கமம் உங்கள்

கிப்ட் கார்னர்.



5H, நாராயணபிள்ளை சந்து,
மயிலாடுதுறை.

☎ : 226625





எனவே இயற்கையை எவராலும் புரிந்து கொள்ள முடியாது. ஓரளவுக்கு இயற்கையை புரிந்து கொண்டவர்கள் தான், வானிலைத் துறையினர். அவர்கள் விண்ணிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் இயற்கையை ஓரளவுக்கு புரிந்து வைத்திருக்கிறார்கள். நாமும் அந்தப் புகைப்படங்களை இதுவரைத் தொலைக்காட்சியில் மட்டும் தான் பார்த்து கொண்டிருந்தோம். தொலைக்காட்சியில் மட்டும் தான்பார்க்க முடியுமா? வெப்தளத்திலும் பார்க்க முடியும். இந்தத் தளத்தில் வானிலை பற்றி தெரிந்து கொள்ளலாம். இது அமெரிக்க தளம் என்பதால் அமெரிக்க மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள், எனினும் மற்ற நாடுகளை இவர்கள் ஓரங்கட்ட வில்லை. இத்தளத்தில் உலகின் பெரிய நகரங்களின் வானிலை வெப்ப மண்டலம் நிலைக்கான தகவல்கள் மேப் என்று பல பகுதிகள் உள்ளன. நம் தமிழ்நாட்டில் சென்னை மட்டுமே இந்த தளத்தில் உள்ளது.

**http://www.weather.com/homepage.htm**

## நியூக்கிளியர் குண்டு :

இன்று நியூக்கிளியர் குண்டு தயாரிப்பதில் சைனா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன. இப்போது இந்தியா மற்றும் பாகிஸ்தானும் இந்தக் குட்டையில் சேர்ந்துள்ளது. நியூக்கிளியர் குண்டு வெடித்தால் ஏராளமான வெப்பம் ஆபத்தான கதிர்கள் வெளிவரும். இதனால் கோடான கோடி மக்கள் தங்கள் உயிர் இழப்பர். செடி, கொடிகள் அழிந்து மீண்டும் தழைத்து வளர வழியில்லாமல் போகும். அடிப்பட்ட கொடிய நியூகிளியர் குண்டு பற்றிய தளமே இது. Dr.Alan Philips என்ற Radiotheropist உருவாக்கிய இந்த வெப்தளத்தில் நியூக்கிளியர் குண்டு எப்படி வெடிக்கிறது. மேலும் ஒரு மெகா டன் எடையுள்ள குண்டு வானில் வெடித்தால் எப்படி இருக்கும்? என்பதை மூவி கிளிப்புகளாகக் கொடுத்துள்ளார்கள். இந்த மூவி கிளிப்புகளைப் பார்த்த பிறகாவது மனிதர்கள் நியூக்கிளியர் குண்டு செய்வதைக் கைவிட்டால் நன்றாக இருக்கும்.

**http://www.geocities.com/area51/vault/5862nuclear.html**

## டி.என்.ஏ. : (DNA)

டி.என்.ஏ. என்றால் அனைவருக்கும் தெரியும். நமது தோல், கண்பார்வை, அறிவு போன்றவை எப்படி இருக்க வேண்டும்? என்ற பல தகவல்களைத் தன்னுள் இது அடக்கி வைத்துள்ளது. அந்த டிஎண்ஏவில் கம்யூட்டரை உருவாக்கினால் என்ன? என்று ஆய்வாளர்கள் எண்ணினர். அதற்கான ஆய்வுகள் நடைபெறுகின்றன.

# Cat's Eye

## READY MADES

26, நாராயணபிள்ளைத் தெரு,
மயிலாடுதுறை.



Cat's Eye ஷர்ட்டுகள்
காட்டன் ஷர்ட்டுகள்
Cut ஷர்ட்டுகள்
T. ஷர்ட்டுகள்.
Casual T. ஷர்ட்டுகள்.

பேண்ட்
காட்டன் பேண்ட்
ஜீன்ஸ்
கார்கோ ஜீன்ஸ்

பெர்மடாஸ் மற்றும் நைட்டீஸ்

வாங்க வாங்க இனிமை! அதிலும் புதுமை!!

அன்புடன் அழைக்கின்றோம்

**கேட்ஸ் ஐ** ரெடிமேட்ஸ்

மயிலாடுதுறை.

*T.Shirts from Rs. 65/-*




இன்றைய சூப்பர் கம்ப்யூட்டர் ஆயிரம் MIPS வேகத்தில் செயல்படுகிறது. ஆனால் ஒரு DNA @க்கு ஒரு instructions னைச் செயல்படுத்த ஆயிரம் செகண்ட் தேவை. இது 001 MIPs வேகத்தில் செயல்படுகிறது. இவ்வளவு வேகம் குறைந்த DNA வினால் என்ன பயன் இருக்கிறது என கேட்கிறீர்களா?

ஒரு JOULE வேலைத் திறனுக்குச் சூப்பர் கம்ப்யூட்டர் இயக்கங்களைச் (operations) செய்யும் ஆனால் டி.என்.ஏ. கம்ப்யூட்டர் ஒரு JOULE க்கு $2 \times 10^{19}$ ஆபரேஷன்களைச் செய்யும். மேலும் இப்போது இருக்கும் ஸ்டோரேஜ் மீடியாவை ஒரு பிட்டைப் பதிவு செய்ய 1012 cubic என இடம் தேவை. ஆனால் டிஎன்ஏவில் ஒரு பிட்டைப் பதிவு செய்ய ஒரு cubic mm தேவை. இந்தக் கம்ப்யூட்டரைப் பற்றி மேலும் தகவல்கள் தேவை என்றால் இந்த வெப் தளத்தைப் பார்க்கலாம்.

**http://www.clear/light.com/-morph/dna.htm.**

**துணுக்**

கிரேக்க தத்துவஞானி சாக்ரடீஸ்க்கு எழுதப் படிக்கத் தெரியாது.

மனிதனின் உடலில் வியர்க்காதப் பகுதி உதடு மட்டும் தான்

ச.லெட்சுமிஸ்ரீ
இளம் நுண்ணுயிரியல் (முதல்)




# மயூரா

## குவாலிட்டி

## ஜெராக்ஸ்

நெ.3, பழனிச்சாமி அங்காடி,
(சுந்தரம் தியேட்டர் எதிரில்)
மயிலாடுதுறை
☎ :224403

- MULTI COLOUR XEROX
- LASER PRINTING
- OFFSET PRINTING
- PROJECT WORK
- DTP

☎ STD, ISD, PCO, FAX
LAMINATION,
SPIRAL BINDING

ஏ வி சி

# நடந்தாலும் பறக்கலாம்...

நீங்கள் அனைவரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் "இந்த உலகம் இப்படி இருந்தால் என்ன? அப்படி இருந்தால் என்ன?" என்று எண்ணி இருப்பீர்கள். அப்படிப்பட்ட ஒரு உலகிற்குத் தான் நாங்கள் உங்களை அழைத்துச் செல்லப்போகிறோம். ஏன்? அது செவ்வாயாகக் கூட இருக்கலாம் . . .தயாராகுங்கள். . .




நாம் இப்போது சென்று கொண்டிருக்கும் இந்த வாகனத்தின் பெயர் தான் மேக்னட்டிக் பிளேன்.இந்த வாகனம் இயக்க பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்கள் எல்லாம் தேவையே இல்லை. கண்ணாடி பந்தைப் போலக் காட்சியளிக்கும் இதற்குள் அமர்ந்து கொண்டால் நம்மை யாருக்குமே தெரியாது. நாம் இதற்குள் அமர்ந்தவாறே அனைத்தையும் ரசிக்கலாம்.

நாம் இப்போது பூமியை விட்டு எத்தனையோ ஒளி ஆண்டுகள் கடந்து வந்திருக்கின்றோம். இங்கே வாழும் மக்கள் முற்றிலும் விநோதமானவர்கள். அதோ. . . . நாம் நினைத்த வேற்று கிரகம். நம் பூமியைப் போலவே இருக்கும். இந்தக் கிரகத்தில் ஒரே ஒரு குறை ஜனத்தொகை தான்.





இ ந் ர்

நீங்க பூமியில இந்தியா எங்கே? தமிழ்நாடு எங்கே? என்பதை வேடிக்கை பார்ப்பதை நிறுத்திட்டு அப்படியே உங்க பக்கத்துல பாருங்க. என்ன . . . எல்லோருக்கும் விழி இப்படி பிதுங்குது! இவங்க இத்தனை பேரும் எப்படி பறக்கறாங்கன்னு ஆச்சர்யமா இருக்கா? அது வேற ஒன்னுமில்லை அவங்க கால்ல போட்டிருக்கிற செருப்பு தான் அதுக்குக் காரணம். அதுக்கு பேர்தான் பிளையிங் செப்பல். இதைப் போட்டுகிட்டு நாம் எந்த இடத்துக்குப் போகனும்னு விரும்பினாலும் அங்க போய்டலாம். அதுவும் குறிப்பிட்ட விநாடியிலேயே போகலாம்.நாம விரும்பினா பொறுமையாகக் கூட போகலாம். இப்பவே பூமியில வாழ்ற மக்களில் பாதி பேர் ஆகாயத்துல தான் பறந்துகிட்டிருக்காங்கறது வேறு விசயம். பிளையிங் செப்பல் அணியிறது மூலமா இவங்க ஒரு கோளிலிருந்து இன்னொரு கோளுக்குக் கூட போறாங்க. அவங்க கையில கட்டியிருக்கிற கடிகாரத்தைப் பார்த்தீங்கன்னா அது வெறும் நேரத்தைமட்டும் காட்டாது.

நாம் அன்றாடம் பயன்படுத்துகிற கம்ப்யூட்டர், டீவி, ரேடியோ, இண்டர்நெட், இமெயில் போன்ற வசதிகளுக்காகவும் இந்தக் கடிகாரத்தைப் பயன்படுத்துகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் பணம்னா என்னன்னே தெரியாது.

அதனால் இவர்களுக்குச் சுயநலமும் வருவதில்லை. இன்னொரு முக்கியமான செய்தி என்னன்னா இவர்களுக்கிடையில் அரசியல் கிடையாது, அரசியல் தலைவர்கள் இல்லை, நாட்டுக்கொரு அதிபர் இல்லை. ஆனால் இதற்குப் பதிலாக கோள் ஒன்றுக்கு ஒரு அதிபர் உண்டு. அவரும் சராசரி மக்களோடு மக்களாய்தான் வாழ்வார். முக்கியமான விசயம் இது தான் இவர்களும் பள்ளி, கல்லூரி எல்லாம் சென்று கல்வி பயில்வார்கள். ஆனால், கல்வியை வியபாரமாக்கமாட்டார்கள்.

அதோ . . . எதிரே தெரிவது தான் நிலா. நிலாவுக்கு நாம் இப்போது செல்ல வேண்டாம். இறுதியில் செல்வாம். இப்போது சற்றே நிலாவை விட்டு விலகிச் செல்வோம். நாம் பார்த்த இந்த கோள் ஏழைகள், பணக்காரர்கள் என்ற பேதம் கிடையாது. அனைவரும் சமமானவர்கள். சாதி, சமயம் கிடையாது.

அதோ வியாழன் கிரகம் தெரிகிறது பாருங்கள். இங்கே வாழும் மக்கள் கூட இப்படிப்பட்டவர்கள் தான். ஓர் விநோதமான விசயம் என்னவென்றால் இவர்களும் கூட தமிழில் தான் பேசுகிறார்கள். ஆனால், அதற்கு இவர்கள் வைத்துள்ள பெயர் என்ன தெரியுமா? "லேங்குவா." ஆம். . . அதுதான் அவர்கள் பேசுகிறார்கள்.

YOU HAVE THE BUSINESS
BUY

Tally

GET
COMPLETE BUSINESS SOLUTION

ACCOUNT IS HEART OF THE BUSINESS

**DIAL UP**

☎ : 04364 - 241012 Cell : 98423 - 64899

WE MAKE COMPUTER PROFESSIONALS

# NATIONAL COMPUTING TECHNOLOGY

Software Training & Development Centre

Qualification Is The Power Of Livelihood

Venue :

28/5, A.R. Najeem complex, Town Extension,
Mayiladuthurai - 609 001.

☎ : 04364 - 241012 Cell : 98423 - 64899

Specially Concentrating B.Com., B.B.A. B.C.A.,
M.Com., M.B.A. M.C.A.





இவர்களோடு வாழத் தனியான மனம் வேண்டும். இவர்களில் யாருக்கும் ஈகோ எல்லாம் கிடையாது. "நான், நீ" என்ற சுயநலம் இல்லை. இலட்சியத்தை வைத்துக் கொண்டு அதற்காக போராடித் தன் வாழ்வின் நாட்களை விணடித்துக் கொண்டு இறுதியில் அதைச் சாதித்து கின்னஸ் பட்டியலில் இடம் பிடித்துவிட்டு இறந்துபோக கூடிய மனிதர்கள் இவர்கள் இல்லை.

வாழும் வரை வாழ்வை அனுபவிப்பவர்கள். எல்லோரும் எல்லோருக்கும் உதவுவார்கள். இவர்கள் எல்லாம் பளபளவென ஜொலிக்கிறார்களே ஏன் என்று ஆச்சர்யபடுகிறீர்களா? அவர்கள் உஜாலாவக்கெல்லாம் மாறவில்லை. அவர்கள் லேசர்லைட் உடையை அணிந்திருக்கிறார்கள்.

இவர்கள் பூமியிலிருந்து பார்க்கும் போது விண்மீனாய்த் தெரிவார்கள். தரையில் இருப்பதைவிட ஆகாயத்தில் தான் அதிகமாக இருப்பார்கள். இதனால் ஆகாயத்தில் டிராபிக் ஜாம் கூட ஆவதுண்டு. இங்கெல்லாம் ஒரே ஜொலிஜொலிப்பாய் இருக்கிறதைப் பார்த்தீர்களா? அது என்ன என்று ஆச்சர்யபடாதீர்கள். அது லேசர் பில்டிங். இந்த லேசர் பில்டிங் உள்ளே செல்ல நாம் உபயோகிக்கிற கம்ப்யூட்டர் கார்டைப் போல ஒருவித கார்டு கட்டாயம் தேவை. இதனைக் கடந்து உள்ளே காற்றுகூட செல்ல முடியாது.

இவர்களுக்கு மழை, புயல் பற்றியெல்லாம் அக்கறை இல்லை. ஆனால் ஒன்றாக இருப்பதில்லை. பாதி ஆகாயத்தில், பாதி பூமியில் என்று ஒருவரை ஒருவர் சந்திக்கிற வாய்ப்புகள் குறைவு. இவர்கள் எப்போது ஒன்றாக இருப்பார்கள் என்றால், MEN'S DAY அன்று தான். நாமெல்லாம் NEW YEAR கொண்டாடுவது போல இவர்கள் MENS DAY கொண்டாடுகிறார்கள். அன்று இவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அன்று எது எப்படி போனாலும் இவர்கள் அனைவரும் ஆகாயத்தில் கூடி விடுவார்கள். ஒரு குடும்பத்திற்கு இன்னொரு குடும்பம் பரிசுகள் வழங்கி மகிழ்ந்திருப்பார்கள்.

இவர்கள் மிகவும் விநோதமானவர்கள். எப்படின்னு கேட்கிறீங்களா? நாம் உயிர் வாழ எத்தனையோ தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது இல்லையா? நெல்லை பயிர் செய்து அரிசியாக்கி பக்குவப்படுத்தி உணவாக்க எத்தனையோ வேலைகள். ஆனால், இவர்கள் உடலில் குளோரோ:பில் இருப்பதால் சூரிய ஒளியில் சிறிது நேரம் நின்றாலே இவர்களுக்கு உணவு கிடைத்துவிடுகிறது. உணவுக்கென்று இவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டாம்.

நம் வாழ்க்கையில் பாதி நேரங்களை உணவுக்காகச் செலவிடுகிறோம். ஆனால் இவர்கள் பத்து மணித்துளிகள்

தொடர்ச்சி -118

மயிலாடுதுறையில் கம்ப்யூட்டர் கல்விக்கு 12 ஆண்டுக்கு
மேல் அனுபவம் மிகுந்த சிறந்த ஒரு நிறுவனம்

"பேஸ் கம்ப்யூட்டர்ஸ்"

மேலும்,

Memory Technique,
Examination Skills,
Personality Development Courses also Conducted now.


**For Further Details Contact**

**BASE COMPUTERS**

**Base Institute Of Management,**
**103, Mahadhana St.,**
**Mayiladuthurai-609001.**
**ph: 222355**
**cell:98424-24855**







# வேண்டாம்....

நீ தினமும் என்னைப் பார்த்துக
கையசைக்கும்போது
என் மனதில் தோன்றாதது

பக்கத்து வீட்டு பையனிடம்
லட்டர் கொடுத்து அனுப்பும் போது
என் உள்ளத்தில் எழாதது

இருப்பினும்!
இப்பொழுது என் மனதில்
ஏதோ அரும்பு விட ஆரம்பித்துள்ளது

ஆனால்!
பென்சன் வாங்கும் தந்தை
புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள தாய்
டாக்டர் கனவோடு இருக்கும் தங்கை
ஆகியோரை நினைக்கும் பொழுது
இந்த அரும்பு மலர வேண்டாமே!

மு.தமிழ்நேசன்
இளம் இயற்பியல் (இரண்டு)

115ம் பக்கத்தின் தொடர்ச்சி

செலவிட்டாலே போதும்.நாம் அன்றாட வாழ்வில் அதிக பட்சமாக இரண்டு விழுக்காடு மூளையைத் தான் உபயோகிக்கிறோம். ஆனால் இவர்களோ ஐம்பது விழுக்காடு வரை உபயோகிக்கிறார்கள். சூரிய கிரகணம் என்றால் மட்டும் இவர்கள் யாரும் வெளியில் வருவதில்லை. அன்று முழுவதும் இவர்கள் ஓய்வு எடுக்க வேண்டியது தான்.

நாங்கள் இப்போது சொல்வதைக் கேட்டால் உங்கள் விழி பிதுங்கலாம். இவர்கள் பிறந்த போது குழந்தையாக இருப்பார்கள் என்றாலும் இவர்களுக்குப் பிறந்த போதே ஏறக்குறைய எல்லா திறமைகளும் வந்து விடுகின்றன. பிறக்கும்போது பச்சை நிறமாக இருக்கும் இவர்கள் இளமை காலங்களில் நீலமாக மாறி விடுகிறார்கள்.

இவர்களுக்கு முதுமை என்பதே வருவதில்லை இவர்கள் உடல் சிவப்பாக மாறுவது தான் முதுமைக்கான அடையாளம் என்றாலும் இவர்கள் மன ரீதியாக சோர்வடைவதில்லை. நரம்புகள் தளர்வதில்லை. கண் பார்வை மங்குவதில்லை முடி நரைப்பதில்லை தோலும் சுருங்குவதில்லை. இவர்கள் அதே சுறுசுறுப்போடு தான் சாகும் வரையில் இருப்பார்கள். இவர்களின் ஆயுட்காலம் 150 ஆண்டுகள். ஒரு தம்பதியினருக்கு ஒரு குழந்தை பிறக்கத்தான் வாய்ப்புள்ளது. எனவே இவர்கள் மக்கள் தொகை பெருக்கத்தை நினைத்துக் கவலைப்படுவதும் இல்லை. இவர்களுக்குள் மாமியார், மருமகள் சண்டை கிடையாது. எந்த நோக்திலும் இவர்கள் மனத்தளவில் பாதிப்படைவதில்லை. நாம் இப்போது வந்த வழியிலேயே திரும்பிச் சென்று கொண்டிருக்கிறோம். வாருங்கள். . . அப்படியே நிலாவுக்கு மேலே செல்லலாம். இங்கே அழகாகப் பூத்துக் குலுங்கும் சோலைகள் எல்லாம் உள்ளன. இதனைப் பார்த்து ரசித்தால் பொழுது போவதே தெரியாது. மனத்துக்கு அமைதி வேண்டுமென்றாலோ ஓய்வு வேண்டுமென்றாலோ மக்கள் இங்கே வந்து விடுவார்கள்.

எல்லாம் முடித்து கடைசியாக நம்முடைய சோலார் சிஸ்டத்துக்கே மீண்டும் வந்து விட்டோம். நம்மால் அங்கேயே வாழ முடியாது. அதற்கு நம் உடல் பக்குவப்படவில்லை.

இதோ பூமியும். . . . . இந்தியாவும் . . . . . தமிழ்நாடும். . . . . மயிலாடுதுறையும். . . .அடடே.. நம்ம ஏ.வி.சி யும் வந்து விட்டன. உங்களை நாங்கள் திருப்தி படுத்தியிருந்தால் நாங்கள் வெற்றிப் பெற்றுவிட்டோம் என்று அர்த்தம். நீங்கள் இந்தப் பயணத்தில் திருப்தி அடைய வில்லை என்றால் நீங்கள் தோல்வி அடைந்து விட்டீர்கள் என்றே அர்த்தம்.











உணவு விடுதியை ஒரு தவமாகவே எண்ணித் தொழிலில் நேர்மையையும் உண்மையையும் விருந்தோம்பலில் கனிவையும் கலந்து, தங்கள் ஒவ்வொருவரையும் எங்களின் சிறப்பு விருந்தினராக ஏற்று உபசரிப்பதே எங்களின் குறிக்கோள் ஆகும்.

என்றும் அன்புடன்...

**பெரி. இராசேந்திரன்**
**கற்பகம் செட்டிநாடு உணவகம்,**
60-61 மகாதானத் தெரு.
மயிலாடுதுறை - 609 001.
தொலைப்பேசி : 224654



# வாசகர் தூது

ஆசிரியர் குழுவிற்கு,

ஒவ்வொரு பணியிலும் உங்களின் ஈடுபாடு கண்டு நெகிழ்வுற்றேன். கரும்பலகையில் உங்களால் எழுதப்படும் வாசகங்கள் நன்றாக உள்ளன. அதில் இன்றைய செய்திகள் என்ற தலைப்பில் நாட்டில் நிகழும் முக்கியச் செய்திகள் சிலவற்றை எழுதினால் செய்தித்தாள் படிக்காதவர்களுக்குப் பயனுள்ளதாய் இருக்குமே. இதை முயற்சி செய்தால் என்ன?

"தூதிலும் தூது அத்தூது இளந்தூது
தூதிற்கு எல்லாம் தலை"

இரா.நளினி
இளம் நுண்ணுயிரியல் (இடை)

முற்றிலும் வித்தியாசமான ஒரு இளந்தூதுவை செப்டம்பர் இதழில் பார்த்தேன். குறிப்பாக அதில் இளன். . . ஆசி. . . வாசி. . . மிகவும் அருமை. தங்கள் இதழைப் பற்றிய சுய விளம்பரம் மிகவும் வித்தியாசமாக இருந்தது. இதழில் சில தவறுகள் இருப்பினும் பல நிறைகளைக் கொண்டு குறைகள் மறைந்துவிட்டன.

கணே.விஜயன்
இளம் கணினி (இடை)

சிக்னல் என்ற தலைப்பில் நீங்கள் கொடுத்த சினிமாக்காரர்களின் சந்திப்பைப் படித்தோம். மகிழ்ச்சியாக இருந்தது. இருந்தாலும் இதுபோன்ற விசயங்களைத் தவிர்க்கலாமே!

என்.ஜா கிர்ஷா
இளம் வணிகம் (இடை)

கல்லூரிக்குள் மாணவர்களின் எதிர்பார்ப்பைக் கல்லூரி நிர்வாகம் அறிவதற்கு வாய்ப்பாக இருந்தது உங்கள் சர்வே.

பி.சந்திரலேகா
இளம் மின்னணுவியல் (முதல்)



சத்தான..
சுத்தமான..
சுவையான...




RAMANA'S
சத்து மாவு இடியாப்ப மாவு கேழ்வரகு மாவு
பஜ்ஜி மாவு

மற்றும்
சர்வோ
சத்துமாவு தானியங்கள் வறுத்தது

வீடு மற்றும் கட்டிடம் கட்டத் தேவையான கட்டுமான பொருட்கள்
அனைத்திற்கும் என்றும் உங்கள் நம்பிக்கையுடன்

**அமீன் ஸ்டீல் & சிமெண்ட்ஸ் ☎ : 223080**

**அமீன் ஹார்டுவேர்ஸ் ☎ : 225372**

**பிஸ்மி கிளாஸ் & பிளைவுட்ஸ் ☎ : 225167**

மற்றும் அனைத்து தொழில் கருவிகளுக்கும்
**டூல்ஸ் கார்னர்** மயிலாடுதுறை.

---

**Dealings :**

சிமெண்ட், கம்பி, கிளாஸ், பிளைவுட்ஸ், சன்மைக்கா,
இரும்பு, பித்தளை, அலுமினியம் பிட்டிங்ஸ் மற்றும்
அனைத்து வகை டூல்ஸ்.